[25th April 1962

[*Note*:—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT.

THE MADRAS SUGAR FACTORIES CONTROL (AMENDMENT) BILL, 1962.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation under Article 207 of the Constitution for the introduction in and consideration by the Legislative Assembly of the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962.

I am also to inform the House that the President of India has given his sanction under Article 304 of the Constitution for the introduction in the Madras Legislative Assembly of the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962.

III.—GOVERNMENT BILL.

THE MADRAS SUGAR FACTORIES CONTROL (AMENDMENT) BILL, 1962.

THE HON. SRI P. KAKKAN : Sir, I beg leave to introduce the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962.

MR. SPEAKER : The question is—

" that leave be granted for the introduction of the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI P. KAKKAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : I call upon hon. Members to move their amendments. They must move the amendments and the amendments must be seconded. After all the amendments are moved and seconded, the original motion and the amendments will be put before the House for discussion.

SRI A. KUNJAN NADAR : Sir, I move the following amendment :—

Add at the end the following :—

" But regret to note that no mention is made of the injustice and discrimination shown to the service personnel especially the teachers and the non-gazetted officers transferred from the erstwhile Travancore-Cochin State and the pitiable plight of the Aided-school teachers of Kanyakumari district."

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : I gave notice of an amendment with twelve subdivisions. But only eleven subdivisions have been put in the copy of the amendments circulated to the Members. All of them may be treated as separate amendments.

Sir, I move—

Add at the end the following :—

"but regret to note—

(i) that the Address has failed to refer to the need to increase the scales of dearness allowance of all categories of employees in the service of the State Government, local bodies, and educational institutions, proportionate to the rise in the cost of living;

(ii) the tone of complacence pervading the Address about progress and development, and the failure to refer to the deep distress and suffering of the people due to ever-rising prices, new tax-burden and growing unemployment;

(iii) that the Governor has not been properly advised by his Government regarding the need to take steps to re-name the State of Madras as Tamilnad;

(iv) that no reference has been made to the existence of crisis in the supply of water to urban areas, particularly in the cities of Madras, Tiruchirappalli, Salem and Coimbatore;

(v) that no mention has been made to the code of discipline worked out by the all-party conference in connection with the election campaign and the manner in which the ruling party failed to observe the same;

(vi) the failure to refer to the need to start at least one more University for the State;

(vii) the silence regarding the enforcement of master-plans for the proper utilization of the waters of the Krishna and Godavari and the west-flowing rivers;

(viii) that the steps taken for developing Tamil as the medium of instruction and official language have been halting and inadequate;

(ix) the failure to urge upon the Union Government to upgrade the city of Madras as 'A' for the purpose of compensatory allowances of the Government employees;

(x) that no mention has been made about the crisis the industry is facing in the State, due to inadequate allotment of coal and coke leading to blackmarket and high prices; and

(xi) the failure of the Address to refer to the crisis which the handloom industry is facing in the State, due to high prices of yarn and accumulation of stocks."

The amendments were duly seconded.

SRI M. KALYANASUNDARAM : With regard to my twelfth amendment, it relates to unfair and illegal methods adopted by certain political parties, especially by the ruling party and the need to appoint a committee of enquiry . . .

MR. SPEAKER : That has been disallowed.

[25th April 1962

SRI M. KALYANASUNDARAM : Only if I have raised a particular point in any particular constituency, then it would be against the representation of the People Act. Anyhow you have given your ruling. Generally these things are discussed at your Chamber first.

MR. SPEAKER : It is too vague.

SRI M. KALYANASUNDARAM : If I was given time, I would have met you at your Chamber.

MR. SPEAKER : The hon. Member can meet me there.

SRI SAW. GANESAN : என் பெயரிலுள்ள திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்—

Add at the end the following :—

" But regret to note that the Governor has not referred to anything in his Address regarding the steps proposed to be taken by the Government to redress the grievances of the agriculturists affected due to the failure of monsoon and also the steps proposed to be taken to check the abnormal rise in prices."

SRI T. L. SASIVARNA THEVAR : I second the amendment.

SRI K. A. MATHIALAGAN : என் திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்—

Add at the end the following :—

" But regret to note that the Governor has not referred to anything in his address regarding the steps proposed by the Government to raise the dearness allowance to non-gazetted officers on a par with that of Central Government erployees as per the recommendation of the Pay Commission."

SRI M. KARUNANITHI : நான் இதை வழிமொழிகின்றேன்.

SRI V. S. S. MANI : I move the amendment, Sir—

Add at the end the following :—

" But regret to note that the Governor has not mentioned about the hill plantations such as coffee and cardamom which earn Foreign Exchange and the measures taken to safeguard the hill planters' interest and the facilities and amenities such as roads, electricity and tranport given to the planters who live in hill villages."

The amendment was duly seconded.

SRI V. S. S. MANI : Sir, I move—

Add at the end the following :—

" But regret to note that the Governor has not mentioned about the plight of the handloom weavers and the steps taken by the Government to improve the handloom industry."

The amendment was duly seconded.

25th April 1962]

SRI S. MADHAVAN : என் திருத்தத்தை முன்மொழிகின்றேன்—

Add at the end the following :—

" But regret to note—

(1) that no mention has been made in the Governor's Address about the remission of land revenue in those areas of this State where the monsoon had failed miserably.

(2) that in the matter of collecting Government loans the attitude and policy of the Government has been to extract as much as possible from the peasants even in those places where the crops had failed."

The amendment was duly seconded.

SRI V. KRISHNAMOORTHY : என் பெயரில் உள்ள திருத்தத்தை நான் propose செய்கிறேன்—

Add at the end the following :—

" But regret to note that there is no dention in the Governor's Address regarding—

(1) the provision of grant and loan to the Corporation of Madras for bringing water from the Cauvery to solve the problem of water scarcity in the City of Madras permanently.

(2) the policy of the Government regarding profit sharing by labourers in industries.

(3) the non-utilisation of the sugarcane produced in this State although this State is not self-sufficient in sugar and the non-fixation of price for sugarcane.

(4) the corresponding increase of dearness allowance to the State Government employees in parity to the Central Government employees.

(5) the establishment of an Arts College, Medical College and a Polytechnic in South Arcot district to enable all students to get the benefit of higher education."

The amendment was duly seconded.

SRI RAMA ARANGANNAL : என் திருத்தத்தை முன் மொழிகின்றேன்—

Add at the end the following :—

" But regret to note that there is no mention in the Governor's Address regarding—

(1) the provision of accommodation and dwelling facilities to the hut-dwellers of Madras city;

(2) the proposals of the Government to solve the drinking water problem facing the Madras city."

The amendment was duly seconded.

[25th April 1962

SRI A. P. DHARMALINGAM : என் திருத்தத்தை முன் மொழிகின்றேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding the recent flood havoc in Tiruchirappalli and Thanjavur districts."

The amendment was duly seconded.

SRI A. P. DHARMALINGAM : என் திருத்தத்தை முன் மொழிகின்றேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding—

(1) granting of lands free of cost to the landless poor;

(2) the proposals to prevent eviction of tenants from lands and to afford them protection calculated to help their advancement and well being."

The amendment was duly seconded.

SRI M. KARUNANITHI : என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding the nationalization of bus transport."

The amendment was duly seconded.

SRI R. NARAYANAN : என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding the provision of drinking water supply to the villages in the backward areas."

The amendment was duly seconded.

SRI N. RAJANGAM : என் திருத்தத்தை முன் மொழி கிறேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding Harijan development, slum clearance, rehabilitation of slum-dwellers and condition of backward communities."

The amendment was duly seconded.

25th April 1962]

SRI S. MUTHULINGAM : என் திருத்தத்தை முன் மொழி கின்றேன்—

Add at the end the following :—

" But regret to note that there is no mention in the Governor's Address regarding—

(1) the non-availability of fertilizers in adequate quantities for agriculturists and the steps to meet the situation;

(2) the Harijan development and the problems of slum-dwellers."

The amendment was duly seconded.

SRI A. THANGAVELU : என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்—

Add at the end the following :—

" But regret to note that there is no mention in the Governor's Address regarding—

(1) the provision of water facilities to the agriculturists of the drought areas through channels leading from places where water is available; and

(2) the conditions of workers under the Electricity Board while stating that electrification of 1,500 villages are being undertaken every year."

The amendment was duly seconded.

SRI M. S. MANI : என் திருத்தத்தை முன் மொழிகின்றேன்.

Add at the end the following :—

" But regret to note that there is no mention in the Governor's Address regarding—

(1) the ways of advancement of labour class;

(2) the failure to express sympathy to the people who were affected by the Cauvery floods "

The amendment was duly seconded.

PULAVAR K. GOVINDAN : என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்—

Add at the end the following :—

" But regret to note that there is no mention in the Governor's Address regarding the development of handloom industry which is a big industry next to agriculture and the amelioration of the conditions of handloom weavers."

The amendment was duly seconded.

[25th April 1962

SRI M. R. KRISHNAMURTHY : என் திருத்தத்தை முன் மொழிகின்றேன்.

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding—

(1) the steps taken to prevent flood damages occurring every year;

(2) the relief work taken up in Cauvery-Coleroon breaches last year; and

(3) the provision for irrigational and drinking water facilities to drought areas."

The amendment was duly seconded.

SRI A. THIAGARAJAN : என் திருத்தத்தை முன் மொழி கின்றேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding the irrigational schemes to backward areas."

The amendment was duly seconded.

SRI M. SHUNMUGAM : என் திருத்தத்தை முன் மொழி கிறேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding the action taken so far by the Government to further the cause of the co-operative movement which alone can bring about fraternity and equality in the country and the schemes that the Government propose to take up in future."

The amendment was duly seconded.

SRI V. R. NEDUNCHEZHIYAN : என் திருத்தத்தை முன் மொழிகின்றேன்—

Add at the end the following :—

"But regret to note that there is no mention in the Governor's Address regarding the ways and means to reduce and check the soaring prices which have affected the poor, working and middle classes to an unbearable extent."

The amendment was duly seconded.

* SRI M. KARUNANITHI : **On a point of personal explanation, Sir . . .**

தலைவர் அவர்களே, நேற்றையதினம் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை திருமதி அனந்தநாயகி அம்மையார் முன்மொழிந்து தொடர்ந்து பேசும்போது, நான் குறுக்கிட்டு, ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினேன். ஒருவர் முன்

25th April 1962] [Sri M. Karunanithi]

மொழிந்த பிறகு, மற்றொருவர் வழிமொழிந்த பிறகே முன் மொழிந்தவர் பேசுவது வழக்கம், அது முறையல்லவா என்று நான் கேட்டதற்குக் காரணம், 1959, 1960, 1961 ஆண்டுகளில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு, இன்னொருவர் வழிமொழிந்த பிறகே முன்மொழிந்தவர் பேசுவார். உதாரணமாக 1959-ல் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் . . . (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன் : இது பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனா?) அதை விளக்க விரும்பினேன். அவர்கள் பிரேரேபித்த பிறகு, அது வழிமொழியப்பட்ட பிறகே அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதனைத் தான் நான் குறிப்பிட்டேன். அதில் சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பை ஒத்துக்கொண்டேன். ஆனாலும் நான் சொன்னதும் சரியானதுதான், அந்த முறை பின்பற்றப்படுவது சரிதான் என்று சொல்ல விரும்புகிறேன். அது சம்பந்தமான ஒரு குறிப்பில், ஒரு பத்திரிகை "கருணாநிதிக்கும், அனந்தநாயகிக்கும் லடாய்" என்று பிரசுரித்திருக்கிறது. அது சம்பந்தமாக நான் ஒரு உரிமைப் பிரச்னையும் கொடுத்திருக்கிறேன். அந்தப் பத்திரிகை பெயரை இப்பொழுது நான் சொல்ல விரும்பவில்லை. இதைப் பர்ஸனல் எக்ஸ்ப்ளேனேஷனாகச் சொல்லி முடிக்கிறேன்.

Sri T. M. NALLASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லி அதற்கு நன்றி செலுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றையதினம் இந்த உரையின்மீது பேசுகையில் தேர்தலைப்பற்றி குறிப்பிடும்போது ஆளும் கட்சி தவறுகள் செய்து விட்டதாக எதிர் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கவர்னர் பெருமான் அவர்கள் கடந்த தேர்தல் சுமுகமாகவும் நல்ல முறையிலும் நடந்ததாக பெருமைப்பட்டுக்கொண்டும் அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட அரசாங்க அலுவலகர்களும் நல்ல முறையில் வேலை செய்ததாகவும் அதனால் தேர்தல் நல்ல முறையில் அமைதியாக நடைபெற்றதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அதைக் குறித்து அவர் பெருமிதம் அடைந்தும் இருக்கிறார். இப்படி நடைபெற்ற தேர்தலைப் பற்றி குறை சொல்லக்கூடிய அளவில் பல அங்கத்தினர்கள் கூறியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் தேர்தல் நடைமுறையில் சுமுகமாகத்தான் நடைபெற்றது என்று சொல்லுவேன். கவர்னர் பெருமான் அவர்கள் பெருமைப்படக்கூடிய அளவில்தான் தேர்தல் நடைபெற்றது என்று சொல்வேன். ஆனால் எதிர் கட்சி அங்கத்தினர்கள் சொல்லியதைப் பார்த்தால் ஆளுகிற கட்சி பல தவறுகளைச் செய்ததாகச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு. ஆனால் ஒவ்வொன்றையும் படிப்படியாகப் பார்த்தால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் அவர்கள் செய்த பிரசாரங்களையும் காரியங்களையும் பார்த்தால் இந்தத் தவறுகளுக்கு வழியாக இருந்திருக்கும் என்று தெரியவரும். இதற்கு பல உதாரணங்களை என்னால் எடுத்துக் காட்ட முடியும். அரசியலில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் குறை சொல்வது என்பது மிகவும் அவசியமானதாகப்போய் விட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[Sri T. M. Nallasamy] [25th April 1962

அடுத்தாற்போல் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் அமலாக்குவதைப்பற்றி கவர்னர் அவர்கள் திருப்திப்பட்டுக்கொண்டிருக்கிருர். அதைப்பற்றியும் குறிப்பாக எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் குறை சொன்னுர்கள். இன்றைக்கு திட்டங்களை நிறைவேற்றும் காலத்தில் வரையறுக்கப்பட்ட தொகைக்கு செலவு செய்யப்படுமா என்று பார்த்தால்தான் உண்மை தெரியும். திட்ட அளவில் செலவு செய்வது என்பது அவ்வளவு சாதாரணமான காரியம் அல்ல. அதை நிறைவேற்றுவதற்கு நிர்வாகத் துறையில் எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன. அதே மாதிரி முதல் ஆண்டு காலத்தில் எந்த அளவு நாம் லட்சியத்தை அடைய வேண்டும் என்று எண்ணினேமோ அதைவிட அதிகமாகவே அடைந்திருக்கிறேம். இன்னும் நான்கு ஆண்டு காலங்களில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் அறுபது கோடி ரூபாய்வரை செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய வாய்ப்பும் இருப்பதாகக் கூறுகிருர்கள். அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் நாம் போட்டிருக்கக்கூடிய அளவைக் காட்டிலும் அதிகமாகவே செலவு செய்யக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரியவருகிறது. அந்த நம்பிக்கை நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி செய்வது தான் மிகவும் அவசியம். அதற்கு என்று புதிய வருவாய் துறையைக் கண்டுபிடித்தாகவேண்டும். அது ரொம்பவும் அவசியம். இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் நம்முடைய வாய்ப்புகளுடனும் சுமார் 291 கோடி ரூபாய்வரையில் செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு இப்பொழுது போட்டிருக்கக்கூடிய அளவுடன் நிற்கவேண்டியதில்லை. நமக்குக் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும் வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய வருவாயை தேடிக்கொண்டு போட்டிருக்கக்கூடிய திட்டத்தை நிறைவேற்றவேண்டியது அவசியமாக இருக்கிறது. நமது தமிழகத்தில் போட்டிருக்கக்கூடிய திட்டங்களைவிட இன்னும் எவ்வளவோ அதிகப்படியான திட்டங்களைப் போட்டு அவைகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்குவேண்டிய வருவாயை தேடிக்கொள்வதும் அவசியமாக இருக்கிறது. அப்படித் தேடிக்கொண்டு அந்தத் திட்டங்களையெல்லாம் எடுத்து நிறைவேற்றினுல் அதனுல் பாதகம் இல்லை. அப்படி நிறைவேற்றுவதற்கு எவ்வளவோ திட்டங்கள் இருக்கின்றன. சற்று நேரத்திற்கு முன்பு கூட கனம் கருணுநிதி அவர்கள் ஒரு கேள்வி கேட்கக்கூடிய நேரத்தில் குடகனுறு திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார். அதை மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்து நிறைவேற்றவேண்டும் என்றும் சொன்னுர். அதற்குவேண்டிய வருவாயைத் தேடிக்கொண்டு நிறைவேற்றுவதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. அதற்குவேண்டிய வருவாயைக் கண்டுபிடித்தாக வேண்டும். இதைப்போலவே என்னுடைய தொகுதியில் பல திட்டங்கள் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் நொய்யல் திட்டம், மருதையாறு திட்டம், கொல்லிமலை திட்டம், குடகனுறு திட்டம் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு

25th April 1962] [Sri T. M. Nallasamy]

கிறேன். அவைகளுக்குவேண்டிய வருவாய் இல்லாவிட்டாலும் அதைத் தேடிக்கொண்டு நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அதற்குவேண்டிய முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றினால் அங்குள்ள வரண்ட பிரதேசங்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். குறிப்பாக இந்த ஆண்டுபோல் போதிய மழை அந்தப் பிரதேசங்களுக்கு இல்லாத காலங்களில் இந்த திட்டங்களினால் எவ்வளவோ சௌகர்யம் ஏற்படும். இப்படி திருச்சி மாவட்டத்தில் இருப்பது போன்று பல மாவட்டங்களிலும் இருக்கலாம். அவைகளையெல்லாம் எடுத்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி எடுத்து நிறைவேற்றும் வரண்ட பிரதேசங்களுக்கு பாசன வசதி கிடைக்க ஏதுவாக இருக்கும். அதற்குவேண்டிய போதிய வருவாயையும் கண்டுபிடித்தாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று திருச்சி மாவட்டத்தில் கனரகக் கொதிகலன் தொழிற்சாலை அமைக்க இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி தொழில் துறையில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு தொழிற்சாலையும் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லி இருக்கிறார். அவைகள் இன்னும் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களில் ஆரம்பமாகும் என்று தோன்றுகிறது. திட்டம் போட்ட அளவில் அவற்றை எட்டிப்பிடிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. அது மிகவும் கஷ்டமான காரியம்தான். அதை நிறைவேற்றக்கூடிய அளவிற்கு வருவாயைத் தேடிக்கொள்வதற்குவேண்டிய கவனம் செலுத்தவேண்டு ம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களுக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்ய சர்க்கார் ஓரளவு உதவி செய்து கொண்டுவருகிறார்கள். மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் இதுவரைக்கும் 571 மெக வாட்ஸ் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து விநியோகம் செய்துவருகிறார்கள். கூடுமான வரைக்கும் கிராமங்களில் எல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டு, லட்சத்து முப்பத்து ஏழாயிரம் பம்பு செட்டுகள்வரை கொடுத்து அவைகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த முறையில் வேண்டிய அளவில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுதான் வருகிறது. இதைத் தவிர கிராமங்களுக்கு இன்னும் அதிகப்படியான உதவி தேவையாக இருக்கிறது. அதற்கு வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது வேண்டிய உரம் விநியோகம் சம்பந்தமாக இன்னும் அதிகப்படியான உதவி செய்ய வேண்டிய முயற்சியும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். உர கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். இருந்தாலும் அதிகப்படியான உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் இன்னும் அதிகப்படியான உரத்தை சப்ளை செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமாக இருக்கிறது.

ஏனென்றால் அதில் இன்னும் பற்றுக்குறை இருந்துகொண்டிருக்கிறது. இதில் மேலும் கவனம் செலுத்தவேண்டும். வெளி நாடுகளில் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள் என்றால் ஜப்பானிய முறைப்படி இன்னும் மற்ற முறைப்படி அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள் என்றால் அங்கு அதிகமாக உரம் சப்ளை செய்வது தான் காரணமாக இருக்கிறது. அதைப் போலவே இங்கும் அதிகப்படியாக உரம் சப்ளை செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் கவர்னர் அவர்களுடைய உரையில் பல தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். திருச்சியில் கனரகக் கொதிகலன் தொழிற்சாலை ஆரம்பிப்பதைப் பற்றியும் அதிகப்படியாக நெய்வேலியில் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவைகளையெல்லாம் பார்த்தால் உண்மையிலேயே நாடு சிறப்பாக ஆவதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதன் மூலம் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்கு வேண்டிய வழிகள் இருக்கின்றன. ஆகவே திட்டங்கள் எல்லாம் படிப்படியாக அமுலாக்கப்படவேண்டும். அதன் மூலம் நாட்டில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் சிறப்பாக இருக்க வேண்டும். அத்துடன் விலை வாசிகள் குறைவதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏராளமான திட்டங்களை எடுத்து நிறைவேற்றும் போது விலை வாசிகள் உயருவதற்குக் காரணம் உண்டு. இருந்த போதிலும் அவற்றைக் குறைப்பதாக நடவடிக்கை எடுத்து கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைப் படிக்கும் போது நாடு சுபிட்சமாக ஆவதற்கு வேண்டிய வழி இருக்கிறது. கிராம முன்னேற்றத்திற்கான வழி இருக்கிறது. அவைகளை நிறைவேற்ற வேண்டியதிட்டங்களைப் போட்டு நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். போடுகின்ற திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு வேண்டிய வருவாயையும் தேடிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாடு சிறப்பாக இருக்கும். அப்படி அந்த வகையில் வருவாயை தேடிக்கொள்வதற்கு எந்த விதமான ஆட்சேபனையும் இருக்காது என்று சொல்லிக்கொண்டு கவர்னர் அவர்களுடைய உரைக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. மகாலிங்கம் அவர்கள் பேசலாம். ஒவ்வொரு அங்கத்தினரும் பத்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri N. MAHALINGAM : அநேக விஷயங்கள் பேசவேண்டும்.

25th April 1962]

MR. SPEAKER : அதிகமான அங்கத்தினர்கள் பேசவேண்டு மென்று கேட்டிருப்பதால், மேற்கண்டபடி அலுவல் ஆலோசனைக் குழுவில் முடிவு செய்திருக்கிறோம். 9-00 a.m.

* **SRI N. MAHALINGAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தேர்தல்கள் மிகவும் சுமுகமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றன என்பதைப் பற்றி கவர்னர் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். இந்தத் தடவை நடந்த தேர்தலின் நடைமுறை புதியதொன்றாகும். நமது ராஜ்யத்தில் சென்ற ஜில்லா போர்டுக்கு நடந்த தேர்தலிலே இந்த முறை அமுலாக்கப்பட்டு, அது நல்ல முறை என்று தெரிந்த காரணத்தினாலே, குறி போடக்கூடிய இந்த முறையானது அகில இந்தியாவிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நமது ராஜ்யத்திலே நாம் கண்டுபிடித்த ஒரு புதிய முறை, இந்தியா பூரா வும் ஒப்புக் கொள்ளப்பட்டது நாம் மகிழ்ச்சி அடைய சந்தர்ப்பம் கொடுக்கிறது. இந்த முறையினால் வோட்டுச் சீட்டுகள் வோட்டுச் சாவடியை விட்டு வெளியே வருவதற்கு வழி கிடையாது. அதன் காரணமாக, தேர்தல்கள் நேர்மையாக நடப்பதற்கு அதிக மான சந்தர்ப்பத்தை அளிக்கின்றது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பெரிய தேர்தலை நமது ராஜ்யத்திலும், தேசம் பூராவி லும் மிகச் சிறப்பாக நடத்தி முடித்த நிர்வாக அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் நாம் நம்முடைய நன்றியை, அவர்கள் சிறப் பாகக் கடமையைச் செய்தார்கள் என்பதற்காகத் தெரிவிப்பது மிகவும் அவசியம் ஆகிறது.

தேர்தலிலே மத்தியப் பார்லிமெண்டிலும், ராஜ்ய சட்டசபை களிலும் காங்கிரஸ் பெருவாரியான மக்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கின்றது. காங்கிரஸ் கட்சியானது தேர்தலிலே கலந்து கொண்டபோது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றி கரமாக நடத்தப் போகின்றோம் என்ற குறிக்கோளுடனே தேர்த லுக்கு நின்றது. அந்தக் குறிக்கோள் சரியான குறிக்கோள் என்று கருதி மக்கள் அதற்குப் பெருவாரியான ஆதரவை அளித் திருக்கின்றார்கள் என்று நாம் இன்று பார்க்கின்றோம். ஆக, அடுத்த ஐந்தாண்டுகளில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்ற பொறுப்பு காங்கிரஸ் கட்சிக்கு அமைந்திருக்கிறது. அந்தப் பொறுப்பை நடத்த வேண்டுமென்று சொன்னால், நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலும், 291 கோடி ரூபாய்கள் கொண்ட திட்டத்தை நாம் அமுல் நடத்தியாக வேண்டும். இது தவிர, இந்தியாவிலே பொது வாக 11,600 கோடி ரூபாய் கொண்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டும். அதில் 1,200 கோடி ரூபாய் நிர்வாகச் செலவுகள் போக, 10,400 கோடி ரூபாய் மூல தனச் செலவுக்குச் செலவிடப்படுகிறது. சில கட்சிகள், நிர்வாகச்

[Sri N. Mahalingam] [25th April 1962

செலவு அதிகமாக இந்தத் திட்டத்திலே இருக்கிறது என்று குறிப்பிடுகிருர்கள். கணக்கிட்டுப் பார்த்தால், நிர்வாகச் செலவு மொத்தத்திலே 10·4 சத விகிதத்திற்கு மேலே போவதில்லே. எந்தப் பெரிய தொழில் ஸ்தாபனங்களேயோ அல்லது பெரிய நிறுவனங்களேயோ கவனிக்கிறவர்கள், 10·4 சத விகிதம் நிர்வாகச் செலவு என்பது அதிகமானது அல்ல என்பதை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

மற்ற அரசியல் கட்சிகளிலிருந்து தேர்தலில் கலந்து கொண்டவர்கள் தேர்தல் காலத்திலே பல தேர்தல் விஞ்ஞாபனங்களே அளித்திருக்கின்ருர்கள். அந்த விஞ்ஞாபனங்களேத் தயாரிக்கும்போது எதிர் காலத்திலே அதை எவ்வாறு நடைமுறையில் செய்ய முடியும் என்பதற்கும் வழி காட்டவேண்டியது அரசியல் கட்சிகளுடைய கடமை. 'நாங்கள் ஏதோ எதிர்க் கட்சிகளாக இருக்கின்ருேம், அதன் காரணமாக எங்களால் தேர்தல் காலத்தில் சொன்னதைச் செய்ய முடியவில்லே' என்று சுலபமாகப் பதில் சொல்லக்கூடிய முறையை இன்று பார்க்கின்ருேம். தேர்தல் நேரத்தில் சொன்ன காரியங்களே எதிர்க் கட்சியிலே இருந்தால் செய்ய முடியாது என்பது அல்ல. நியாயமான முறையில் வழிகள் இருந்தது என்ருல், அந்த வழிகள் நடைமுறையில் செய்யக்கூடியன என்ருல், நிச்சயமாக அரசாங்கத்தை நடத்தும் கட்சி அதை ஏற்றுச் செய்யும் என்பதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. அப்படிப் பார்க்கும்போது, சென்ற தேர்தலிலே, இன்றையதினம் பிரதான எதிர்க்கட்சியாக இந்தச் சபையிலே விளங்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகமானது என்ன தேர்தல் அறிக்கை கொடுத்தார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்கள் முக்கியமாகச் சொன்னது—ஏழு கோடி ரூபாய் வரியை எதிர்க்கப் போகிருேம் என்று விளம்பரம் செய்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தை 291 கோடி ரூபாய் செலவில் வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்ருல் 35 கோடி ரூபாய் வரவேண்டும்—வருஷம் ஏழு கோடி ரூபாய் வீதம். ஏழு கோடி ரூபாய் வரியை எதிர்க்கின்ருேம் என்று நேற்று சொன்னபோது, 'ஏழை எளிய பாட்டாளிகள்மீது வரி போடுவதை எதிர்க்கின்ருேம், மற்றவர்கள்மீது வரி போடலாம்', என்று குறிப்பிட்டார்கள். தேர்தல் நேரத்தில் அப்படிச் சொல்லவில்லே. தேர்தல் நேரத்தில் 'இம்மாதிரி ஏழு கோடி ரூபாய் வரியை எதிர்க்கின்ருேம்' என்றுதான் குறிப்பிட்டார்கள்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்களுக்கு மூன்று ஏக்கர் நஞ்சை, ஐந்து ஏக்கர் புஞ்சை கொடுக்கப்போகிருேம் என்று குறிப்பிட்டார்கள். ஹரிஜன மக்கள் நம்முடைய மாநிலத்தில் 56 லட்சம் பேர்கள் இருக்கிருர்கள். குடும்பத்தில் ஐந்து பேர் என்று வைத்துக்கொண்டால், 11 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. மூன்று ஏக்கர் நஞ்சை என்ருல் 33 லட்சம் ஏக்கர் நஞ்சை பூமிகள் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும். நமது ராஜ்யத்திலே உள்ள நஞ்சை பூமிகள் 35 லட்சம் ஏக்கர். இதை எவ்வாறு பூரணமாக எடுத்து ஹரிஜனங்களுக்கு விநியோகம் செய்வது?

25th April 1962] [Sri N. Mahalingam]

அவ்வாறு விநியோகம் செய்வதானல், அதை விலைக்கு வாங்குவது என்றல், எவ்வளவு பணம் ஆகுமென்று அவர்கள் சிந்தித்துப் பார்த்தனரா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஏக்கருக்கு 2,500 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலுங்கூட, 750 கோடி ரூபாய் வேண்டும். இந்த 750 கோடி ரூபாய் எங்கிருந்து வரும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

பல தொழில்களை தேசியமயமாக்கவேண்டுமென்று பேசியிருக்கின்றார்கள். இப்படி நம்முடைய நாட்டிலே தேசிய மயமாக்குவதால் என்ன புதிய நன்மைகள் விளைகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சென்னை ராஜ்யத்தில் சதுர மைலுக்கு 640 மக்கள் வசிக்கக்கூடிய நிலையில் இங்கு தொழில் வாய்ப்பு அதிகமாக ஏற்பட்டு, ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இருக்கக்கூடிய தொழில்களைத் திடீர் என்று தேசிய மயமாக்குவதால் புதிய வேலை வாய்ப்புகள் எவ்வளவு அதிகம் ஆகும் என்பதைப்பற்றி புள்ளி விவரங்கள் சொல்ல அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

போக்குவரத்தைச் தேசிய மயமாக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. இன்றைக்குச் சுமார் 7,000 பஸ்களும், 9,000 லாரிகளும் இந்த ராஜ்யத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. பஸ்களை எடுத்துக்கொண்டால், பஸ் ஒன்று 50,000 ரூபாய் விலை ஆகிறது. நஷ்ட ஈட்டைக் கணக்கிடாமல், புதிய பஸ்களைப் போடுவதற்கு மட்டும் 35 கோடி ரூபாய் வேண்டும். இடங்கள், கட்டிடங்கள், ஒர்க்ஷாப் இவைகளுக்குப் பத்து, பதினைந்து கோடி ரூபாய் வேண்டும். ஆக, பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கவேண்டுமென்றல், அதற்கு 50 கோடி ரூபாய் பணம் வேண்டும்.

அடுத்தபடியாக சினிமாக் கொட்டகைகளைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த ராஜ்யத்தில் இரண்டாயிரம் சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் இரண்டு லட்ச ரூபாய் பெறும் என்றல், அதற்கு 40 கோடி ரூபாய் வேண்டும். இந்தப் பணம் எல்லாம் எங்கிருந்து கிடைத்து, சென்னை ராஜ்யத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்வதற்கு வழிவகை செய்யப் போகிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் காலத்திலே சொல்லப்பட்ட மற்றொரு விஷயம்—ரூபாய்க்கு மூன்று பக்காப் படி அரிசி அளிக்கப் போகின்றோம் என்று சொன்னார்கள். ஒரு ரூபாய்க்கு மூன்று பக்காப்படி அரிசி அளிப்பதென்றல், ஐம்பத்திரண்டு பட்டணம் படி கொண்ட மூட்டை ஒன்றின் விலை ரூ. 17-1/3 ஆகிறது. இந்த விலைக்கு அரிசி விற்றது என்றல், விவசாயிக்கு இந்த விலை கட்டுப்படி ஆகுமா? இன்றையதினம் ஆணுக்கு இரண்டு ரூபாய், பெண்ணுக்கு 1-1/4 ரூபாய் கூலி விகிதம் பரவலாக நிலவக் கூடிய இந்த நிலையில், இந்தக் கூலி விகிதத்தைக் கொடுத்து, ரூ. 17-1/3-க்கு

[Sri N. Mahalingam] [25th April 1962

மூட்டை அரிசி விற்க விவசாயியால் முடியுமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்தார்களா என்று கேட்கின்றேன். 17 ரூபாய்க்கு அரிசி விற்றால், ஏழை விவசாயக்கூலிகளின் நிலை என்ன ஆகும் என்பதைப்பற்றி அவர்கள் சிந்தித்தார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். இவ்வாறு பல பிரச்னைகள் தேர்தல் நேரத்தில் சொல்லப்பட்டன. அவையெல்லாம் நியாயமான முறையில் நடக்கவேண்டும் என்று சொல்வதால் மட்டும் பிரயோஜனம் இல்லை. நடக்க வேண்டிய வழிகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டினால், நிச்சயமாக மக்களுக்கு நன்மை கொடுக்கக்கூடியதாக இருந்தால் அதை அமைச்சர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதுதான் ஜனநாயகப் பண்பாகும்.

தேர்தல் நேரத்தில் பல தவறுகள் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். உண்மையிலேயே தவறான பிரசாரம் யார் செய்தார்கள் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். '4,104 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்' என்று விளம்பரங்கள் போடப்பட்டன. 'கூலி உயர்வு கேட்டதற்குச் சுட்டார்கள்' என்று சொல்லி ஒரு அபலைப் பெண்ணின் படம் போட்டு விளம்பரங்கள் செய்யப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் எத்தனை கூலி உயர்வுப் போராட்டங்கள் நடத்தினார்கள்? அவர்களுடைய தொழிற் சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களும் எந்த இடத்திலே சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதைப்பற்றி நான் அறிய ஆவலுடையவனாக இருக்கிறேன். தூத்துக்குடி போன்ற இடங்களில் அங்கு பிராம்மண அக்கிரகாரத்தில் கொள்ளையடித்தபோது அங்கு சுட வேண்டிய அவசியமும் சந்தர்ப்பமும் ஏற்பட்டன. ஆக, அம்மாதிரி கொள்ளையடித்த சந்தர்ப்பங்களிலே போலீசார் சுட்டார்கள். இந்தியாவின் பல்வேறு பாகங்களில் மாகாணப் பிரிவின்போது ஏற்பட்ட கலவரங்கள், 1947-லே தேசப் பிரிவினையின் காரணமாக ஏற்பட்ட வகுப்புக் கலவரங்கள் இதையெல்லாம் மொத்தமாக எடுத்துப் பார்த்தாலும் 4,104 வருமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களுக்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்பதைப்பற்றி நான் இங்கு அறிய ஆவலுடையவனாக இருக்கிறேன்.

இது மட்டுமல்ல. சட்ட சபைத் தேர்தலின்போது பஞ்சாயத்திலே 'ஆடுகளுக்கும் கோழிகளுக்கும் வரி போடப் போகிறார்கள்' என்று பரவலாகப் பிரசாரம் செய்யப்பட்டது. பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் சட்டசபைத் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? பஞ்சாயத்திலே புதிய வரிகள் போடுவதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரிகளைப் போட்டுக் கொள்வது பஞ்சாயத்துக்கள் செய்யவேண்டிய விஷயம். அதை எடுத்துச் சட்டசபை தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்து மக்கள் மத்தியில் ஒரு தவறான கருத்தை ஏற்படுத்த வேண்டியது இல்லையென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக விளங்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை

நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்குரிய வழியையும் இந்த அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டும். அதைவிட்டு நாங்கள் நாட்டை ஆளும் நிலையில் இல்லாத காரணத்தினால் அவற்றை நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்வது பொறுப்புள்ள காரியமாக இருக்காது.

அடுத்தபடியாக தேர்தல் காலத்தில் மற்றொரு அகில இந்திய கட்சியாக இருக்கக் கூடிய சுதந்திரா கட்சி சில வாக்குறுதிகளை அளித்திருக்கிறது. நிலவரியை எடுத்துவிடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நிலவரி இப்போது ஆண்டு ஒன்றுக்கு 6½ கோடி ரூபாய் கிடைக்கிறது. ஐந்தாண்டு காலத்தில் 33 கோடி ரூபாய் வரும். இந்த 33 கோடி ரூபாய் வருமானம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் நமக்குக் குறைந்தது என்று சொன்னால் அந்தப் பணத்தை ஈடுகட்ட புதிய வரியை போட யோசனை சொல்ல முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

தேசத்தில் தொழில்கள் செழிக்கவேண்டியதுதான். அதன் மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்பும் கூட வேண்டியது தான். அதனால் நம் ராஜ்யம் செழிப்படையும் என்பதில் ஐயமில்லை. பிற இடங்களில் சதுர மைலுக்கு 330 பேர்கள் இருக்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் 640 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் விவசாயத்தை நம்பியோ, ஏற்கனவே இருக்கக் கூடிய தொழில்களை நம்பியோ வாழ முடியாது. புதிய தொழில்கள் நிறைய ஏற்பட்டாகவேண்டும். அதற்கு நாம் திட்டமிட்டேயாக வேண்டும். திட்டமிட்டு பொருளாதார அடிப்படையில் முன்னேறுவது மிக அவசியமாக இருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளிலே நாம் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் பல இருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓர் ஆண்டு முடிந்துவிட்டது. பாக்கி நான்கு ஆண்டுகள் இருக்கின்றன. இந்தக் காலத்தில் 35 கோடி ரூபாயைப் பெறும் பொறுப்பு நிதி அமைச்சருக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆயினும் இதுபற்றி என்னுடைய யோசனைகள் சிலவற்றைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

இன்றையதினம் போக்குவரத்துத் துறையில்—மைலுக்கு 7½ பைசா விதிக்கலாம் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது புது நாணயம் அமுலுக்கு வந்துவிட்டதால் இந்த 7½ பைசாவுக்குப் பதிலாக 4 நயா பைசா என்று சொல்லி விகிதத்தை நிர்ணயிக்கலாம். இப்படி போக்குவரத்தைத் துறையில் புதிய வரி விதிப்புக்கு வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆந்திரா போன்ற ராஜ்யங்களில் 5 நயா பைசா என்று போட்டு 80 ரூபாய் ஒரு சீட்டுக்கு வாங்குகிறார்கள். ஆகவே நாம் 4 நயா பைசா விதம் போடலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம் நாட்டில் ஏற்படக்கூடிய தொழில் வளர்ச்சி காரணமாக நகரங்கள் பெருவாரியாக விருத்தி அடைந்து வருகின்றன. முனிஸிபாலிடி, மேஜர் பஞ்சாயத்துக்கள் ஆகிய

இடங்களில் குடியிருப்பு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதன் காரணமாக மனைக்கட்டுகளின் விலை எல்லாம் ஒரேயடியாக உயர்ந்துவிட்டன. விவசாயம் செய்யக் கூடிய பூமி, மேட்டுப் பாங்கான பூமி இவையெல்லாம் நகர எல்லைக்குள் இருந்துவிட்டால் இன்றைக்கு அதற்குள்ள விலை மிக அதிகமாகும். சென்னையில் க்ரவுண்டு எட்டாயிரத்திற்குமேல் இருக்கிறது. இப்படி விலை உயர்ந்திருப்பது எதிர்பார்க்காத லாபம் ஆகும். ஆகவே இப்படி மதிப்பு கூடியிருக்கும் இனத்தில் வரி விதிக்கக் கூடிய வாய்ப்புகள் நம் மாகாணத்தில் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். எப்படியாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டுமென்று சொன்னால் இந்த ஆண்டு 5 கோடி ரூபாய்க்காவது புது வரிகள் போட்டால் நான்கு ஆண்டுகளில் 20 கோடி கிடைக்கும். அடுத்த ஆண்டு 3 கோடி ரூபாய்க்காவது புது வரிகள் போட்டால் மூன்று ஆண்டுகளில் 9 கோடி கிடைக்கும். இப்படி எவ்வித வரியும் போடாமல் இருந்தால் எவ்வித காரியங்களையும் செய்யமுடியாத நிலைமை ஏற்படும் என்று சொல்லி கவர்னர் பெருமான் உரைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **Sri A. P. DHARMALINGAM**: தகுதிமிக்க சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்திற்குப் புதியவன் என்றாலும் அரசியலிலே ஜனநாயகம் வேண்டும், ஒழுங்கு வேண்டுமென்று கட்டுப்பாடாக நடத்தி வருகின்ற ஓர் இயக்கத்தின் தலைவரான அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின்கீழ் அரசியலைப் பதினைந்து ஆண்டு காலமாக முறையாகப் பயின்று வந்தவன். என்றாலும் "யானைக்கும் அடி சறுக்கும்" என்பார்களே, அதுபோல் ஏதாவது சிறு தவறு ஏற்பட்டால் அதைப் பொறுத்தருளவேண்டுமென்று தங்களைக் குறிப்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் சென்ற கூட்டத்தில் சட்டமன்றத் தலைவரைப் பாராட்டிப் பேசிய கூட்டத்தில் சட்டசபைக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவர்களும், மற்ற எல்லா அங்கத்தினர்களும் ஒருமிக்க பாராட்டிப் பேசியதற்குப் பிறகு கனம் அம்மையார் ஒருவர் இந்தச் சபையில் எங்களுக்குத் தக்க பாதுகாப்பு இல்லை, உங்கள் காலத்தில் அபயம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். உண்மையில் என் போன்றவர்கள் அந்த நேரத்தில் வேதனைப் படாமல் இருக்க முடியாது. இந்தச் சபையில் உள்ள அத்தனைபேரும் நன்றி தெரிவித்துப் பாராட்டிய பிறகு அவர்களுக்கு இழுக்குத் தேடுகின்ற வகையில் இந்தச் சபையில் பேசியபோது இந்தச் சபையின் கௌரவத்திற்கு மாத்திரம் பங்கம் அல்ல, சபைத் தலைவராகப் பணியாற்றிய மாபெரும் தலைவருக்கும் பங்கம் ஏற்படுமே என்று அஞ்சினேன்.

அடுத்து கவர்னர் அவர்களுடைய பேருரையில் அண்மையில் மே திங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஏதும் குறிப்பிடாமல் விட்டிருப்பது உண்மையில் வருந்தத்தக்க செய்தியாகும். முன்பு இந்த மன்றத்தில் உரை நிகழ்த்திய

25th April 1962] [Sri A. P. Dharmalingam]

மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் 1961-லே இங்கே—1960-லே என்று கருதுகிறேன்—தம்முடைய உரையில் சென்னை நகரத்தில் லால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக்கொண்டிருப்பதோடு அப்போது மக்களுக்கு உதவி செய்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தடவை கவர்னர் பெருமான் அதைக் குறிப்பிடாமல் விட்டிருப்பதற்குக் காரணம் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மகாநாடுகளின் மூலமாகவும், மற்றும் பல வகையிலும் செய்திருக்கக் கூடிய காரியங்களை உதவிகளைப் பற்றி குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்படுமே என்று கருதிய காரணத்தினால் தான் கவர்னர் பெருமான் அதைப்பற்றி தங்கள் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து தேர்தல் சுமுகமான முறையில் நடைபெற்றதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் தேர்தல் காலத்தில் நடந்தவைகளைப் பற்றி சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கட்சி துணைத்தலைவர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசும்போது நல்லிச்சேரி பற்றிச் சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்லும் வகையில் இங்கே பேசிய கனம் சுப்பிரமணியம் அவர்கள் நல்லிச்சேரியைப்பற்றிக் குறிப்பிட்டு "ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்றார்கள், இதுபோலவேதான் அவர்கள் குறிப்பிட்ட மற்றவைகளும் என்று நீங்கள் உணர்ந்து கொள்ளலாம் என்றார்கள். நான் தங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், நல்லிச்சேரியில் 16-ம் தேதி இரவு தேர்தல் பிரசாரத்திற்குச் சென்ற ராமமூர்த்தி தாக்கப்பட்டார்—கட்டி அடிக்கப்பட்டார். அப்படிச் செய்தவர்களைக் காவலர்கள் கைது செய்தார்கள் என்று குறிப்பிட்டார். தஞ்சையிலே தேர்தல் 17-ம் தேதி தேர்தலுக்கு முன் தினம் 16-ம் தேதி எவ்வித பொதுக்கூட்டமும் நடக்கக்கூடாது, எந்தக் கட்சிக்காரர்களும் நடத்தக் கூடாது. இது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் இந்தச் சம்பவம் 16-ம் தேதி நடந்த நிகழ்ச்சி. இதில் இருந்தே எல்லோரும் புரிந்து கொள்ளலாம், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று.

ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதுபற்றி கவர்னர் குறிப்பிட்டு மத்திய சர்க்கார் 191 கோடி ரூபாய் அளிக்கிறது என்று குறிப்பிட்டார். நான் அடிக்காமல் அடிக்கிறேன், நீ அழாமல் அழு என்று சொன்னதுபோல நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். அதை நிதி அமைச்சர் அவர்களே பின்னர் சொல்வார்கள் என்று சொல்லிவிட்டார். வரி போடக் கூடாது என்று சொன்னதற்குப் பிறகு இங்கு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் ஆட்டுக்குக்கூட வரி என்று இங்கே சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் ஆட்டு வரி ஒரு பெரிய பிரச்னையாகவே இருந்தது என் மாவட்டத்தில். ஆட்டுக்கு வரி உண்டு என்று சொல்வாரும், இல்லையென்று மறுப்பாரும், 20 ஆட்டுக்கு மேல் இருந்தால் தான் வரி என்று தண்டோரா போட்டாரும் உண்டு. வரி இனி போட முடியாத நிலைமையில் இப்போது வரிபற்றி பேசப்படுகிறது.

நமக்கு மத்திய சர்க்காரிடமிருந்து 191 கோடி ரூபாய் வருவதாகச் சொன்னாலும் அவை அத்தனையும் நம்மிடமிருந்து பெறப்படுகிறது. சிகரெட், பீடி, தீப்பெட்டி ஆகிய அனைத்தின் மீதும் வரக்கூடிய வரி உயர்த்தப்படுகிறது. ஆகவே நம் மக்கள் மீது மீண்டும் வரி போடாமல் அதிலேயே உரிய பங்கை நாம் பெறவேண்டும் என்று தங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன். இங்கே எல்லாத் திட்டங்களும் நிறைவேறிவிட்டது போன்றும் இனி எங்கே அணை கட்டுவது என்று புரியாது இருப்பது போலவும் அமைச்சர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசுகிறார்கள். நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அன்றைத் துறை விட்டுச் சாக்கடைக்கு அணை கட்டுவதா என்று அமைச்சர் ஒருவர் பேசியிருக்கிறார். இன்று பேசிய ஆளும் கட்சி அங்கத்தினர் ஒருவர் தன்னுடைய பகுதியிலே குடகனாறு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதைக் கூறினார்கள். என்னுடைய பகுதியிலே சிறுகனூர் அருகாமையிலே மழை காலங்களில் ஓடி வீணாகும் தண்ணீரை ஏரிகளில் தேக்கி வாய்க்கால் மூலம் கொண்டு வந்தால் தச்சங்குறிச்சி, குமுளூர், கன்னாகுடி, திருப்பட்டூர் ஏரிகளில் நிரப்பி நல்ல முறையில் பாசன வசதிக்கு வழி செய்யலாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அமைச்சர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கு பேசியவர்கள் அத்தனை பேரும், நம்முடைய தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய திட்டமாக இருப்பது மின்சாரத் திட்டம் என்று கூறி அது பற்றி மிக அதிகமாக எடுத்துப் பேசினார்கள். உண்மையிலேயே மின்சாரம் எந்த அடிப்படையிலே வழங்கப்படுகிறது என்பது என்னைப் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. கவர்னர் பெருமான் உரையிலே ஒவ்வொரு ஆண்டும், 'இந்த ஆண்டு 1,880 கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரித்திருக்கிறோம், இந்த ஆண்டு 1,500 கிராமங்களுக்கு விஸ்தரித்திருக்கிறோம், மூன்றாவது திட்ட முடிவிற்குள் எல்லாக் கிராமங்களும் மின்சாரம் பெற்று விடும்' என்று கூறியிருக்கிறார்கள். 15 ஆண்டு காலமாக நான் வாழும் பெருவளப்பூர் கரிய மாணிக்கம் பகுதியில் இருக்கும் கிராமங்களில் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை.

விவசாயிகளுக்காக 137,000 பம்பு செட்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே, ஆயிக்குடி, மேல் வங்காரம், கீழ் வங்காரம், தேவி மங்கலம், அக்கரைப்பட்டிபோன்ற கிராமங்களில் விவசாயத்துக்குத் தண்ணீர் இறைக்க மின் விசை கேட்டிருந்தார்கள். அவர்கள் தற்போது 'கவலை'யை வைத்துத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய கவலையைப் போக்கும் வகையில் மின்விசை கேட்கப் பெற்று கிடைக்கப் பெறாமல் அவர்கள் கவலையோடு இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தத் திட்டமானது ஏட்டிலே எழுதிக் காட்டுவதற்கு அழகாக இருக்கிறதே தவிர நடைமுறையிலே எந்த அளவிற்கு நடை பெறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

25th April 1962]• [Sri A. P. Dharmalingam]

கவர்னர் பெருமான் உரையிலே ஹரிஜன மக்களைப் பற்றியும், பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனைப் பற்றியும் ஏதும் குறிப்பிடப் படாமல் விடப்பட்டிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது.

ஆரம்பக் கல்வியைப் பற்றிக் கவர்னர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலே, ஒரு வருந்தத்தக்க செய்தியை நான் குறிப்பிட விரும்புகிறேன். 'இலவச மதிய உணவுத் திட்டத்தின் காரணமாக மிக அதிகமான அளவில் மாணவர்கள் வந்து பள்ளி யில் சேருகிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். கல்வி கற்க பிள்ளைகள் வராமல் ஏதோ ஒரு வேளை சோற்றுக்காகப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்கள் என்று கூறப்பட்டிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒரு நிலைமையாகும்.

அடுத்து, கவர்னர் அவர்கள் இந்த அமைச்சரவையைப் பற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய திறமைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அமைச்சர்களுடைய திறமை யைப்பற்றிக் குறைவாக மதிப்பிடுபவன் அல்ல நான். சிறப் பாகவும், குறிப்பாகவும் முதலமைச்சரவர்கள் அரசியல் ராஜதந் திரத்திலும், அறிவாற்றலிலும் மிக்கவர் என்பதைத் தெரிந்தவர்கள் நாங்கள். ஆயினும் திறமை மிக்க மந்திரிசபை என்று சொல்லி விட்டு, இது வரையில் இல்லாத முறையில் உள்ளாட்சித் துறை ஊராட்சித் துறை என்று இரண்டாகப் பிரித்து இரண்டுக்கும் வெவ்வேறு அமைச்சர் என்று இருப்பது எந்த வகையில் பாராட்டக்கூடியது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இது போன்று பல இலாகாக்கள் பிரிக்கப்பட்டிருக் கின்றன. நல்ல அனுபவம் வாய்ந்த பழைய அமைச்சர் ராமையா அவர்களிடம் வருவாய்ப் பகுதியை ஒப்படைத்து விட்டு அதை ஆட்டிப் படைக்கும் அதிகாரங்களை முதலமைச் சரவர்கள் வைத்திருக்கிறார்கள். பொதுப் பணித்துறை அமைச் சரிடம் வேலை வாங்கும் பணியை ஒப்படைத்துவிட்டு வேலை போடுவது போன்ற இனங்களை முதலமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்கள். பல இலாகாக்கள் உரியவர்களுக்கு உரிய முறையில் அளிக்கப்படாமல் பிரிக்கப்பட்டிருக்கும்போது, கவர்னர் பெருமான் அவர்கள், 'திறமை மிக்க இளைஞர்களிடத்தில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது' என்று கூறியிருப்பதை எந்த வகையில் பாராட்டுவது என்று புரியவில்லை. ஆகவே, இது வும் பாராட்டத்தக்க வகையிலே இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பேசிய மகாலிங்கம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை கூலி உயர்வுப் போராட்டங்களிலே கலந்து கொண் டது என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகமானது, நடத்தப்படுகிற போராட்டமானது நியாயமானது என்று கருதி னால் அதை நடத்துகிறவர்கள் யாராக இருப்பினும், எந்தக் கட்சி யினராக இருப்பினும், நியாயமான கோரிக்கைகளுக்குத் தன் உதவியினை, ஒத்துழைப்பைத் தந்திருக்கிறது. தேவைப்பட்டால் சிறைசாலைக்குக்கூடச் செல்லத் தயாராக இருந்திருக்கிறார்கள். பேட்டைவாய்த்தலைப் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து நடத்திற்று. ஆயிரக்

[Sri A. P. Dharmalingam] [25th April 1962

கணக்கானவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் எனது மதிப்பிற்குரிய நண்பருமான கலைஞர் கருணாநிதி அவர்களும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். அதே போன்று நங்கவரம் விவசாயப் போராட்டத்திலும் கலந்துகொண்டோம்.

இறுதியாக, இந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட நியாய வாரச் சட்டத்தினால் குத்தகைதாரர்களுக்கு, 30 ஆண்டுகள், 35 ஆண்டுகள் நிலத்திலே உழுது வரும் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. நங்கவரம், கீழ் நங்கவரம், குறிச்சி போன்ற பகுதிகளில் இந்தச் சட்டத்தினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர நன்மை பெறவில்லை. இது பற்றி அமைச்சர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தும் இதுவரை கவனிக்கப்படவில்லை. அவர்களுக்கு நல்ல பாதுகாப்புத் தரும் வகையில் கவர்னர் பெருமான் உரையில் ஏதும் இல்லாதது வருந்தத்தக்கது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் வடக்கு தெற்கு பேசுகிறோம் என்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். நாங்கள் மட்டும் பேசவில்லை—நேற்று பேசிய பல அங்கத்தினர்கள் வடக்கு-தெற்கு பேசியதோடு மாத்திரமல்லாது தங்கள் தொகுதி, எங்கள் தொகுதி என்று பேசினார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மதுரைத் தொகுதி அங்கத்தினர் பேசும்போது தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தப்போகும் தொழிற்சாலையை எங்கள் மாவட்டத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்றார்கள். சூலூர் தொகுதி அங்கத்தினர் கனம் குழந்தையம்மையார் அவர்கள், தங்களுடைய பகுதிக்கு, கோவை மாவட்டத்திற்குத் தொழிற்சாலை வேண்டுமென்று சொன்னார்கள். அருமை நண்பர் சேலம் வெங்கட்ராமன் அவர்கள், சேலத்திலே இரும்புக் கனி ஆரம்பிப்பது சேலம் மாம்பழத்தைவிடத் தித்திப்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் எல்லாம் எங்கள் மாவட்டம், எங்கள் தொகுதி என்று சொல்லும்போது நாங்கள் இந்த நாடு, திராவிட நாடு, தென்னகம் என்று பேசுகிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை. நீங்கள் செய்கின்ற நல்ல காரியங்களுக்கெல்லாம் நாங்கள் ஒத்துழைப்புக் கொடுப்போம், அதே போல் நீங்களும் எதிர்க் கட்சியினராகிய எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

9-30 a.m.

* SRI R. KRISHNASAMY NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றத்தில் பேசுவது ஒரு முக்கியமான சம்பிரதாயம். ஒவ்வொருவரும் அவரவர்கள் மனதில் எதை எதை முக்கிய பிரச்னைகளாகக் கருதுகிறார்களோ அப் பிரச்னைகளெல்லாம் குறித்து எந்த வருடத்திலேனும் கவர்னர் அவர்கள் பேசியதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஒவ்வொருவருடைய மனதிலும் அன்றாட வாழ்க்கைப் பிரச்னையிலும், சொந்த அனுபவத்திலும் அவர்கள் மனதில் எதை முக்கியமானதாகவும், உணர்ச்சி மிகுந்ததாகவும் அவர்கள் கருதுகிறார்களோ

25th April 1962] [Sri R. Krishnasamy Naidu]

அத்தகைய பிரச்னைகளைப்பற்றி எல்லாம் பொதுவாக குறை சொல்லப்பட்டது. இக்கூட்டத்திலும், அடுத்துவரும் தொடர் கூட்டத்திலும் இத்தகைய பேச்சுக்கள் அதிகமாயிருக்கலாம். அதற்கு அடுத்து நடைபெறும் கூட்டங்களில் இத்தகைய பேச்சுக் கள் குறைவாயிருக்கும் என்று நினைக்கிறேன். புதிதாக வந்தவர் கள், அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதற்குமுன் எடுத்துச் சொல்லாமல் இருந்திருக்கலாம் என்று நினைத்து சில பிரச்னைகள் பற்றி அவர்கள் சொன்ன விஷயங்களையே திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லும்படியான நிலையிருக்கலாம். அவற்றை, திரும்பத் திரும்ப சொல்லப்படும் விஷயங்கள் என்று நாம் கருதலாம். கவர்னர் அவர்கள் உரையில் முதலாவதாக அமைச்சரவையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அமைச் சரவையை எந்தயிடத்தில் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "புதிய அமைச்சரவை துரிதமாகவும் துணிவுடனும் செயல் பட முனைந்துவிட்டது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். நிர்வாக அனுபவமும், இளமையின் துடிப்பும் நல்ல முறையில் இணைந்த அடக்கமான அமைச்சரவை இது" என்று கூறியிருக் கிறார்கள். நிர்வாகத்தில் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். நன்கு செயலாற்றியவர்களோடு அமைச்சரவையில் சில இளைஞர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இரண்டும் இணைந்து செயல்படும். "இந்த அமைச்சரவை தனது சிரமம் மிக்க பெரும் பணியில் நல்ல வெற்றி பெறவேண்டும் என்று அனைவரும் ஒரு மனதாக வாழ்த்து வோமாக" என்று சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் என்ன பாராட்டி விட்டார்கள்? இந்த அமைச்சரவை பல ஆண்டு கள் பணி புரிந்து வந்த அனுபவத்தை வைத்து அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும், வாசித்தும் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆக கவர்னர் அவர்கள் தமது உரையில் வாழ்த்துக் கூறியும், எல்லோ ருடைய ஒத்துழைப்பைக் கோரும் முறையிலும், உற்சாகம் அளிக் கும் முறையிலும் பேசியிருக்கும் சம்பிரதாயமான நல்ல பேச்சு இது. ஆகவே திரும்பத் திரும்ப இதைப் பற்றி எல்லோரும் பேச வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். தேர்தல் முடிந் தாகி விட்டது. நடந்த விஷயத்தைப்பற்றி திரும்பத் திரும்பப் பேசாது, ஏதோ தேர்தல் நல்ல முறையில் சுமுகமாக நடைபெற் றது குறித்து சந்தோஷப்படவேண்டும். நமது ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் முதல் இரண்டு தேர்தல்களில் உயிர் சேதங்கள் ஒன்றும் ஏற்படவில்லை. இந்த மூன்றாவது பொதுத் தேர்தலில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உயிர் சேதமும் ஏற்பட் டிருக்கிறது. கோர்ட்டில் உள்ள வழக்கு. ஆகவே இது பற்றி நாம் இங்கு அதிகமாகப் பேசக் கூடாது. திராவிட முன்னேற் றக் கழக அங்கத்தினர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் எங்கு உயிர் சேதம் ஏற்பட்டது, உயிர் சேதம் ஏற்பட்டது யாருக்கு, அந்த செய்கைக்கு காரணமாகயிருந்தவர் யார், என்பதைப் பற்றி எல்லாம் அவர்கள் கட்சிபூர்வமாக தகவல் கேட்டு அவர்கள் கட்சி அங்கத்தினர்களைக் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் அவர்களிடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். முந்திய

தேர்தல்களில் இத்தகைய செயல்கள் நடைபெறவில்லை. பின்னர், அமைச்சரவை அளவிலே எதிர்க்கட்சியினரை வைத்துக்கொண்டு தேர்தல் எப்படி நல்ல முறையிலே, கண்ணியமான முறையிலே நடத்தப்பட வேண்டுமென்று பேசியிருந்தாலும் நடைமுறையில் அது அனுஷ்டிக்கப்படாமல் போய் விட்டதென்பதை பல தொகுதி களில் நான் கண்ட அனுபவத்தை வைத்துக் கூறுகிறேன்.

"பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே
மெய்யுடை யொருவன் சொல்லமாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே" என்றும்
"வாய்ப்பறையாகவும், நாக்கடியாகவும்
பேசுவதொன்றைப் போற்றிக் கேண்மின்" என்றும் . . .

SRI V. KRISHNAMOORTHY : Sir, on a point of order. The hon. Member is using the word 'பொய்'. Yesterday the Hon. Speaker gave a decision on it. I request the hon. Member to withdraw the word 'பொய்'.

MR. SPEAKER : The hon. Member is requesting another hon. Member to withdraw! There is no point of order in this. The hon. Member (Sri R. Krishnasamy Naidu) can continue his speech.

SRI R. KRISHNASAMY NAIDU : நறுந்தொகையில், அதிவீர ராம பாண்டியன் நீதி நூலில் இது வருகிறது. அந்த நீதிகளை பொதுமக்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையை அறிந்து இந்தத் தேர்தலில் பொதுமக்கள் நடந்துகொண்டிருக் கிறார்கள் என்று உணருகிறேன். 1957-ம் வருடத்திய அனுபவத்தை 1962-ல் கண்டோம். 1962-ம் வருடத்து அனுபவத்தை 1967-ம் ஆண்டில் காண்போம். அதுவரை பொறுத்திருப்போமாக. இந்தத் தேர்தலில் போலீஸ் சம்பந்தப்பட்ட வரையில் அதிகாரி களோ அல்லது மந்திரிகளோ ஆளும் கட்சியினருக்கு இணக்க மாக நடந்துகொண்டார்கள் என்று குறை கூறுவது சரியல்ல. அவர்கள் இங்கு சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்ட புகார்கள், போலீஸ் தாங்களாகவும் நீதிபதிகள் தாங்களாகவும் இருந்தால் எப்படி அவர்கள் கூறும் நியாயத்திற்கும் அவர்கள் உணர்ச்சிக்கு ஏற்ப நியாயம் நடை பெற்றிருக்கவேண்டுமோ அத்தகைய நியாயம் நடைபெறவில்லை யென்று இத்தகைய புகார்கள் கூறப்படுகின்றன. சமீபத்தில் நடந்த தேர்தல் சம்பந்தப்பட்ட வழக்குகள் இன்னும் **pending** ஆக இருக்கக் கூடும். அவர்கள் விரும்புகிறபடி நிகழ்ச்சிகள் நடை பெறவில்லை, தீர்ப்புகள் வரவில்லை, பரிகாரம் தேடப்படவில்லை என்று சொல்வது நியாயமாகாது. ஒரு கிராமத்தில் 36 கள்ள நோட்டு கேஸ்கள் காமராஜ் ஆட்சியில் நடந்தன என்று திராவிட முன்னேற்றக் கழகத் தோழரும், கம்யூனிஸ்ட் கட்சித் தோழரும் பக்கத்தில் உராசிக்கொண்டு இந்தக் கோஷத்தை சொல்லிக் கொண்டு சென்றார்கள். இதை பலயிடங்களில் கேட்டிருக்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையில் வந்த புதிய இயந்திரங் கள். அத்தனையையும் எனக்கு வேண்டிய தொழிற்சாலை அதிபர்

25th April 1962] [Sri R. Krishnasamy Naidu]

களுக்கு அந்த இயந்திரங்களை அனுப்பி விட்டு பழைய இயந்திரங்களைக் கொண்டுவந்து பூட்டி வைத்திருப்பதாகக் கூறினர்கள். விதைக்கிறதை விதைத்து வைத்தால் முளைக்கிறது முளைக்கட்டுமே என்று எந்த விதத்திலாவது கட்சிக்கு லாபம் கிடைக்காதா என்று இஷ்டம்போல் பிரசாரம் செய்யப்பட்டது. அதுபற்றி இப்பொழுது விரிவாக கூறுவதற்கு நேரமில்லை என்று அஞ்சுகிறேன். வருகிற தேர்தல்களிலாவது எல்லாக் கட்சியினரும் சேர்ந்து இதற்கு நல்லதொரு முடிவு காணும் வகையில் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வரிகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம். வரிகள் போடுவது எதற்காக என்று நினைப்பதை விட்டு ஆளும் கட்சிமீது பழி சுமத்துவதற்கு, அதிருப்தி தேடித் தருவதற்கு, வரிகள் வரிகள் என்று பேசிக்கொண்டு போனால் நமது முக்கிய பிரச்னைகள், ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யப்படவேண்டிய வேலைகள் என்னவாகும் என்பதைப் பற்றி சிந்தித்து பார்க்கவேண்டும். விலைவாசி உயர்வு பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றும் சொல்லப்படவில்லை என்றும் அதற்கு அரசாங்கம் யாதொரு முடிவும் எடுக்கவில்லை என்றும் சொல்லப் பட்டது. பல ஆண்டுகளாக இந்தக் குறை இங்கு இச் சபையில் சொல்லப்பட்டு வருவதைக் கேட்டிருக்கிறேன். இதற்கு என்ன மார்க்கம்? இதற்குள்ள பரிகாரம் என்ன என்பது பற்றி யாரும் திட்டவட்டமாக ஒரு வழி வகையும் சொல்லக் காணோம். விலை குறையவில்லை என்ற பேச்சு இனிப்பாகயிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்குள்ள வழிவகைகள் என்ன என்பதைப் பற்றி யாரும் திட்டவட்டமாக ஒன்றும் கூறக் காணோம். சில ஆண்டுகளுக்கு முன்னர் கோவையில் மாகாண உணவு அபிவிருத்தி கமிட்டிக் கூட்டம் நடைபெறும்போது இப்பொழுது நிதியமைச்சராக இருக்கக்கூடிய அப்போதைய விவசாய அமைச்சர் அவர்கள் பல கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களை அழைத்து விவசாய சாகுபடி, நெல் சாகுபடி பற்றி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது என்று விவரம் கேட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை செலவு ஆகும் என்று சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் எல்லாம் 250 முதல் 300 ரூபாய் வரை ஆகும் என்றும் தெரிவித்தார்கள். இதை அங்கு வந்திருந்த விவசாய இலாகா அதிகாரிகளும் ஒப்புக்கொண்டார்கள். எங்களுடைய ராமநாதபுரம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம் போன்ற இடங்களில் 1,200 படி விளைவு எடுக்க முடியும். அதாவது பத்து கோட்டை என்று சொல்லலாம். ஒரு கோட்டைக்கு 56 ரூபாய் விலை என்று வைத்துக்கொண்டால் 560 ரூபாய் கிடைக்கும். இந்தக் கணக்கை வைத்துக்கொண்டுப் பார்த்தால் ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்ற முறையில் கொடுக்க முன் வந்தால் ஒரு ஏக்கருக்கு 170 ரூபாய்தான் வருகிறது. அப்படியானல் 250 ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிற நிலச்சுவான்தார் வருடம்தோறும் எவ்வளவு நஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பதைப்பற்றி சொல்ல வேண்டிய தேவையில்லை. இந்த முறையில் பார்த்தால் மூன்று படி அரிசி கொடுக்க முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். நிலப்பிரச்னை சம்பந்தமாக பல விஷயங்களைப்பற்றி நாம் விவாதித்திருக்கிறோம். அதையெல்லாம் ஆலோசித்துப்பார்த் தால், ஒரு ஆளுக்கு மூன்று ஏக்கர் நிலம் கொடுக்க முடியுமா என் பதைப் பற்றி எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதோ விதைக்கிற அளவு விதைக்கலாம், முளைக்கிற அளவு முளைக்கட்டும் என்ற அளவில்தான் எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள் பலர். நிலப்பிரச்னையை எடுத்துக்கொண்டால், எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை தலைக்கு 38 சென்ட்கூட கிடைப்பதற்கு வழியில்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் மூன்று ஏக்கர் எப்படி கொடுப்பது என்பதுதான் தெரிய வில்லை. இம்மாதிரி சொல்வதை கேட்டுவிட்டு பொதுமக்களும் ஏதோ இவர்கள் மூன்று ஏக்கர் தருகிறோம் என்று சொல்லுகிறார் களே, ஆனால் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் ஒன்றரை ஏக்கர்கூட தருகிறோம் என்று சொல்லவில்லையே என்று எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே மூன்று படி அரிசி தருகிறோம், மூன்று ஏக்கர் தருகிறோம் என்று சொன்னதை எல்லாம் எத்தனையோ பேர்கள் நம்பியுமிருக் கிறார்கள்.

இன்னும் பல பிரச்னைகளை கவர்னர் பெருமான் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந் தாண்டுத் திட்ட காலத்தில் என்னென்ன சாதிக்க முடிந்தது, மூன் றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிராம பஞ்சாயத்துக்கள் என்னென்ன வேலைகளை எல்லாம் செய்யவேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிக்கவேண்டும் என்பதைப்பற்றியும் கவர்னர் பெரு மான் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் அடுத்த ஐந்தாண்டுகளில் செய்ய வேண்டிய வேலை என்ன என்பதை எல்லா எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் உட்பட ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஆலோசித்து, விவசாய அபிவிருத்திக்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். இது எல்லா சட்டமன்ற அங்கத்தினர்களுக்கும் பொருந்தும். இவற்றில் முக்கிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்போமானால் நிச்சயமாக விலைவாசிகள் குறைந்துவிடும் என்று நம்புகிறேன். இப்போது நாம் ஐந்தாண்டுகளுக்கு திட்ட மிட்டிருக்கிறோம். இதன் மூலமாக நாம் விளைச்சலை பெருக்க முடியும். அந்த முறையில் விலைவாசிகளை குறைப்பதற்கும் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வேண்டிய பணி களை எல்லாம் புரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த சபைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடிக்கின்றேன்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRIMATHI A. S. PONNAMMAL: மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்

25th April 1962] [Srimathi A. S. Ponnammal]

படுகிறேன். இங்கே பேசும்போது கனம் அங்கத்தினர்கள் பலர் குறிப்பாக கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் வெள்ளத்தைப் பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். அதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்தில் அங்கங்கே உதவி புரிந்தது, அதனால் தான் கவர்னர் அவர்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் வெள்ளம் வந்த காலத்தில் ஏழை மக்கள் எல்லாம் அவதிப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் ஏழைப் பங்காளிகளாகிய அமைச்சர்கள் எல்லாம் வண்டியிலும் சைக்கிள்களிலும் போய் அங்கங்கே இருக்கின்ற மக்களுக்கு உதவி செய்து கொண்டிருந்த காலத்தில், இதே திராவிட முன்னேற்றக் கழகத்தார், திருப்பரங்குன்றத்தில் மகாநாடு போட்டுக்கொண்டு, பல்லக்கில் பவனி வந்து கொண்டிருந் ததை மக்கள் எல்லோரும் அறிவர். ஆகவே வெள்ளத்தைப்பற்றி பேசுவதற்கு கொஞ்சமும் உரிமையில்லாத திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், நாங்கள் தான் வெள்ளம் வந்த நேரத்தில் பல வேலைகளை செய்தோம் என்று சொன்னால் அதை நம்பிக்கொண்டு ஏமாந்துகொண்டிருப்பவர்கள் இன்னும் இருக் கிறார்கள் என்று அவர்கள் நினைத்தால் அது மிகவும் தவறு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தேர்தலைப்பற்றி பேசும்போது, தேர்தல் சுமுக மாக நடக்கவில்லை, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஜெயித்த இடங் களில் எல்லாம் தேர்தல் சரியானபடி நடக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இன்னின்ன இடங்களில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஜெயிப்பார்கள், இன்னின்ன இடங்களில் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஜெயிப்பார்கள் என்று அரசாங்க அதிகாரி களுக்கு ஒன்றும் தெரியாது. நாங்கள்கூட அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால் பொதுமக்களிடம், எங்களை ஆதரித்தால் மூன்று ஏக்கர் நஞ்சையும் ஐந்து ஏக்கர் புஞ்சையும் கிடைக்கும் என்று தேர்தல் விக்ஞாபனத்தில் போட்டிருந்தார்கள், அதைப்பற்றி அவர்கள் தேர்தல் அறிக்கையிலும் வெளியிட்டிருந் தார்கள். அது மட்டுமல்ல, நாங்கள் வெற்றி பெற்றால் மூன்று படி அரிசி கிடைக்கும்படி செய்வோம் என்றும் அவர்கள் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டிருந்தார்கள். இதைக்கண்டு ஒரு சிலர் ஏமாந்திருக்கலாம். ஆனால் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற மொத்த பரப்பளவு என்ன, இந்த பரப்பளவைக்கொண்டு மக்களுக்கு எவ்வளவு கொடுக்கமுடியும் என்பதைப்பற்றி எல்லாம் சற்று சிந்தித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏதோ தங்களுக்கு எல்லாப் பொருளாதாரமும் தெரியும், நாங்கள் பொருளாதாரத்தில் எம்.ஏ-வரை படித்திருக்கிறோம், பொருளாதாரத்தில் பி.ஏ. படித் திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் சாதாரண மாக தெரியக்கூடிய பொருளாதாரத்தைக்கூட தெரிந்து கொள்ளா மல் ஒவ்வொரு ஆளுக்கும் மூன்று ஏக்கர் நிலம் கொடுத்துவிட முடியும் என்று இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர்கள் தேர்தல் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள். அங்கங்கே இருக்கின்ற சுதந்திரக்கட்சி போன்ற பல கட்சிகளுடன் சேர்ந்து

[Srimathi A. S. Ponnammal] [25th April 1962

கொண்டு இவர்கள் ஏதோ ஐம்பது பேர்கள் வந்துவிட்டார்கள். எங்களுக்குக்கூட தேர்தல் நேரத்தில் சில இடங்களில் எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தன. பெண்களைப்பற்றி என்னென்னமோ பேசினார்கள். அதைப்பற்றி எல்லாம் பார்த்தால், இவர்களுடைய கண்ணியம், கடமை, கட்டுப்பாடு இவையெல்லாம் காற்றோடு பறந்து போய்விட்டது என்பதைப் பொதுமக்கள் அனைவரும் தெரிந்துகொண்டு விட்டார்கள். இதை எல்லாம் இவர்கள் செய்து விட்டு இங்கே வந்து சர்க்கார் சரியான முறையில் தேர்தல் காலத்தில் நடந்து கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டுவது சரியல்ல என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். ஆபாசமான சுவரொட்டிகள் எல்லாம் போட்டிருந் தார்கள். அது போன்று ஆபாச சுவரொட்டிகள் எங்கள் கட்சி யிலிருந்து எங்கேயாவது போட்டிருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் எப்படி சுவரொட்டி போட்டிருந்தோம், கடந்த பத்து வருடங்களில் இந்த நாட்டில் காங்கிரஸ் சர்க்கார் என்னென்ன செய்திருக்கிறது, இனிமேல் வரப்போகின்ற ஐந்தாண்டு காலத்தில் என்னென்ன காரியங்களை எல்லாம் செய்யும் என்பதைப்பற்றி மக்களுக்கு தெரியும்படி போட்டிருந் தோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், திரு. மகாலிங்கம் அவர்கள் கூறியது போல், இந்த நாட்டில் 4,104 கொலைகள் நடந் திருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, இது எங்கே நடந்திருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. அது மட்டுமல்ல, ரத்தக் கறையுடன் உள்ள சட்டையை கையில் வைத்துக்கொண்டு, தலையை விரித்துப்போட்டுக்கொண்டு ஒரு பெண் நிற்பது போலவும், "ஐயோ அத்தான்" என்று கேட்பது போலவும் சுவரொட்டிகள் போட்டிருந்தார்கள். இது மாதிரி பெரிய கொடுங்கோல் ஆட்சியில் கூட நடந்திருக்க முடியாது. இம்மாதிரி யெல்லாம் போட்டுவிட்டு, தேர்தல் காலத்தில் சுமுகமாக நடந்து கொண்டதற்கு கவர்னர் பெருமான் புகழ்ந்ததை, அது சரியல்ல என்று இவர்கள் கூறுகிறார்கள். அது மட்டும் அல்ல, இந்த மந்திரி சபையே தகுதியுள்ள மந்திரிசபை அல்ல என்றும் சொன்னார்கள். அகில இந்தியாவிலும்கூட, ஏழை பங்காளன் காமராஜ் ஆட்சி யைப்பற்றி புகழ் ஏற்பட்டிருக்கிறது. லண்டனிலிருந்து வந்திருந்த எடின்பரோ கோமகனார்கூட, முதலமைச்சர் அவர்களைப்பார்த்த போது, இந்த நாட்டில் நடப்பது போன்ற ஆட்சி உலகு எங்குமே நடக்கவேண்டும் என்று இந்த அமைச்சரைப்பற்றி பாராட்டி பேசியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அமைச்சரவைக்கு திறமை யில்லை என்று சொன்னால், பேச்சுக்கு ஏதை வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிருக்கலாம் என்று நினைப்பது சரியல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசியைப்பற்றி பேச்சு வந்தது. விலை வாசியைப்பற்றி நாம் ஆராய்ந்து பார்த்தால், நாம் பொருளா தாரத்தில் முன்னேறியிருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். பொருளாதாரத்தில் முன்னேறியிருந்தால், எல்லா சாமான்களுடைய விலையும் கூடுதலாகத்தான் இருக்கும். அரிசி மூன்று படி கிடைக்கும் என்று சொன்னால் அதற்கு ஏதாவது

25th April 1962] [Srimathi A. S. Ponnammal]

சாதகமான நிலைமைகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதல்லாமல் மூன்று படி அரிசி கிடைக்கக்கூடும் என்று யாரும் மனப்பால் குடிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறத்தில் விவசாயம் செய்ய வேண்டுமென்றால், இப்போது என்ன கூலி கொடுக்கவேண்டும், ஒரு மண் வெட்டி வாங்கவேண்டுமென்றால் இப்போது என்ன கொடுக்க வேண்டும், உழுபவனுக்கு எவ்வளவு கூலி கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். நகரத்தில் இருப்பவர்களுக்கு, பணத்தின் அருமை தெரியாது, உழைப்பினுடைய அருமை, பணத்தினுடைய அருமை இவை யெல்லாம் கிராமப்புறங்களிலுள்ளவர்களுக்குத்தான் தெரியும். ஆகவே இங்கே நகரத்தில் ஒரு மணி நேரத்தில் ஏதாவது எழுதிவிட்டு, பவுடரைப்பூசிக்கொண்டு நாடகத்தில் நடித்து, பணம் சம்பாதிப்பது போல் கிராமப்புறங்களில் பணத்தை சம்பாதிக்க முடியாது. ஆகவே இதைத் தெரிந்து கொள்ளாமல் எதையாவது பேசுவது என்பது சரியல்ல என்பதைத்தான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வரியைப்பற்றி பேசும்போது, ஏழை மக்கள் மீது அதிகமாக வரியை போட்டுவிட்டார்கள் என்று பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கார்ப்பரேஷன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில், பெண் இல்லாமல் கல்யாணத்தை நடத்த முடியாது, தாழ்ப்பாள் இல்லாமல் பூட்டு போட முடியாது, பருப்பு இல்லாமல் சாம்பார் பண்ண முடியாது என்று வரி போடுவதைப்பற்றி அவர்களது தலைவர் அவர்களே கூறியிருந்தார்கள். அப்போது நாங்கள் நினைத்தோம், இனிமேலாவது வரி போடுவதைப்பற்றி இவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று. இப்போது புத்தி வந்து விட்டது, இனிமேல் வரிபோடுவதைப்பற்றி தெரிந்து கொள்வார்கள் என்றும் நினைத்தோம். இதையெல்லாம் விட்டு விட்டு, இப்போது வரி போடுவது மிகவும் அக்கிரமம் என்று சொல்வதைப் பார்த்தால், முன்னால் சொன்னதை எல்லாம் மறந்து விட்டு இப்படி பேசுகிறார்களே என்று தான் எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படிப் பேசுவதும் சரியல்ல என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு ஜாதியைப்பற்றிச் சொல்லும்போது கனம் ஹரிஜன மந்திரி அவர்கள் ஜாதிப் பிரச்னையை வைத்து ஓட்டு வாங்கினார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு ஹரிஜன மக்கள் மனிதர்களாக வாழ்கிறார்கள் என்றால் எங்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் மகாத்மா காந்தி தோன்றிய காரணத்தினால்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, காங்கிரசைப் பற்றி, காந்தியத்தைப்பற்றி அமைச்சர்கள், ஹரிஜன மெம்பர்கள் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே இதெல்லாம் தெரியாமல் ஜாதிப் பிரச்னையை வைத்து ஓட்டு வாங்கினோம் என்று சொல்வதில் பயனில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் ஹரிஜன மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கியிருக்கிறார்கள். ஆகவே எங்களுக்கு ஜாதிப் பிரச்னையை வைத்து ஓட்டு வாங்க வேண்டிய அவசியமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[Srimathi A. S. Ponnammal] [25th April 1962

அதோடு, கனம் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் கல்வியைப்பற்றியும், இன்னும் இதர விஷயங்களைப் பற்றியும் மிக அழகாக, எதிர்காலம் எப்படி இருக்க வேண்டுமென்பதைப்பற்றி யெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் எப்படி அமையும், இனி மேல் வாழ்க்கைப் பிரச்னை எப்படி இருக்கவேண்டும், எப்படித் தீரவேண்டும், வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி போக்க வேண்டும், உணவுப் பிரச்னையை எப்படி சமாளிக்க வேண்டும், இருப்பதற்கு இடத்தை வழங்குவதிலே பிரச்னைகளை எப்படித் தீர்த்தாக வேண்டும் என்ற அடிப்படையிலேதான் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை மிகவும் சுருக்கமாகவும், விளக்க மாகவும் அமைந்திருக்கிறது. இந்த உரையை எல்லா அங்கத்தினர் களும், சர்வ கட்சியைச் சார்ந்தவர்களும் நியாயமான முறையிலே பார்ப்பார்களேயானால் எல்லோரும் போற்றி புகழ வேண்டும். இந்த அரசாங்கம் கொண்டு வரக்கூடிய திட்டங்களுக்கு நல்ல ஆதரவு கொடுத்து, மக்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்வதற்கு நாம் எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம். அதே போல் எல்லா கட்சித் தலைவர்களும், அங்கத்தினர்களும் ஏற்று நடத்த வேண்டிய திட்டங்கள் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே இருக்கின்றன. ஆனால் நாமே இதிலே ஒன்றுமில்லை என்று பேசக்கூடிய அளவிலே இன்னும் இருந்து கொண்டிருக் கிறோம். இன்றைக்கு விஞ்ஞானம் வளரக்கூடிய யுகம். ராக்கட் விடக்கூடிய காலம். இங்கிருந்து கொண்டு 6,000 மைல்களுக்கு அப்பாலுள்ளவர்களுடன் நேரில் பேசக்கூடியது போன்று பேசக் கூடிய விஞ்ஞான யுகம். அந்த அளவிலே வளர்ச்சி அடைந்து விட்டது. இப்படி முன்னேறிச் செல்லக்கூடிய இந்த நாளில் இன்னும் நாங்கள் பிரிந்து செல்வோம் என்று கூறுவார்களானால், அப்படிப்பட்ட பிரிவினைச் சக்திக்கு நாம் இடம் கொடுக்க முடியுமா என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்வியைப் பற்றியும் நல்லமுறையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வியை வளர்ப்பதற்காக நாம் கிராமப்புறங்களில் பிள்ளைகளுக்கு மதிய உணவு கொடுக்கிறோம். இப்போது 6 ந. பை. கொடுக்கப்படுகிறது. அதை 10 ந. பை-யாக உயர்த்தினால் இன்னும் நன்றாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள் கிறேன். அது மாத்திரமல்ல. இப்போது கல்வி மந்திரியாக விளங்குகின்ற கனம் அமைச்சர் அவர்கள் பெண்கள் கல்வியில் மிகச் சிரத்தை எடுத்துக்கொண்டு பாடுபட்டு வருகிறார்கள். பெண் களுக்குத் தனியாக பள்ளிக்கூடம் வேண்டுமென்ற அடிப்படையிலே கூறிக்கொண்டு வருகிறார். ஆகவே, என்னுடைய தொகுதியாகிய சோழவந்தானில் பெண்கள் சர்க்கார் உயர்நிலைப் பள்ளி ஒன்றை இந்த ஜூன் மாதத்திலேயே ஆரம்பித்து கொடுத்துதவ வேண்டு மென்று என் தொகுதியாகிய சோழவந்தான் பெண்கள் சார்பாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்குக்கூட எதிர்க் கட்சியினர் சொல்வார்கள், குறுகியமனப்பான்மை வந்து விட்டதென்று. நாங்கள் தென்னாடு கேட்கிறோம். அவர்கள் தன் தொகுதிக்கு மட்டும் கேட்கிறார்கள் என்று கூறுவார்கள். இப்

25th April 1962] [Srimathi A. S. Ponnammal]

போது டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கமிட்டிக்குகூட ஒரு சட்டம் வந்துவிட்டது என்று கலெக்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது சொல்லும்போது தேனி எம்.எல்.ஏ. சென்னையிலே இருந்துகொண்டு இங்கு வந்து கூட்டத்திற்கு கலந்து கொள்ள வேண்டாம்; அவர்கள் சென்னையில் நடைபெறும் டி.டி.ஸி. கூட்டத்தில் கலந்து கொண்டால் போதும் என்றார். அப்போது நான் சொன்னேன். அந்த எம்.எல்.ஏ. வரவேண்டாம், தேனீ மக்களிடம் ஓட்டு வாங்கிவிட்டு சென்னை வாசிகளின் குறையைத் தீர்க்க பாடுபடட்டும். எங்கள் காங்கிரஸ் எம்.எல்.ஏ. கோயம் புத்தூரிலே இருந்துகொண்டு, ஒட்டன்சத்திரம் தொகுதியிலே நின்று மக்களிடம் ஓட்டு வாங்கினாலும் அவர்கள் கூட்டத்திற்கு வந்து விடுவார் என்று சொல்லிக்கொண்டிருந்தபோது, அவர் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டார். தேனீயில் ஓட்டு வாங்கி, சென்னையிலே டீ.டீ.சி.யிலே கலந்து கொள்ளும் பரந்த மனப்பான்மை இருந்தாலும், ஓட்டு வாங்கிய தொகுதிக்கு வந்து வேலை செய்ய வேண்டுமென்று எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே தான் தொகுதி மக்களுக்கு காரியம் செய்ய வேண்டுமென்று மற்ற அங்கத்தினர்களும் பேசினார்கள்.

அதேபோன்று, அணு மின்சார சக்தி நிலையத்தை கோயம் புத்தூரிலே ஆரம்பிக்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். சென்னை நகரத்திற்கு அடுத்தபடியாக இன்றைக்கு மதுரை மாநகரம் விளங்குகிறது. இன்னும் பல விவசாயிகள் அங்கு மின்சாரம் வேண்டுமென்றும், பம்பு செட்டுகள் வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அணு மின்சார நிலையத்தை மதுரை மாநகரிலே ஆரம்பிக்க மதுரையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, மீண்டும் கவர்னர் பெருமான் அவர்கள் உரையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

*PULAVAR K. GOVINDAN : தமிழக சட்ட மன்ற தகுதிமிக்கத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கின்ற எங்களில் நண்பர் கருணாநிதியைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் புதியவர்கள். பல மேடைகளில் பல மணி நேரம் பேசிப் பழக்கப்பட்டிருந்தாலும், சட்ட மன்றத்திலே பேசுகின்ற இந்த வாய்ப்பு எங்களுக்கு புதிய தொரு வாய்ப்பாகும். இந்த அளவில், தலைவர் அவர்களே, எங்களுக்குப் போதிய காலமும், போதிய வாய்ப்பும் அளிக்க வேண்டுமென்று நான் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, மன்னர்கள் மக்களின் குறைகளை அறிவதற் காக மாறுவேடம் பூண்டு மக்களிடத்துச் சென்று, அவர்களுடைய குறைகளைத் தெரிந்து வந்து, முடியாட்சி நடத்திய காலம் இப்போ தில்லை. இப்போது மன்னருக்கு நிகரான மந்திரிகள் செங் கோலோச்சும், இந்த கோட்டைக்கு மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து குறைகளை கூற வேண்டுமென்று ஒரு நிலை இருக்கிறது. இந்த நிலை இருக்கின்ற காரணத்தினால் மக்களுடைய குறைகளைக் கூறுகின்ற இந்த ஒரு

[Pulavar K. Govindan] [25th April 1962

பெரும் பணி இந்த மன்றத்திலே பங்கு பெற்றுள்ள உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டுமே ஒழிய, இங்கு வந்து அமைச்சர்கள் திறமையைப் பாராட்டுவதற்கு நம்முடைய காலத்தை வீணாக்கிக் கொள்வது அவ்வளவு பயனளிக்கக் கூடியதல்ல. மன்னர்கள் ஆண்ட காலத்தில் அவர்களைத் திருத்துவதற்கு ஐம்பெருங் குழு, எண்பேராயம் என்ற அமைப்புகள் இருந்தன. இந்த அமைப்பு முறை இப்போது இல்லை. இந்த அமைப்பு முறையை இப்போது இங்கு வீற்றிருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்பால் முறையோடு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதை இங்கு ஒவ்வொருவரும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இங்கே வந்து, மன்னர்களைப் பார்த்து மக்கள், "மன்னரே, உங்களுடைய ஆட்சியில் மும்மாரி பெய்கிறது, எங்கள் வயல்கள் எல்லாம் விளைகிறது" என்று யாரும் கூறுவதில்லை. அவர்கள் கேட்க வருவதெல்லாம் "எங்களுடைய பயிர்களை விலங்குகள் அழிக்கின்றன, எங்களைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றுங்கள்" என்றுதான் கூறுவார்கள். அப்படிப்பட்ட குறைகளை இங்கே கூறவேண்டுமென்று சொன்னால், மக்களுடைய தேவைகளை எடுத்துக் கூற வேண்டும். அப்படி மக்கள் தங்கள் தேவைகளை எடுத்துரைக்கின்ற நிலையில், அந்த நாளில் ஐம்பெருங் குழு, எண்பேராயம் போன்ற அமைப்புகள் அரசருக்கு அரிய அறிவுரைகள் அழகாக எடுத்துரைக்க, அந்த அறிவுரையை அரசன் கேட்டுத் திருந்திய காரணத்தினால் தான் அந்தகாலத்தில் மன்னர்கள் வாழ்ந்தார்கள்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு.

அப்படி அந்த காலத்திலே அறிவுரையைக் கேட்காத மன்னர்கள் முறை கெட்டு அழிந்தார்கள்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

ஆகவே அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட அமைப்புகள் நல்ல அறிவுரைகளை அரசர்களுக்கு எடுத்துரைத்திருக்கின்றன. இந்த வித முறையை நாமும் மேற்கொள்ள வேண்டும். ஆகவே மன்றம் என்று சொன்னால், அதிலே குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, வெறும் பாராட்டுக்களையும், மகிழ்ச்சியையும் மட்டும் தெரிவித்துக் கொள்வது என்பதல்ல.

இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக, தாம் தம்
மகிழ்ச்சியில் மைந்துறும் போது.

தங்களுடைய தொகுதியிலே உள்ள மக்களின் தேவைகள், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் ஆகியவற்றை எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டுமென்பதை ஆளும் கட்சி உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. நன்றாக நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திட்டத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திட்டத்திற்குச் செலவாகக்கூடிய நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, அதைப் பாராட்ட வேண்டுமென்று

25th April 1962] [Pulavar K. Govindan]

சொன்னார்கள். அப்படியென்றால் அது திட்டமிட்டு செலவு செய்வது என்ற முறைக்கே பொருளற்றதாகி விடுகிறது. திட்டமிட்டு செலவிடும்போதே திட்ட அளவுக்குமேல் 2 கோடி, 5 கோடி அதிகமாகக்கூடிய அளவிலே முறை அமைந்திருக்கிறது. இன்னும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்த நிலையைக் கொண்டுசெல்வது நல்லதல்ல. வரி, வரி என்று சொல்கிறார்கள். திட்டமிட்டு ஒரு செயல்முறையிலே ஈடுபடுவது நல்லது. இப்போது இங்கே கனம் அங்கத்தினர் ஒருவர் பேசினார். பஞ்சாயத்துத் தரப்பிலே ஒரு வரி விதிக்கப்படுகிறது. சென்னை சட்டசபையிலே ஒரு வரி. அதே போல் டெல்லி சட்டசபையிலே ஒரு வரி. ஆக இப்படி மக்கள் மூன்று இடத்திலே வரியைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒருவன் ஒரு தேங்காய் வேண்டுமென்று நினைத்தானாம். அந்த ஒரு தேங்காய்க்காக அவன் உள்ளே நுழையும்போது, வாயிலில் இருந்தவன் கொண்டுவருவதில் எனக்குப் பாதி கொடுக்க வேண்டு மென்று கேட்க, ஒப்புக்கொண்டு உள்ளே சென்றான். அடுத்த வாயிலில் இருந்தவன் தனக்கும் கொண்டுவருவதில் பாதி கொடுக்க வேண்டுமென்று சொல்ல, அதற்கும் ஒப்புக்கொண்டு உள்ளே சென்றான். அப்போது அங்கே உள்ளே இருந்த மற்றவனும் அப்படியே கேட்டான். ஒரு தேங்காய்க்கு இரண்டு தேங்காய்கள் கொடுக்கவேண்டும், ஒன்று இரண்டாகி, இரண்டு நான்காகி, நான்கு எட்டாகி, இப்படி எட்டு தேங்காய் பறித்த ஒருவன் எடுத்துச் சென்றது ஒரு தேங்காய். அதே மாதிரி, பொதுமக்கள் ஈட்டுகின்ற பணமெல்லாம் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும், ஊராட்சிக்கும் கொடுத்து விட்டு, அவர்களை வரி, வரி என்று வாட்டி வதைக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை ஆளும் கட்சியினர் உணர வேண்டும். வரி ஒன்றுதான் வழி, வரி போடாமல் எப்படி வாழ முடியும், எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இதற்கு வழி காட்ட வேண்டும் என்று கூறப்பட்டது. வரி போடாமல் இருக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கூறவில்லை. வரி போடவேண்டும். ஆனால், வரி போடுகின்ற நேரத்திலே ஏழைகளை வாட்டக்கூடிய வரி தேவையில்லை. பணக்காரர்களையும், செல்வந்தர்களையும் வாட்டக்கூடிய வரிகளை போடுங்கள். வாட்டுவது என்ற சொல் கூடப் பொருந்தாது. அவர்களுடைய வளத்தைச் சிறிது குறைத்துக்கொள்ள வழி செய்தால் போதும், ஏராளமான பணங்கள் நம்முடைய பொக்கிஷத்திற்கு வந்து சேரும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இந்நிலையில் வரியே போடாமல் ஆட்சியை நடத்துங்கள் என்று நான் அறிவுரை கூற முன்வர வில்லை. வரி போடுங்கள், ஏழைகளை தாக்கக்கூடிய வரிகளைப் போடாமல், பணக்காரர்களை தாக்கக்கூடிய வரிகளைப் போடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

10-00 a.m.

இங்கு பேசிய சில நண்பர்கள் தி. மு. கழகத்தை தாக்கு வதையே தங்கள் தொழிலாகக்கொண்டு பேசினார்கள். அதுபற்றிய கருத்துக்கள் ஒன்றிரண்டை, நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் வெள்ளம் வந்து பெருத்தசேதம் விளைவித்திருந்தபொழுது, மதுரையிலே மாநாடு

[Pulavar K. Govindan] [25th April 1962

கூட்டிக்கொண்டு மகிழ்ச்சியிலே திளைத்திருந்தார்கள் என்று கூறப் பட்டது. மாநாடு கூட்டிக் கொண்டு அங்கே மகிழ்ச்சி வெள்ளத்தில் நாங்கள் புரண்டு கொண்டிருக்கவில்லை. மாநாடு நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் வெள்ளம் வந்த செய்தியை கேட்ட உடனேயே, பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் 'நான் இரவோடு இரவாக வெள்ளப் பகுதிக்குச் செல்ல வேண்டும், நீங்கள் குறைந்தது இரண்டாயிரம் தாருங்கள்' என்று சொன்னார்கள். 'இப்பொழுது 500 தாருங்கள், பிறகு வேண்டுமானால் பாக்கித் தொகை தாருங்கள்' என்று சொன்னார். கேட்ட ½ மணி நேரத்திற்குள்ளேயே, 2,000 ரூபாயை அங்கே வாரி வழங்கினார்கள். அதற்குப் பிறகும் எத்தனையோ ஆயிரங்களை வாரி வழங்கியிருக்கிறார்கள். அதே நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, நாங்கள் மாநாடு கூட்டுவது ஆண்டுக்கு ஒரு முறை, மாநாடு கூட்டுவது பல திங்கள் அறிவிப் புக்குப் பின். ஆனால், அந்த முறை எதுவுமில்லாமல், இப்பொழுது இங்கே முதல் மந்திரியாக இருக்கும் காமராசர் அவர்களின் பிறந்த நாள் விழாவை, எந்த நாளும், எந்த ஆண்டிலும் இல்லாத புது முறையிலே, இந்த மாநாட்டைக் காட்டிலும் பல மடங்கு கோலா கலத்துடன் சென்னையிலே காங்கிரஸ் அங்கத்தினர்கள் நடத்தி னார்கள் என்ற ஒரு நிகழ்ச்சியை இங்கே நினைவூட்ட விரும்பு கிறேன்.

இன்னொன்று. தேர்தல் காலத்தில் நாங்கள் எத்தனையோ போஸ்டர்கள் போட்டோம் என்று குறை கூறினார்கள். கோளா இடைக்காலத் தேர்தலில் காங்கிரஸ் உறுப்பினர்கள் கம்யூனிஸ்டு களால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு உருவத்தை 10 அடி உயரத் திற்குக் காட்டி தேர்தலில் அவர்கள் வெற்றி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். இப்படியெல்லாம் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுகிற நிகழ்ச்சியை விட்டு விட்டு, நாட்டு மக்களுக்குச் சேவை செய்கின்ற முறையில் நல்ல பணிகளைப் புரியுமாறு இங்கே இருக்கின்ற அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து வந்தவன். இந்த மன்றத்தில் 10 ஆண்டு காலமாக ஒரு அமைச்சராகவும், 10 ஆண்டு காலமாக உதவி சபாநாயகராகவும் பணியாற்றிய இருவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியிருப்ப வர்களை இந்த மாமன்றத்தில் பணியாற்ற அனுப்பிய மாவட்டம் எந்த அளவிலே இருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது தி. மு. கழகத்தைச் சேர்ந்த 11 உறுப்பினர்கள் வட ஆற்காடு மாவட்டத் திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள். இரண்டு பாரளு மன்ற உறுப்பினர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து வந்தவர் கள் என்ற நிலை ஏன் பிறந்தது என்ற கேள்வி எழுகின்ற நேரத்தில், வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம், பொருளாதாரத் துறையிலும், தொழில் துறையிலும் மிகவும் பின் தங்கிய மாவட்டம் என்று கூறினார்கள். அதை நினைப்பில் வைத்துக்கொண்டாவது, வருகிற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அந்த மாவட்டத்தில் இன்னும் அதிகமாக வர

25th April 1962] [Pulavar K. Govindan]

வேண்டும் என்று மேலும் அதிக அக்கரை காட்டி, ஆளும் கட்சியினருடைய கருணைத் திருப்பார்வையை இந்த மாவட்டத்தில் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் தொழில் வளர்வதற்கு வழியே இல்லை என்று சொல்ல முடியாது. வட ஆற்காட்டிலிருந்து நிறைய நிலக்கடலை ஏற்றுமதி ஆகிறது. வட ஆற்காட்டிலிருந்து நிறைய தோல் ஏற்றுமதி ஆகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி ஆகிற இந்த இரண்டு பொருள்களையும் வைத்துக்கொண்டு மத்திய சர்க்கார் நிறைய பொருளை ஈட்டுகின்றனர். மூலப் பொருள்களை அனுப்பிவிட்டு, பல கோடி அதிகமான பொருளைக் கொடுத்து, செய் பொருள்களை வரவழைக்கின்றனர். இந்தத் திட்டத்தை கைவிட்டு, அங்கே கிடைக்கின்ற மூலப் பொருள்களைக் கொண்டு செய்பொருள்களை செய்கின்ற தொழில் நிலையங்களை இந்த மாவட்டத்தில் அமைத்தால், இந்த மாவட்டம் செழிக்கும் என்பதை இந்த மன்றத்தில் சொல்லுகிறேன், ஆளும் கட்சிக்கும் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் ரயில் வசதி கிடையாது. இப்பொழுது இருக்கின்ற ரயில்வே லைன்களை எடுத்துக்கொண்டால், கிழக்குக் கடற்கரை ஓரமாக ஒரு ரயில் ஓடுகிறது. மேற்குக் கடற்கரை ஓரமாக ஒரு ரயில் ஓடுகிறது. இவற்றை இணைக்கின்ற ரயில் பாதைகள், ('பீடர் லைன்ஸ்' என்று சொல்லுவார்கள்) இருக்கின்றன. அரக்கோணம்-செங்கல்பட்டு, காட்பாடி-விழுப்புரம், சேலம்-கடலூர், ஈரோடு-திருச்சி, மதுரை-கோயமுத்தூர் ஆகிய லைன்கள் இருக்கின்றன. அதேமாதிரி எங்கள் மாவட்டத்தில் இம்மாதிரி ஒரு இணைப்புப் பாதை, திண்டிவனத்திற்கும், ராணிப் பேட்டைக்கும் இடையே அமைத்தால், செய்யாறு, வந்தவாசி, வாலாஜாபாத் போன்ற எங்கள் மாவட்டத்திலுள்ள ரயிலே இல்லாத இடங்களில் அந்தக் குறை அகற்றப்படும். இம்மாதிரி ரயில்வே லைன் ஏற்பட்டால், நான் சொல்லிய மேற்படி இரண்டு தொழில்களையும் நடத்துவதற்கு அனுகூலமாக இருக்கும். அதனால் வட ஆற்காடு மாவட்டம் வளம் பெறும், ஆளும் கட்சிக்கு நிறைய உறுப்பினர்களை அளிக்கும். ஆகவே, இந்த மாவட்டத்தில், ஆளும் கட்சியினர் தங்கள் கருணைத் திருப்பார்வையை செலுத்த வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **SRI R. PONNAPPA NADAR** : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் நிகழ்த்திய பேருரையின் பேரில், ஒரு **பாராட்டுத் தீர்மானம் வந்ததை ஆதரித்து** ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு எனக்கு இந்தச் சட்ட சபையில் வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். கன்யாகுமாரி ஜில்லாவின் ஒரு பிரதிநிதி என்ற முறையிலே, அந்த ஜில்லாவிலுள்ள ஒரு சில விஷயங்களைப்பற்றி எடுத்துக் கூற வேண்டுமென்று நான் நினைக்கிறேன். கவர்னர் அவர்கள் உரையில் ஒரு ஜில்லாவைப்பற்றி அல்லாமல், பொது விஷயங்கள் தான் அதிகமாக கூறப்பட்டிருக்கும் என்பதை நானும் உணர்கிறேன். ஆனாலும், எங்கள் ஜில்லாவிலே இருக்கிற ஒரு சில காரியங்களை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது நலமாக இருக்கும் என்று கருதி, அந்தப் பணியிலே ஈடுபடுகிறேன்.

[Sri R. Ponnappa Nadar] [25th April 1962

முதல் முதலிலே, பெரிய நீர் பாசனங்களுக்காக அதிக வாய்ப்புகள் அளித்ததாக கவர்னர் உரையிலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. எங்கள் ஜில்லாவிலே விவசாயத்திற்கு அதிகமாக வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக் கொண்டு, அந்த ஜில்லாவிலே உள்ள மக்கள் அதிகமாக விரும்புகிற ஒரு திட்டத்தை அதிவிரைவிலே அரசாங்கம் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது சிற்றூர்-பட்டணங்கால் திட்டம் என்பதை அமைச்சர் அவையின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் திட்டத்தினுல் 15,000 ஏகர் நிலத்திற்கு மேலாக பயன் பெறும் என்று நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து, அதற்கு வேண்டிய எஸ்டிமேட்டுகள் அரசாங் கத்தினிடம் இருக்கின்றன. அதிவிரைவிலே இந்தத் திட்டமானது உருவாகும் என்று அந்த ஜில்லா மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

அடுத்தபடியாக, ரயில் இணைப்பைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இரண்டு புது ரயில் திட்டங்கள் உருவாக்கப்படும் என்று கவர்னர் உரையிலே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ரயில் வண்டியே இல்லாத ஜில்லா கன்யாகுமாரி ஜில்லா என்று எடுத்துக் கூறினுல், அது மிகையாகாது. நமது மாநில அரசாங்கம் மூன்ருவது பிரையாரிடியாக குமரிக்கு ரயில் இணைப்பை சிபார்சு செய்தது. ஆனுல், ஏதோ காரணத்தினுல், அது இன்னும் அமுலாகவில்லை. அதையும் அதிவிரைவிலே உருவாக்குவதற்கு நமது அமைச்சர் அவை ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க் கிறேன்.

தொழில் வளர்ச்சியில் மிகவும் குன்றியிருக்கிற ஜில்லா கன்யா குமாரி ஜில்லா என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 10 லட்சம் மக்கள் வாழும் அந்த ஜில்லாவில், ஒரு சதுர மைலுக்கு சுமார் 2,000-க்கு மேலான ஜனங்கள் வசிக்கின்றனர். தனியார் துறையில் இருந்தாலும் சரி, பொதுத் துறையில் இருந்தாலும் சரி, அங்கே ஒரு புதிய தொழில் அமைவதற்கு ஏதாவது வழி செய்யவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். அங்கே 5,000 ஏகருக்கு மேலாக ரப்பர் பயிர் செய்யப்படுகிறது. அங்கே போதிய ரப்பர் உற்பத்தியாகிறது. 'போம் ரப்பர் பாக்டரி' ஒன்று அங்கே உருவாக்குவதற்கு போதிய வாய்ப்புகளும், வசதிகளும் இருக் கின்றன என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்ஞெரு விஷயத்தைப் பற்றி எடுத்துக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். மணவாளக்குறிச்சிப் பகுதியில் மாஞேஸைட், இலுமனேட், ஸிலிகான் முதலிய உலோகப் பொருள்கள் சம்மந்தப் பட்ட தொழிற்சாலை இருக்கிறது. அங்கே முன்பு மூன்று ஷிப்டு வேலை செய்து வந்தார்கள். ஆனுல், இப்பொழுது அது இரண்டு ஷிப்டாக ஆகியிருக்கிறது. மூன்ருவது ஷிப்டும் உடனடியாகத் துவங்கி அந்த வேலைகளை எடுத்து நடத்த வேண்டும். அங்கே இன்ஞெரு ஆலை தனியார் துறையில் இருந்தது இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. இலுமனேட், மாஞேஸைட் முதலியவை

25th April 1962] [Sri R. Ponnappa Nadar]

ஆடாமிக் கமிஷன் கட்டுப்பாட்டில் இருப்பதால், இப்பொழுது அந்த பாக்டரி சரியான முறையில் வேலை செய்ய முடியாமல் மூடப் பட்டிருக்கிறது. அதையும் உடனடியாகத் திறக்க ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். 1946-லிருந்து அங்கே கட்டாயப் படிப்பு அமுலுக்கு வந்தது. அதன் காரணமாக அங்கே பல படித்த வாலிபர்கள் இருக்கிறார்கள். அங்கே அதிக மான உயர்தரப் பள்ளிகளும், கல்லூரிகளும் அமைக்க வேண்டியது அவசியம். புதிதாக இந்த மாநிலத்தோடு இணைந்த அந்தப் பகுதியில் பல பிரச்சினைகளும் இருக்கின்றன. அவைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் நல்ல முறையிலே செயலாற்றிவருகிறார்கள். ஆனாலும், அங்கே இன்னும் அதிகப்படியான கல்வி ஸ்தாபனங்கள் தேவைப்படுகின்றன. அப்படி பல உயர்தரப் பள்ளிக் கூடங்களை யும், கல்லூரிகளையும் ஏற்படுத்தவேண்டிய சந்தர்ப்பமும், காலமும் இதுதான், அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு விஷயத்தையும் எடுத்துக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். அங்கே ஒரு ட்ரான்ஸ்போர்ட் யூனிட் இருக்கிறது. பல ரூட்டுகளையும் தேசியமயமாக்க கவர்மெண் டிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், ஏதோ காரணத்தினால், அது தடைபட்டிருக்கிறது. அந்த ஜில்லாவில் இருக்கும் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல படித்த வாலிபர்களுக்கும் வேலை தேடிக் கொடுக்கும் வாய்ப்பு இதனால் ஏற்படும்.

நல்ல அழகிய முறையிலே ஒர்க்ஷாப் ஒன்று அங்கே அரசாங்கத் திலிருந்து திறந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அது சரியாக செயல்பட, பல ரூட்டுகளையும் தேசீயமயமாக்கப்படாததால், முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, உடனடியாக அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் வன இலாகாவைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லலாம் என்று நினைக்கிறேன். வன இலாகா அதிகாரிகள் சிலர் சரியாக நடந்துகொள்ளவில்லை. அங்கே பல ஆண்டுகாலமாக காடுகளி லிருந்து சுள்ளி பொறுக்குவது அந்த ஜில்லாவிலுள்ள மக்களின் வழக்கம். அதற்கு இந்த அரசாங்கமும் அனுமதி தந்திருக்கிறது. ஆனாலும், சில அதிகாரிகள் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார் கள். சில அதிகாரிகள் சுள்ளி பொறுக்குவதற்கு தடை செய்வ தால், ஏழை மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங் கமும் நல்ல முறையிலே அந்தப் பிரச்சினையை பரிசீலிக்க வேண்டும். ஏழைகளுடைய கஷ்டங்கள் தீரவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்திலே, சுகாதாரத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டுமென்று விரும்புகிறேன். ஆசாரிப்பள்ளம் என்ற இடத்தில் ஒரு டி. பி. ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. டி. பி. நோயாளிகள் பலரும் அங்கே வந்துகொண்டிருக்கிறார்கள்.

[Sri R. Ponnappa Nadar] [25th April 1962

ஆனால், அங்கே போதிய படுக்கை வசதி இல்லாததால், ஆஸ்பத்திரி அருகாமையில் தாமதிக்கும் நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதிகப்படியான படுக்கை வசதிகள் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். இப்பொழுது நோய்வாய்ப் பட்டவர்கள் நகரத்தின் எல்லைப் புறத்தில் தங்குவதால், நகரத்தின் சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று ஐயப்படுகிறோம். ஆகவே, இதற்கு ஏதாவது பரிகாரம் தேடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஜில்லாவில், பனை ஏறும் தொழிலாளிகள் அதிகமாக வசிக்கிறார்கள். அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அவர்கள் மரத்திலிருந்து விழுந்து அங்கஹீனர்களாகவோ அல்லது உயிர் துறக்கும் நிலைக்கோ வந்துவிடுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு வேண்டிய சலுகைகள் அளிக்கவேண்டும். ஆகவே, உடனடியாக "பாம்-கர் பெடரேஷன்" ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது தொகுதியில், பல இடங்களிலும் சுற்றித் திரிந்தேன். அப்பொழுது பல மக்களும் எங்களைப் பார்த்து, பனை ஏறும் தொழிலாளர்களாகிய நாங்கள் பிற்போக்காக இருக்கிறோம். அவதிப்படுகிறோம். எங்களுக்கு நீங்கள் என்ன உதவிகள் செய்வீர்கள் என்று கேட்டார்கள். எங்களுக்கு அரசாங்கத்திலிருந்து உதவி தேடித்தரவேண்டுமென்று கேட்டார்கள். ஆதலால், கஷ்டப்படும், பிற்போக்காக இருக்கும் அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் காட்டவேண்டும், சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று, அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதில் அரசாங்கம் முன்வரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் க்ரோ மோர் புட் காம்பெயின் (அதிக உணவு உற்பத்திக்) காலத்தில், திருவாங்கூர்-கொச்சி வனப்பிரதேசங்களில் மக்கள் குடியேற அரசாங்கம் அனுமதித்தார்கள். அவர்கள் அப்படிக் குடியேறி, 2,000 ஏக்கர்வரை செப்பனிட்டு, ரப்பர் விவசாயம் செய்து கைவசம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலங்களை பதிவு செய்து கொடுத்தால், அந்த மக்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

இந்த ஜில்லாவைப் பொறுத்தவரை பல பிரச்சினைகளும் இருக்கின்றன. உத்தியோக இணைப்பு, அதில் முக்கியமானது. ஆசிரியர்கள் பிரச்சினைகள் போன்றவைகள் இருக்கின்றன. பல உத்தியோகஸ்தர்களுக்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இவைகளைச் சுமுகமாக தீர்த்து வைக்க ஒரு உயர்தரக் கமிஷனையோ, அல்லது தனிப்பட்ட அதிகாரியையோ போட்டு, நல்ல முறையிலே, உத்தியோக இணைப்பு, உத்தியோக உயர்வு போன்ற விஷயங்களைத் தீர்க்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

25th April 1962]

*SRI A. RAGHAVA REDDI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் பலரும் தங்கள் தொகுதிகளைப் பற்றிப் பேசினார்கள். ஆகையால், எனது கும்மிடிப்பூண்டி தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அங்கே சர்க்கார் அதிகாரிகள், எல்லா இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் தேர்தல் விஷயமாய் கூடியமட்டில் நியாயமாகவே நடந்துகொண்டார்கள். எங்கள் தொகுதியில் சொல்லக்கூடிய அளவுக்கு எவ்விதமான விவகாரங்களும் நடக்கவில்லை என்பதைக் குறித்து பெருமைப்படுகிறேன். இருந்தாலும், அந்தத் தொகுதியிலே நின்று போட்டி இட்ட காங்கிரஸ் அபேட்சகர் ஜாதியைச் சேர்ந்த சிலர் ஜாதி வெறியால் சில காரியங்களைச் செய்தார்கள். நாங்கள் எப்படியோ சமாளிக்க முடிந்தது. ஆனால், இன்றைக்கு தேர்தல் முடிந்த பிறகும் அந்த ஜாதி வெறி நடந்துகொண்டிருக்கிறது, பல விவகாரங்கள் இப்பொழுதும் நடக்கின்றன. ஏதாவது சர்க்காருக்கு தகவல் கிடைத்திருந்தால் நடவடிக்கை எடுத்துச் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து மேலும் மேலும் எதுவும் நடக்காமல் இருக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் போட்டியிட்ட கும்மிடிப்பூண்டி தொகுதியில் ஆந்திரா எல்லை தகராறு இருந்ததால், அது பல ஆண்டுகளாவே பிற்போக்காகவே இருந்திருக்கிறது என்பதைச் சபைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தப் பகுதியில் பல கிராமங்களுக்குப் போகவேண்டுமென்றால், ரோடு வசதிகளே இல்லாமல், ஜீப் வண்டிகள்கூட போகமுடியாத நிலையில்தான் இருக்கிறது. அதற்கெல்லாம் ஒரே ஒரு காரணம் எனக்கு தெரிந்தவரையில் அது ஆந்திராவில் சேர்ந்து போகுமோ என்பதுதான். அதேபோல் ஆந்திரா ராஜ்யத்தில் புறக்கணிக்கப்பட்டு நமக்கு கிடைத்த திருத்தணிப் பகுதிக்கு பெருந்தொகை செலவு செய்து முன்னணிக்கு கொண்டுவந்திருக்கிறார்களே அதே போல இந்தப் பகுதியையும் முன்னுக்குக் கொண்டுவர தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சம்மந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும், ஹரிஜன் காலனிகளில், மனிதனுக்கு வேண்டிய முதல் தேவையான குடிதண்ணீர் வசதிகூட செய்யப்படவில்லை, எனவே அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கே போகவேண்டுமென்றாலும், நடந்துதான் போகவேண்டும். தேர்தலுக்காகக் கிராமம் கிராமமாகப் போனபோது, குறைந்தது நான் 250 மைலுக்கு மேல் நடந்துதான் போனேன் என்பதைச் சொல்லிக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

ஆகவே இந்தப் பகுதியை சம்மந்தப்பட்ட அதிகாரியைக் கொண்டு பார்வையிடச் சொல்லி அது பிற்போக்கான பகுதி என்று முடிவு செய்து அதை நல்ல முறைக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். நமது தமிழ் நாட்டில் இதற்குமுன் பல பெரிய திட்டங்களை எடுத்து நிறைவேற்றிவிட்டார்கள். அநேகமாக பெரிய திட்டங்கள் எல்லாம் எடுத்து நிறைவேற்றப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். எனக்குத் தெரிந்தவரையில் எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்றே நான் நினைத்தேன். இருந்தாலும் பெரிய திட்டங்கள் எல்லாம் எடுத்து முடித்துவிட்டாலும் இன்னும் பல திட்டங்கள் எடுத்து நிறைவேற்றக்கூடியதாக இருக்கின்றன. எங்கள் ஜில்லாவிலுள்ள ஆரணியாறு திட்டத்தை எடுத்து நிறைவேற்றினோம். அது இப்பொழுது ஆந்திர ராஜ்யத்திற்குப் போய்விட்டது. அந்த ஆற்றில் புதுப்பாளையம் என்ற இடத்தில் இதற்குமுன் ஒரு அணை கட்டுவதாக இருந்தது. எந்த காரணத்தினாலோ அது நிறைவேற்றப்படாமல் நின்று இருக்கிறது. அதைப்பற்றி நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் அப்பொழுது மராமத்து அமைச்சராக இருந்ததினால் அவருக்கு தெரியும். 1951-ல் கட்டப்படவேண்டியது, இது சுமார் பத்து வருட காலமாக நின்று போய் இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் அது ஒரு நல்ல திட்டம். அதை உடனடியாக எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை 1951-ல் நினைத்தபடி புதுப்பாளையத்தில் இல்லாமல் வேறு எங்கேயோ காட்டவேண்டும் என்று திட்டம் போட்டுக்கொண்டிருப்பதாக தெரியவருகிறது. முதலில் எங்கு கட்டவேண்டும் என்று நினைத்தார்களோ அங்கேயே கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சமீபத்தில் இதைப் பற்றி நான் விசாரித்ததில் அந்த அணைக்கட்டை புதுப்பாளையம் என்ற இடத்தில் கட்டாமல் புதுவாயில் என்ற இடத்தில் கட்டப் போவதாகத் தெரியவருகிறது. அப்படிக் கட்டுவதால் புதுப்பாளையம், புதுவாயில் மத்தியில் இருக்கிற வாசிகள் எந்த விதமான பயனையும் அடைய முடியாது. புதுப்பாளையம் என்ற இடத்தில் கட்டினால்தான் அந்தப் பகுதியிலுள்ள எல்லா கிராமத்தாரும் பயன் அடையலாம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த வட்டாரத்தில் முக்கியமாக சுமார் 50 கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு இன்னும் மின்சார வசதி கிடைக்கவில்லை. இதற்குக் காரணம்கூட ஆந்திர எல்லை தகராறுதான் என்று தெரியவருகிறது. பொன்னேரி, கும்மிடிப்பூண்டி பகுதிகளுக்கு தண்ணீர் வசதியும், மின்சார வசதியும் எவ்வளவு சீக்கிரத்தில் செய்து கொடுத்தால் அவ்வளவு நன்மை கிடைக்கும் என்று தோன்றுகிறது. அப்படி சீக்கிரம் கொடுத்தால் அந்தப் பகுதி முன்னேற்றமடைய வசதி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் திட்டம் வந்த பிறகு அங்குள்ள யூனியன்களுக்கு அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எந்தக் குறையைச் சொன்னாலும் அவற்றை பஞ்சாயத்து யூனியன் தான் எடுத்துச் செய்யவேண்டும் என்ற அளவில் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கேட்டாலும் அப்படித்தான் சொல்லு

25th April 1962] • [Sri A. Raghava Reddy]

கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் கமிஷனரையும் பார்த்துக்கேட்டால் அவர்களும் இதைத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் சொல்லக்கூடிய குறைகளை எடுத்து நடத்துவதாக இருந்தால் இன்னும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டாலும் அவைகளை எடுத்து நிறைவேற்றவே முடியாத அளவுக்கு குறைகள். அவர்களுக்கு வேண்டிய நிதி வசதியைக் கொடுக்கவில்லை. திட்டங்களை எடுத்து நிறைவேற்ற முடியாத அளவுக்கு குறைகள் இருக்கின்றன. அவர்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்திருந்தும் அவர்களுக்கு வேண்டிய நிதி வசதியைக் கொடுக்கவில்லை. திட்டங்களை எடுத்து நிறைவேற்றக்கூடிய நிதி வசதி அவர்களுக்கு கிடையாது. ஆகவே அவர்கள் திட்டங்களை சீக்கிரத்தில் எடுத்து நிறைவேற்றக்கூடிய அளவில் நிதி வசதி அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கமிஷனர்களுக்கு இவ்வளவு அதிகாரங்கள் கொடுத்திருந்தும் கமிஷனர்களாக நியமிக்கக்கூடியவர்களை சரியானவர்களாக நியமிக்கப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். எங்கள் வட்டாரத்தை எடுத்துக்கொண்டால் அங்கு விவசாய இலாகாவிலிருந்து வந்த டெமான்ஸ்ட்ரேட்டரை கமிஷனராக நியமித்திருக்கிறார். அவர் தான் அங்கு பஞ்சாயத்து கமிஷனராக பணியாற்றிவருகிறார். அவருக்கு ஆரம்பக் கல்வி என்றால் என்ன என்று கூட தெரியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் அவருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரே தகராறு என்று கேள்விப்படுகிறேன். அப்படி நியமிக்காமல் அனுபவம் வாய்ந்தவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக ரெவினியு இலாகாவிலிருந்து வந்தவர்களை கமிஷனர்களாக நியமித்தால் அவர்கள் நல்லபடியாக வேலை செய்வதாக தெரியவருகிறது. அவர்களுக்குத்தான் கிராமவாசிகளுடன் பழக நல்ல அனுபவம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் கூடியமட்டில் அந்த இலாகாவிலிருந்தே கமிஷனர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற இலாகாவிலிருந்து நியமிக்கப்படுகிறவர்கள் நன்றாக நடத்த முடியவில்லை என்று தெரியவருகிறது.

அடுத்தபடியாக செங்கற்பட்டு ஜில்லா விவசாயத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். நெல் விலை அதிகமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி கிடைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இங்கு பேசிய அத்தனை பேர்களும் என்னைப்போல் விவசாயம் செய்யக்கூடிய பகுதியிலிருந்து வந்தவர்கள் தான் என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லோருக்கும் தெரியும் விவசாயம் என்றால் என்ன என்பது. சாதாரணமாக ஒரு ஏக்கர் விவசாயம் செய்வதாக இருந்தால் இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் ஏக்கருக்கு 200 முதல் 250 ரூபாய் வரை செலவாகிறது. அப்படி செலவு செய்தால் ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 மூட்டை நெல் கிடைக்கிறது. ஒரு மூட்டை ரூ. 25 என்று விற்றாலும் ஒரு ஏக்கருக்கு சுமார் 300 ரூபாய் தான் கிடைக்கிறது. செலவோ 200 முதல் 250 வரை ரூபாயாகிறது. இந்த நிலைமையில் விலைவாசிகள் எப்படி உயராமல் இருக்கும்.

[Sri A. Raghava Reddy] [25th April 1962

ஆகவே மற்ற பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல் நெல் விலையை மட்டும் கட்டுப்படுத்தி பிரயோசனமில்லை. மற்ற சாமான்களின் விலையையும் கட்டுப்படுத்த வேண்டும். சமீபத்தில் கிராம வாசிகள் கூட்டம் போட்டு சுவர்ன சம்பா நெல் சாகுபடி செய்வதில் வரவு-செலவு கணக்குப்பார்த்தால் பலனில்லை என்று தீர்மானம் செய்தார்கள். நானும் அந்தக் கூட்டத்திற்கு போயிருந்தேன். நாட்டில் உணவுப்பொருள் பற்றுக்குறை இருக்கிறது. அதனால் நெல் பயிரிடாமல் இருக்கக்கூடாது, அவசியம் நெல் பயிரிட வேண்டும் என்று சொல்லி நெல் சாகுபடி செய்ய தீர்மானம் செய்தோம். அதன் பிறகு அவர்கள் ஒத்துக்கொண்டு நெல் பயிரிடுகிறார்கள். இப்படி மற்றப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்தாமல் நெல் விலையை மட்டும் கட்டுப்படுத்தினால் ஒவ்வொரு கிராமத்திலும் நெல் பயிரிடுவது இல்லை யென்று விவசாயிகள் இருந்து விட்டால் என்னவாகும் என்பதை அரசாங்கம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ஆகவே நிலைமையை சர்க்கார் விசாரித்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவேண்டும். அப்படிக் கட்டுப்படுத்தும் போது விவசாயத்திற்கு வேண்டிய மற்ற பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணவுப் பொருள் உற்பத்தி செய்வதற்கு உரத்தையும் சர்க்கார் நல்ல முறையில் போதுமான அளவுக்கு கொடுக்க வேண்டும். காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே உரத்தை சர்க்காரே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நல்ல முறையில் கொடுக்க முன்வரவேண்டும். அதையும் ஒழுங்காக கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே வேண்டிய உரத்தை தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்து ஒழுங்கான முறையில் கொடுக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கே எனக்கு சில நிமிஷங்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த கனம் சபா நாயகருக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **Sri S. NANJUNDA ROW :** கனம் சபாநாயகர் அவர்களே, 23-ம் தேதியன்று நம் சட்டசபைக்கு டி.எம்.கே. அங்கத்தினர்கள் கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தின்போது வராமல் வெளியே இருந்தார்கள். கவர்னருடைய பிரசங்கத்திற்கு வராமல் இந்த சட்டசபை கூட்டத்திற்கு வந்து ஆரம்ப நாள் முதற்கொண்டு கவர்னர் அவர்கள் உரையின்மீது விவாதிக்கும்போது அதில் கலந்துகொண்டு பேசுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் பெருமாள் கோவிலுக்குப் போகாமல் பெருமாளுடைய பிரசாதமாகிய புளியோதரையை வாங்கிச் சாப்பிடுவதுபோல் இருக்கிறது. இதை நான் சொல்லும்போது அவர்களைப்பற்றி குறை சொல்லவேண்டும் என்ற அளவில் சொல்லவில்லை. அவர்கள் வராததைக் கண்டு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கவர்னர் என்பவர் யார்? நம்முடைய ஜனநாயக ஆட்சியில் கவர்னர்தான் உயர்ந்த அதிகாரி. கவர்னர்தான் ஜனநாயக ஆட்சியில் இந்த நிர்வாகத்தை நடத்தக்கூடியவர். அப்படி

25th April 1962] [Sri S. Nanjunda Row]

நடத்தக்கூடிய பொறுப்பு அவருக்குத்தான் இருக்கிறது. கவர்னர் யார் என்ற விவரம் தெரியாமல இருப்பதால்தான் நேற்று பேசிய அங்கத்தினர் ஒருவர் கவர்னர் என்பவர் ஒரு சாதாரணமானவர் என்றும் குறிப்பிட்டார். கவர்னரைப்பற்றிய விவரங்களை அவர் நன்ருக தெரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அது தெரியாமல் இருந்ததால்தான் அவர் அப்படி பேசி இருக்கிருர். கவர்னரைப்பற்றி நமது அரசியல் சட்டத்தில் நல்ல முறையில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்து பார்க்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். டி.எம்.கே. அங்கத்தினர்களாகிய நீங்கள் திருக்குறளில் நம்பிக்கையுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். ஜனநாயக திருக்குறளான கான்ஸ்டிட்யூஷனில் கவர்னரைப்பற்றி குறிப்பிட்டிருப்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். நமது இந்திய அரசியல் சட்டத்தின் நாலாவது பாகத்தில் 156-வது செக்ஷனில் கவர்னர்தான் இந்த நிர்வாகத்தில் பெரிய அதிகாரியாக இருக்கிருர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேமாதிரி அவர் இந்த தமிழ் நாட்டு சட்டசபை நிர்வாகத்திற்கு பெரியவராக இருக்கிருர். அவருக்குத்தான் அந்த அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதேமாதிரி நாலாவது பாகத்தில் 155-வது செக்ஷனில் நமது இந்திய ஜனாதிபதிதான் கவர்னரை நியமிக்கிருர். அவர் நியமித்திருப்பதால் ஜனாதிபதிக்குக் கொடுக்கக் கூடிய மரியாதைகளையெல்லாம் கவர்னருக்கு நாம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படியே கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்திற்கு அந்த கனம் அங்கத்தினர்கள் வராமல் இருந்தது 'அன்பார்லிமெண்டரி' செய்கையாகும்; அல்லது கான்ஸ்டிட்யூஷனில் நம்பிக்கை இல்லாத ஒரு செய்கையாகும் என்பதை நான் மிகவும் தாழ்மையுடன் சொல்ல விரும்புகிறேன். 10-30 a.m.

கவர்னர் அவர்கள் இந்தச் சபைக்கு வந்தபோது அவரை வரவேற்க யார் போனுர்கள்? நாமெல்லோரும் தேர்ந்தெடுத்த இந்தச் சபைத் தலைவரும், கவுன்சில் தலைவரும, மற்றும் நிர்வாகப் பொறுப்பிலுள்ள சட்டசபை காரியதரிசியும், கவுன்சில் காரியதரிசியும் இவர்களெல்லோரும் சென்று எதிர்கொண்டு அழைத்து வந்தார்கள். நம்முடைய சபைத் தலைவர் போய் அழைத்து வருகிற அளவுக்கு கௌரவம் வாய்ந்த ஒருவருக்கு மரியாதை செய்யாதது பெரிய தவறு என்று இந்தக் கூட்டத்திற்கு அன்று வராத நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் அவர்களை எந்தவிதமான விரோத மனப்பான்மையிலோ, வித்தியாச மனப்பான்மையிலோ இல்லாமல், நல்ல முறையில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், இது போன்ற செய்கையை இனியாவது செய்யாதீர்கள், நம்முடைய கான்ஸ்டிட்யூஷனுக்குக் கண்டிப்பாக மரியாதை காட்டுங்கள் என்று. அவர்கள் இனிமேல் அப்பேர்ப்பட்ட காரியங்களில் ஈடுபடாமல் நம்முடைய கான்ஸ்டிட்யூஷனுக்கு நல்ல மதிப்பு கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

[Sri S. Nanjunda Row] [25th April 1962

நான் வேடசெந்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த அங்கத்தினர். நான் அதைச் சொல்லவேண்டும். சொல்லாமலிருந்தால் பெரிய தவருகும். நான் மைசூர் நாட்டில் பிறந்தவன். மைசூர் நாட்டில் பிறந்தவனுக்கும் இந்த நாட்டிலே இடம் உண்டா என்று கேட்கலாம். ஒரே உலகத்திலே (one world) நம்பிக்கையுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர்களும், மைசூர், ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு ஆகிய இந்த நான்கும் திராவிட நாடு என்று நம்புகின்ற நண்பர்களும் என்னைப்பற்றி எந்த விதத்தில் குறை சொன்னர்கள் எனறு இந்த இடத்தில் நான் சொல்ல விரும்பவில்லை. எனக்கு தமிழ்நாட்டிலுள்ள எல்லாரும் நண்பர்கள் என்றுதான் நினைக்கிறேன். எனக்கு யாரும் எதிரிகள் வேண்டாமென்று நினைக்கிறேன். யாருடைய மனதையும் புண்படுத்த நான் விரும்பவில்லை. நான் மைசூரில் 25 வருஷங்களாக வளர்ந்து, சென்ற 15 வருஷங்களாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றேன். வயிற்றுப் பிழைப்புக்காக வந்தேனு இல்லையா என்பதைப்பற்றியும், என்னுடைய வாழ்க்கையைப்பற்றியும் நான் சொல்ல வேண்டியதில்லை. ஆனல், சென்ற 15 வருஷங்களாக தமிழ் நாட்டின் தண்ணீரைச் சாப்பிட்டு, தமிழ் மக்கள் மத்தியிலே வாழ்ந்துவருகிறேன். உண்மையான தேசிய ஒருமைப்பாடு (நேஷனல் இன்டக்ரேஷன்) ஏற்படுகின்ற முறையில், சாதாரண ஊழியனுகிய என்னை தேர்தலுக்கு நிறுத்தி வைத்து, இந்த அந்தஸ்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த காங்கிரஸ் ஸ்தாபனத்திலுள்ள, காந்திய பரம்பரையிலே வந்த தலைவருக்கும், மற்ற எல்லாக் காங்கிரஸ் நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். காங்கிரஸ் தலைவர்களுக்கு நன்றி தெரிவிப்பது மட்டுமல்ல, மற்ற தமிழ் மக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வளவு மதிப்புள்ள ஸ்தானத்தை எனக்குக் கொடுத்த காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று நான் பேசுகிற தமிழ் என்னுடைய தாய் சொல்லிக் கொடுத்த தமிழ் அல்ல. இன்று நான் பேசுகிற தமிழ், தமிழ் மக்கள் சொல்லிக்கொடுத்த தமிழ் ஆகும். ஆகையால், இதில் குறை இருந்தால்கூட, தைரியமாக தமிழில்தான் பேசவேண்டுமென்ற எண்ணத்தோடு பேசுகின்றேன். ஆங்கிலத்தில் பேசினல் மற்றவர்கள் குறை சொல்லக்கூடும் என்ற காரணத்தால், ஆங்கிலத்தில் பேசாது தமிழில் பேசுகின்றேன்.

வேடசெந்தூரில் நான் தேர்தலுக்கு நின்றபோது, சுவரொட்டிகளில் எந்த எந்த விதத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் எழுதினர்கள் என்பதை நினைக்கும்போது மனதிற்கு வருத்தம் ஏற்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானல், "டாக்டர் திருமதி சௌந்தரம் அம்மையார் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைக் கொண்டுவந்து இனிமேல் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு வரி போடுவார்கள், ஆகையால், அந்தக் கட்சிக்கு வோட்டு போடாதீர்கள்" என்று கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்காரர்கள், குடும்பக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை உள்ள அவர்கள், இம்மாதிரி பிரசாரம் செய்தார்கள். அதையெல்லாம் நினைக்கும்போது வருத்தம் உண்டாகின்றது.

25th April 1962] [Sri S. Nanjunda Row]

வேடசெந்தூர் தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு விஷயங்களைக் கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன். குடவனாறு திட்டத்தைப்பற்றி ஒரு நண்பர் பேசினார். வெள்ளையணையைப் பற்றி திராவிடக் கழகத்தார் எச்சரித்தார்கள். ஆனால், செய்யவில்லையா? என்று கேட்டார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி நண்பர் எனக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார்கள். "வெள்ளையணைக்குத் தண்ணீர் கொடுக்கிறார்கள், வேடசெந்தூருக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை" என்றார்கள். வெள்ளையணைக்குக் கொடுக்கிறார்கள் வேடசெந்தூருக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். காமராஜ் சர்க்காரிலே வெள்ளையணைக்கும் வேடசெந்தூருக்கும் வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்ற மனப்பான்மை இருப்பதால், பாகுபாடு இல்லாத இந்தச் சர்க்காரிலே எந்தக் கட்சி வித்தியாசமும் இல்லாமல், எல்லோருக்கும் நன்மை ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது. குடவனாறு திட்டம் நல்ல முறையில் மேற்கொள்ளப்படவேண்டும். இது காவேரியைப் போல், அமராவதியை போன்றது அல்ல. தண்ணீர் இல்லாத இடத்திலே பஞ்சத்திலே வாழ்கின்ற மக்களுக்குப் பல நன்மைகளைக் கொடுக்கின்ற குடவனாறு திட்டத்தை நல்ல முறையில் எடுத்து நிறைவேற்றுவார்கள் இந்த சர்க்கார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எந்த எந்த விதத்திலே மக்களிடத்தில் பிரசாரம் செய்தாலுங்கூட, ஜனங்கள் எது நேர்மை, எது நல்லது என்று தெரிந்து கொண்டு தக்க விடையளித்தார்கள் சென்ற பொதுத் தேர்தலில். திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களில் 50 பேர்களைத் தேர்ந்தெடுத்து மக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி செலுத்தவேண்டும். எதற்காக என்றால், அவர்களுக்கும் வாய்ப்பு அளித்து மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதற்காக. மக்களுக்கு உணவு வேண்டும், உடை வேண்டும், வீடு வேண்டும், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு இருக்கவேண்டும், தொழில் பெருக வேண்டும். இப்படிப்பட்ட வாய்ப்புகள் காங்கிரஸ் சர்க்காரில் ஏற்படும் என்ற நம்பிக்கையில்தான், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த என்போன்ற சாதாரண ஊழியனையும் மக்கள் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பியிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு எந்தவித ஏமாற்றமும் ஏற்படாத வகையில் சேவை செய்யும் நோக்கத்தோடு இங்கு வந்துள்ளேன். கவர்னர் உரையில் குறிப்பிட்டபடி, எல்லோரும் ஒரே நோக்கத்தோடு, ஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் பணியாற்றவேண்டுமென்று தெரிவித்து, கவர்னர் உரைக்கு ஆதரவு தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

Sri K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் எத்தனையோ விஷயங்களைக் கூறியிருந்தாலும்கூட, ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறவில்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது, உண்மையிலேயே வருத்தம் அடைகின்றேன். அதாவது இந்த

[Sri K. R. Nallasivam] [25th April 1962

வருஷம் நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், பல மாவட்டங்களில் தண்ணீர் பாயக்கூடிய பகுதிகள் போக, மற்ற பகுதிகளிலெல்லாம் அனேகமாக பஞ்ச நிலை பரவியிருக்கிறது. அதைப் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளாமலிருப்பதுபற்றி உண்மையிலேயே நான் வருந்துகிறேன். ஏனென்றால், தேர்தலிலே நடந்த பல நிகழ்ச்சிகளைப்பற்றி நாம் எல்லோரும் எவ்வளவோ பேசுகின்றோம். ஆனால், தேர்தலைப்பற்றி நினைக்கும்போது உணர்ச்சி வயப்பட்டு பேசுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அவற்றை அவ்வளவு பெரிதாக நான் கணக்கில் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. தேர்தல் முடிந்துவிட்டது. தேர்தலுக்குப் பின்னால் இந்த ராஜ்யத்தின் நலனில் நாம் எல்லோரும் எந்த அளவுக்குப் பங்கெடுத்துக்கொள்ள முடியும் என்ற அடிப்படையிலேதான் விவாதிப்பது நலமாக இருக்கும். அந்த அடிப்படையில் பஞ்ச நிலையைப் பொறுத்தவரையில், அடியோடு குறிப்பிடாமல் இருப்பதானது அந்த ஜனங்களுக்கெல்லாம் நாம் நன்மை செய்வதற்கு ஏது அற்ற ஒரு நிலையை உண்டாக்கி இருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. விவசாயத்தை நம்பியிருக்கும் மக்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க வேண்டும். சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த விஷயங்களில் கவனம் செலுத்தியாக வேண்டும். சட்டசபையில் இருப்பவர்களும் இதை உணரவேண்டும். ஏனோ இதைப்பற்றி இங்கு அதிகம் குறிப்பிடப்படவில்லை. என்னைப் பொறுத்தவரை, கோயமுத்தூர், திருச்சி, சேலம் ஆகிய மூன்று ஜில்லாக்களில் பெரும் பகுதிகளில் பஞ்ச நிலை அதிகமாகப் பரவியிருக்கிறது. இதைச் சர்க்கார் நல்ல முறையில் பரிசிலனை செய்து, ஏதாவது திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்துவிட்டன. முதல் திட்டத்திலே விவசாயத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கக்கூடிய வகையில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கவேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்கள் போடப்பட்டு வேலை அந்த முறையில் நடக்கிறது. ஆனால் இந்த நாடு ஒரு விவசாய நாடு. இந்த நாட்டிலே நிச்சயமாக இன்னும் ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டாலும்கூட விவசாயம்தான் பிரதான தொழிலாக இருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. ஆகவே விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு நிச்சயமாக ஒரு முக்கிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக பால நீர்ப்பாசனத் திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். ஓரளவு வேலை நடந்திருக்கிறது. நமக்குள்ள நீராதாரங்கள் அனைத்தையும் நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதில் எவ்விதமான ஐயமும் கிடையாது. ஆனால் இன்னும் அண்டை ராஜ்யங்களில் உள்ள நீராதாரங்களைப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதில் பரந்த கண்ணோட்டத்தோடு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்

25th April 1962] [Sri K. R. Nallasivam]

எடுக்கவில்லையென்பதுதான் என்னுடைய பிரதான குற்றச் சாட்டாகும். பிரிவினையை நானும் எதிர்க்கிறேன். இமயத்தில் இருந்து கன்யாகுமரி வரையில் பூரணமாக இணைந்து இருக்க வேண்டுமென்ற விருப்பம் உள்ளவன் நான். பிரிவினை சக்தி கூடாது என்று பேசுகின்றார்களே தவிர உண்மையில் காங்கிரஸ் கட்சிதான் பிரிவினைச் சக்திக்கு ஆக்கமளித்து வருகிறதோ என்று நான் ஐயுறுகிறேன். கேரளாவில் தண்ணீர் வீணாக ஓடுகிறதே என்றால் அவர்கள் அதை கொடுக்க முன் வரவில்லை. மைசூருடன் பேசிப் பெறலாம் என்றால் அதில் பல சிக்கல். ஆந்திராவில் உள்ள கோதாவரி தண்ணீரைப் பயன் படுத்திக்கொள்ளலாம் என்றாலும் அதில் பல தடைகள். அகில இந்தியா பூராவும் எல்லா இடங் களிலும் காங்கிரஸ் கட்சிதான் நிர்வாகத்தை நடத்தி வருகிறது. தேசிய ஐக்கியத்தை நாம் உண்மையிலேயே உருவாக்க வேண்டு மென்றால் பிரிவினை சக்திகளுக்கு ஒரு சவால்விடுக்கவேண்டு மென்றால் வடக்கேயுள்ள கங்கை நீரை தென்னகத்திலுள்ள நாம் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கவேண்டும். கோதாவரித் தண்ணீர் ஒரு ராஜ்யத்திற்கு மட்டும்தான் உரிமையுடையது என்று இருக்கக்கூடாது. அதற்குத்தக்க வகையில் அகில இந்திய ரீதியில் ஓர் தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு இல்லாதவகையில் தேசிய ஐக்கியத்தை, ஒருமைப்பாட்டைப்பற்றிப் பேசுவதில் பயன் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக நான் நம்புகிறேன். அதுவே என்னுடைய கருத்து. அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்க காங்கிரஸ் கட்சி முன்வராது. ஒரு ராஜ்யத்தில் ஆட்சி செலுத்துகின்ற காங்கிரஸ் கட்சிக்கும், இன்னொரு ராஜ்யத் தில் ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்கும், ஒரு ஒருமைப்பாடு உண்டாக வழி இல்லாத நிலைமையில் வெறும் பிரசங்க அடிப்படை யில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியைக் கொண்டுவந்துவிட முடியாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கங்கை நீரில் 20 சத விகிதம் தான் பயன்படுத்திக்கொள்ளப் படுகிறது. கோதாவரி நீரில் 50 சத விகிதம் தான் பயன்படுகிறது. ஆகவே இப்படி அண்டை ராஜ்யங்களில் நம் தேசத்தில் உள்ள ஆறுகளில் நீர் விரயமாகாதபடி வறண்ட பகுதிகளும் பஞ்சப் பகுதி களும் பயனடையத்தக்க வகையில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி பற்றிப் பலர் குறிப்பிட்டுப் பேசினார்கள். விலைவாசி யைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னவுடன் ஆளும்தாப்பில் இருந்து விலைவாசியைக் கட்டுப்படுத்துவதா? இன்றைக்கு விவசாயிகளுக்கு ஆகக்கூடிய செலவே அதிகமாக இருக்கிறதே. இதைக் குறைத்தால் அவர்களுக்குக் கட்டுபடி யாகுமா என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நான் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவன். எல்லாக் கட்சிக்காரர்களும் விலை வாசியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று சொல்கிறபோது ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். தொழிற்சாலைப் பொருள் களுக்கு எப்படி அடிப்படை விலையை நிர்ணயிக்க ஒரு முறை இருக்கிறதோ அத்தகைய ஒரு முறையை தொழிற்சாலைப் பொருள்களின் அடிப்படை விலைக்கு ஏற்றப்படி விவசாயப்

[Sri K. R. Nallasivam] [25th April 1962

பொருள்களுக்கும் நிர்ணயிக்க ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும். எனக்குத்தெரியும் இது மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும் சேர்ந்து எடுக்கவேண்டிய ஒரு நடவடிக்கையாகும். ஏதோ ஒரு பொருள் என்றால் ராஜ்ய சர்க்காரே செய்யலாம். ஆகவே இதுபற்றியும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

மொழிவழியாக மாநிலங்களைப் பிரித்து அமைத்த போது நம்முடைய மாநிலத்தின் நிர்வாக மொழியாக நம்முடைய தாய் மொழியாகிய தமிழை ஏற்றுக்கொண்டோம். தமிழ் சட்டசபைத் துறையிலும், நிர்வாகத் துறையிலும் வரவேண்டுமென்பதற்காக நாம் ஆரம்பத்தில் எடுத்துக்கொண்ட ஒரு முயற்சி பொங்கலாகத் தான் இருக்கிறது என்று நம்புகிறேன். காரணம் இன்னமும் சட்டசபையில் ஒரு அறிவிப்புக் கொடுக்கவேண்டுமென்றால் தீர்மானம் கொடுக்கவேண்டுமென்றால் ஆங்கிலத்தில்தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. மத்திய ஆட்சி மொழியைப்பற்றி நமக்கு கவலை. ஆனால் சட்டசபையைப் பொறுத்த வரையிலும், அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் நாம் தமிழில் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவையில் ஒரு கல்லூரியில் தமிழிலேயே போதனை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் இங்கே நாம் அதைக் கையாள்வதில் காட்டுகிற தயக்கம் அங்கேயும் அதைப் பாதிக்கிறது என்று நினைக்கிறேன். அவர்களுடைய முயற்சிகூட கொஞ்சம் தளர்ந்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஆகவே இப்படி ஆங்கிலத்திற்கு உயிரூட்ட முயற்சிக்காமல் இங்கே எல்லாவகையிலும் தமிழில் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அதற்குவேண்டிய ஒரு திட்டத்தை அமைத்து படிப்படியாக சிலபல கட்டங்களில் தமிழை நிர்வாகத் துறையில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை காணோம் என்று சொல்லி கவர்னர் பெருமானுடைய உரையை ஆதரிக்க முடியாத நிலைமைக்கு வருந்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** SRI K. T. KOSALRAM:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவித்து ஆதரித்துப் பேசுகின்றேன். இந்த விவாதத்திலே எதிர்க் கட்சி நண்பர்கள் "விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படவில்லையே, ஏன்" என்று கேட்டார்கள். உண்மையில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்தான். ஆனால் விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று அரசியல் கோஷமாகச் சொல்கிறார்களா? உண்மையில் விலைவாசியைக் குறைக்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அரசாங்கத்தைத் தங்கள் கையில் கொடுத்துவிட்டால் "நாங்கள் செய்வோம்" என்று சொல்கிறார்கள்.

25th April 1962] [Sri K. T. Kosalram]

(Mr. Deputy Speaker in the Chair)

நகரங்களில் இருக்கும் மக்களிடத்தில் விலைவாசியைப்பற்றிச் சொல்லும்போது சீப் பாபுலாரிடி என்று சொல்லுவார்களே அந்த ரீதியில் அவர்கள் பேசுவது இருக்கிறது என்று நான் சொல்லாமல் இருக்க முடியாது. கிராமங்களில் சென்றேமானல் 2 அணு கொடுத்து முன்பு களையெடுத்தார்கள். இப்போது 2 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது.

கிராமங்களில் சுபிட்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. கிராமங்களில் சுபிட்சம் ஏற்பட்டிருப்பதற்கு ஒரே காரணம் விலைவாசி ஏற்றந்தான். விலை ஏறுகின்ற அதே சமயத்தில் வாங்கும் சக்தி அதிகமாகி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நகரத்தில் வாழ்கின்றவர்கள், அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பவர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள், இவர்களுக்கெல்லாம் வாழ்க்கைக்கு என்னென்ன வசதிவேண்டுமோ அதற்கெல்லாம் நகரத்தில் 'காரண்டி' இருக்கிறது என்று சொல்லலாம். கிராம மக்களுக்கு நிச்சயமாக என்ன கிடைக்கும் என்பதை யாராலும் வரையறுக்க முடியாது. அதே நேரத்தில் அரசாங்கத்தை எங்கள் கையில் கொடுத்து விட்டால் விலைவாசியைக் குறைத்து விடுவோம் என்று சிலர் சொல்லுகிறார்கள். மக்கள் வோட்டைப் பெற்றல்லவா அரசாங்கத்திற்கு வரவேண்டும். நகரத்தில் விலைவாசி அதிகமாக இருக்கிறது என்பது உண்மை. விலைவாசியைக் குறைப்பதற்கு வழி என்னவென்று சொல்லாமல் 3 படி அரிசி போட வேண்டுமென்று சொன்னல் அது அர்த்தமற்ற பேச்சாகத்தான் இருக்க முடியும். இதை அகில இந்திய ரீதியில்தான் போக்க முடியுமே தவிர, தமிழக அரசாங்கம் ஏதும் செய்துவிட முடியாது. விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று சொல்லும்போது 'கண்ட்ரோல்' என்ற பூதம் வந்து விடுகிறது. அது மனிதனையே சாப்பிட்டுவிடும் என்பதை அரசாங்கம் மனதில் கொள்ள வேண்டும். கண்ட்ரோல் மூலம் எவ்வளவு தவறுகள் நடக்கின்றன என்பதை நாம் அநுபவ பூர்வமாகப் பார்த்திருக்கிறோம். மற்றொரு முறை, உணவு தானியங்களை 'சப்சிடைஸ்' பண்ணுவதுதான். எந்த முறையில் 'சப்சிடைஸ்' பண்ணுவது, எந்த முறையில் மலிவாகக் கிடைக்கச் செய்வது என்பதுதான் நகரங்களின் பிரச்னை. விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள் கிராமத்தில் வந்து அவ்வாறு சொல்லட்டும் பார்க்கிறேன். நகரத்திலே வேண்டுமானல் மேடையிலே பேசலாம். கிராமங்களிலே இரண்டணு கூலி வாங்கிக் கொண்டிருந்தவன் இன்றைக்கு இரண்டு ரூபாய் சம்பாதிக்கிறன். நாம் விலைவாசியைக் குறைத்தால் அங்கிருக்கும் உழவனுடைய வயிற்றெரிச்சலை வாங்கியதாகத்தான் ஆகும். அரசியல் ரீதியில் இல்லாமல் உண்மையில் வாழ்க்கைத்தரம் நல்ல முறையில் அமைய வேண்டுமென்ற எண்ணத்துடன் பேசினல் அர்த்தம் இருக்கிறது. ஆனல் அம்மாதிரிப் பேசுவதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் இதற்கு ஒரு மாற்று யோசனை சொன்னர்களானல் அரசாங்கம் கண்டிப்பாக அதைச் செய்யும்.

[Sri K. T. Kosalram] [25th April 1962

நண்பர் கருணாநிதி அவர்கள் ஏராளமான குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அந்தக் குற்றச் சாட்டுகளைத் திருப்பிச் சொல்ல வேண்டுமானால், ஊர் ஊராக, கிராமம் கிராமமாக நடந்த செய்திகளைப் பத்திரிகைகளில் இருந்து படித்துக் காட்டிவிட்டால் போதுமானது. எத்தனையோ காலித்தனங்கள் ஒவ்வொரு ஊரிலும் நடந்திருக்கிறது என்பதை வரிசையாகச் சொல்ல முடியும். ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு நண்பர் வெட்டிக் கொல்லப்பட்டார். நீங்கள் கொலை செய்ததன் காரணமாக அங்குள்ள மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வெறுத்து காங்கிரசுக்குப் பெருத்த ஆதரவைத் தந்தார்கள். காலித்தனம் எங்கெங்கு நடைபெற்றதோ அங்கெல்லாம் காங்கிரசுக்குப் பேராதரவு கிடைத்திருக்கிறது. அரக்கோணத்திலே எல்லப்ப முதலியார் என்ற மண்டல காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியை அடித்து ஆற்றிலே தூக்கி எறிந்திருக்கிறார்கள். திண்டுக்கல்லில் சுப்பிரமணியம், டேவிட் என்ற இரண்டு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் தாக்கப்பட்டு சடையன், மாறன், பழனி என்ற மூன்று பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திருச்சி ஜில்லாவில் துரைராஜ் என்பவரைக் கத்தியால் குத்தி, அடித்திருக்கிறார்கள். இவ்வாறு குத்தும் அளவுக்கு அரசியல் மேதைகள் வந்திருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கிறது என்று அரசாங்கத்தைச் சொல்ல முடியுமே தவிர, வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI K. R. NALLASIVAM : இவர் குறிப்பிடக்கூடிய விஷயங்கள் எல்லாம் அநேகமாக கோர்ட்டில் இருக்குமென்று நினைக்கிறேன். அதைக் குறிப்பிட்டுப் பேசலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, what the hon. Member is mentioning is only a fact which has appeared in the newspapers. Even if it is sub judice, it does not matter.

SRI K. T. KOSALRAM : நமது பெண் அங்கத்தினர் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் நல்ல வழக்கறிஞர். இதற்கு ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்தார்கள்.

MR. DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் கோர்ட்டில் நடக்கும் வழக்குகள் பற்றி ஒன்றும் பேசவில்லை. பத்திரிகைச் செய்திகளைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

SRI K. T. KOSALRAM : பணம் கொடுத்து வோட்டு வாங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. பணம் கொடுப்பது, உருட்டல் மிரட்டல்களைச் செய்து வோட்டுப்பெறுவது போன்ற முறைகளை எதிர்க்கட்சிக்காரர்கள் ஏராளமாகச் செய்திருக்கிறார்கள். பணம் கொடுப்பது குற்றம். பணம் கொடுப்பவர்கள் கள்ள மார்க்கெட்

25th April 1962] [Sri K. T. Kosalram]

பணத்தைத்தான் வோட்டர்களுக்குக் கொடுக்க முன் வருகிறார்கள். இரண்டும் மாபெரும் தவறுகளாகும். இந்தக் குற்றத்தைச் செய்தவர்களைப் போலீசார் பிடிக்கலாம், சிறையிலே தள்ளலாம், சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு உண்மையிலேயே பணம் கொடுத்து வோட்டு வாங்குவதில் நம்பிக்கை இல்லையென்றால் அப்படிக் கொடுப்பவர்களைப் போலீசில் பிடித்துக் கொடுக்கலாம். அவ்வாறு பிடித்துக் கொடுப்பதையோ, பிடிக்கப்படுவதையோ தடுக்க ஒருவருக்கும் உரிமை இல்லை. திருடன் வருகிறான் என்றால் அவனை ஊர்க்காரன் பிடித்துக் கொடுக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

11-00 a.m.

Please allow me five more minutes பணம் கொடுத்து வோட்டு வாங்குகிறார்கள் என்று பேசுவதில் அர்த்தமில்லை. 12 லட்சம் ரூபாய் செலவு செய்தவர்கள் எங்கள் ஜில்லாவில் இருக்கிறார்கள். பணம் கொடுத்து வோட்டு வாங்க வேண்டுமென்று நினைப்பவர்கள் தான் இப்படிச் சொல்கிறார்கள். நாங்கள் பணம் கொடுத்தவர்களை போலீஸில் பிடித்துக் கொடுத்திருக்கிறோம். என் தொகுதிக்கு அடுத்த தொகுதியில் 3,400 ரூபாய் பிடித்து போலீஸாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் பணம் அரசாங்க கஜானாவில் வந்து சேர்ந்திருக்கிறது. இதைச் செய்ய முடியாது என்றல்ல. முடியும். ஆனால் நாமும் கொடுக்கிறோமே. ஆகவே காங்கிரஸ்காரர்கள் பணம் கொடுக்கிறார்கள், பணம் கொடுக்கிறார்கள் என்று கூறி நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்றுதான் நினைக்கிறார்கள். பணம் கொடுப்பது என்பது இந்த நாட்டின் ஜனநாயகத்தை கொலை செய்வதற்கு ஒப்பாகும் என்பதை எதிர்க்கட்சியினர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

* **Sri M. P. VADIVELU :** தகுதிமிக்க சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைமீது நான் இரண்டொரு வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் தேர்தல் நல்ல முறையில், நேர்மையுடன் நடந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாணியம்பாடியில் முஸ்லீம் பெருங்குடி மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களது பண்டிகை நாளான ரம்ஸான் அன்றுதான் தேர்தல் நடைபெற்றது. அவர்களில் பலர் அதனால் வாக்குச் சாவடிகளுக்கு வரமுடியாத காரணத்தினால் பல வாக்காளர்கள் நல்ல முறையில் வோட்டு அளிக்க முடியவில்லை. முஸ்லீம் பெருங்குடி மக்களின் வாக்குகள் தங்களுக்குக் கிடைக்காது என்ற காரணத்தினால் இடைஞ்சல் செய்து வாக்குச் சாவடிகளை ந்யூ டவுன்லில் உள்ளதை காதர்பேட்டைக்கும், காதர்பேட்டையில் உள்ளதை ந்யூ டவுனிற்கும் இப்படியாகச் சாவடிகளை அமைத்தார்கள். இடையில் ரெயில்வே கேட் அடிக்கடி மூடிக்கொண்டிருந்தது. முஸ்லீம் மக்களின் வாக்குகள் காங்கிரஸுக்குக் கிடைக்காது என்ற காரணத்தினால் ரம்ஸான் பண்டிகைக்குச் சில தினங்கள் முன்னதாகவே தேர்தல் வைக்காமல் அந்த நாளில்தான் வைத்தார்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், சிறுபான்மையினர்மீது அக்கறையிருக்கிறது என்று

[Sri M. P. Vadivelu] [25th April 1962

கூறிக் கொள்ளும் இந்த சர்க்கார் ஏன் தேர்தல் நாளைத் தள்ளி வைக்காது அந்த பண்டிகை நாளில் வைத்தார்கள்? அன்று வைத்ததின் காரணமாக, பட்டினி கிடந்த காரணத்தால் பல முஸ்லீம் தாய்மார்கள், இரண்டு மூன்று தாய்மார்கள் மயக்கம் அடைந்து விழ்ந்த பரிதாபகரமான நிலைமையை நான் நேரில் கண்டேன். அடுத்தபடியாக, போலீஸ் அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டார்கள் என்று பல நண்பர்கள் சொன்னார்கள். வாணியம்பாடியில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பலர் சில்லரை மாற்றிக் கொடுப்பதைப் பார்த்து இதை இன்ஸ்பெக்டரிடம் நேரில் கூறினேம். ஆனல் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனது அருமை நண்பர் அன்பழகன் அவர்கள் என்னை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்யவந்தபோது ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் வேண்டுமென்றே அங்கு வந்து மைக்கை எங்கள் பக்கம் திருப்பி வைத்து அவர்கள் பேசி எங்கள் கூட்டத்தைக் கலைத்தார்கள். அதையும் இன்ஸ்பெக்டரிடம் சொன்னேம். அதையும் அவர் கவனிக்கவில்லை. அந்த இன்ஸ்பெக்டர்மீது ஏராளமான புகார் மனுக்கள் ஏற்கனவே வந்திருக்கின்றன. நானும் கூட அவரைப்பற்றி பல விஷயங்களைப் புகாரில் . .

MR. DEPUTY SPEAKER : தனிப்பட்ட ஒரு அதிகாரியைப் பற்றிக் குறிப்பிட்டுக் குற்றச்சாட்டுகள் இங்கு சொல்வதைவிட அவர்களுக்குப் பொறுப்பு ஏற்கின்ற அமைச்சரிடம் எழுத்து மூலம் முதலில் தெரிவிக்கலாம்.

SRI M. P. VADIVELU : வாணியம்பாடியில் பாலாறு என்று ஒரு ஆறு ஓடுகிறது. அதில் பால் ஓடாவிட்டாலும் தண்ணீராவது ஓடுகிறதா என்றால் தண்ணீர்கூட இல்லை. அது வெறும் பால் ஆருகத்தான் காட்சி அளிக்கிறது. இதைப்பற்றிக் கனம் ராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் முதல் மந்திரியாகயிருந்த காலம் முதற்கொண்டு சென்ற சட்டமன்றக் கூட்டம் வரையிலும் பலர் பேசியிருக்கிருர்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்ல ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் அது பற்றிப் பேசியிருக் கிருர்கள். ஆனல் இன்று வரை அதற்கு யாதொரு விமோசனமும் ஏற்படவில்லை. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று உங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் வாணியம்பாடியில், திம்மாம்பேட்டை, ஆவாரம் குப்பம் பக்கத்தில் "தப தப" என்கிற ஒரு நீர்வீழ்ச்சி ஓடுகிறது. அங்கு ஒரு அணை கட்டி அந்த நீரைத் தேக்கினல் பாசன வசதி பெருகுவதற்கும், கிணறுகளில் நீர் வற்றுமல் இருக்கவும் உதவியாக யிருக்கும் என்பதைக் கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட் டிருப்பதுபோல் இளமையும், துடிப்பும்மிக்க நமது நிதியமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் அவர்களையும் அணைத்துக் கொண்டிருக்கும் செங்கற் பட்டு மாவட்டமும் அதனல் பெரும் பலனை அடையும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன். அடுத்து, விலைவாசி பற்றிக் குறிப் பிடும்போது எதிர்க்கட்சியிலுள்ள அம்மையார் அவர்கள் எங்க ளுக்கு மண்வெட்டி விலை தெரியுமா என்றெல்லாம் கேட்டார்கள்.

25th April 1962] [Sri M. P. Vadivelu]

அவர்கள் விவசாயத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விலைவாசியைக் குறைக்கவேண்டுமென்று சொல்லும்போது விவசாயிகளுக்கு நாங்கள் பாதகம் செய்கிறோம் என்று பொருள் அல்ல. விவசாயிகளைப் பாதிக்காத வகையில் விலைவாசியைக் கட்டுப்படுத்த என்ன ஆலோசனைகள் கூறிவிட்டீர்கள் என்று சிலர் கேட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவரும் ஆளும் கட்சித் தலைவரும் உட்கார்ந்து ஒரு சபையைக் கூட்டித் தீர்மானித்தால் நலமாகயிருக்கும் என்கிற என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உப்பு விலை அதிகமாக ஏறிவிட்டிருக்கிறது. கிராமத்தில் 3 அணு விதமும், நகரத்தில் படி 2-½ அணு விதமும் விற்கிறது. உப்பு விலையைப் பற்றிக் குறிப்பாகச் சொல்கிறேன் என்றால் காந்தியார் அவர்கள் உப்புக்காகவே சத்தியாகிரகம் நடத்தி வெற்றி பெற்றார்கள். காந்தி வழி வந்தவர்கள் அவருக்கு நல்லது செய்யவேண்டுமென்று நினைத்தால் இந்த உப்பின் விலையையாவது குறைக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதுமட்டுமல்ல, உப்பின் விலையைக் குறைக்காவிட்டாலும் மேற்கொண்டு விலை ஏறுமலாவது பார்த்துக் கொள்ளவேண்டும். எதிர்க்கட்சி அம்மையார் அவர்கள், பவுடரை பூசிக்கொண்டு பணம் காசு சம்பாதிக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கு பணக் கஷ்டம் தெரியாதென்று சொன்னார்கள். பவுடர் பூசி நாடகத்தில் நடிக்கும் கலைஞர்களை, அவர்களின் தொழிலைக் கேவலமான தொழில் என்று அம்மையார் அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்களா என்று கேட்கிறேன். என்னைப் போன்ற இளைஞர்கள் இருக்கும் வரையில் நாங்கள் திராவிட நாடு பிரிவினையை ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். என்ன காரணத்தினால் அம்மையார் அவர்கள் தன்னை இளைஞர் என்று குறிப்பிட்டுக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. முதியோர்களும், வயதான தாய்மார்களும் சேர்ந்துகொண்டு இளைஞர் காங்கிரஸ் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒருவேளை அதில் கனம் அங்கத்தினர் ஏற்படுத்தி இருக்கிறாரோ என்கிற சந்தேகம் எனக்கு வந்துவிட்டது. அம்மையார் அவர்களுக்குத் தங்கள் மூலம் நான் கொல்லிக்கொள்வேன் என்னைப் போன்ற இளைஞர்கள் இருக்கும் வரையில் பிரிவினையைப் பற்றிப் பேசியே தீருவோம், அது வெற்றி பெறப் பாடுபடுவோம். அடுத்து, மாவட்ட கலெக்டர்களின் அதிகாரங்கள் கூடுதலாகயிருக்கிறது. அதைப் பகிர்ந்தளிப்பதற்காக ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் ஏற்கனவே சர்க்காருக்கு இருந்தது. அதைப்பற்றி போர்டு மெம்பர்கள் ஏற்கனவே ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். அதை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, வாணியம்பாடியை ஒரு சப் தாலூகாவாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கை நெடுநாட்களாகவேயிருந்து வருகிறது. ஒரு ஆண்டுக்கு முன்பாக தாலூகா அலுவலகத்தை அங்கு வைக்க அலுவலகக் கட்டிடத்தை தேடிப் பார்த்தும் முடிவு செய்தார்கள். ஆனல் வாணியம்பாடி சப் தாலூகாவாக ஆகாமல்

இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை? கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல, இளமையும், துடிப்பும் உள்ள நமது முதலமைச்சர் அவர்கள் இதை விரைவில் செய்து கொடுக்கவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன நல இலாகா என்று ஒன்று இருக்கிறதே ஒழிய வீடில்லாத அரிஜன மக்களுக்கு இதுவரை எந்த விதமான உதவியும் செய்து கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. வீடில்லாத அரிஜன மக்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள் உதாரணமாக வாணியம்பாடி, கோணமேட்டில் அரிஜன மக்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருந்துவரும் இடத்திலிருந்து உடனடியாகக் காலி செய்யவேண்டுமென்று நகராட்சி நோட்டீஸ் கொடுத்தது. இதன் பேரில் அவர்கள்மீது வழக்குப் போடப்பட்டு இரண்டு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் அபராதம் செலுத்தத் தவறியதின் காரணமாக ஒரு வாரம் சிறையிலிருந்துவிட்டு வெளியே வந்திருக்கிறார்கள். இப்போது மீண்டும் அவர்களை வெளியே போங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை எல்லாம் கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல், இளமையும், துடிப்பும் கொண்ட முதல் அமைச்சர் அவர்கள் இக் குறையை போக்குவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டும், சேரிவாழ் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டும் இங்கு பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI G. RAJARAM:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் உரை நிகழ்த்திய கனம் உறுப்பினர்கள், நேற்று முன் தினம் இந்த மாமன்றத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய பேருரைமீது வாதப்பிரதி வாதங்கள் எழுப்பியும் இந்த மன்றத்தைக் கலகலப்பாக்கியிருக்கின்றனர். இந்தப் பக்கத்தில் இருக்கின்ற ஆளும் கட்சியைச் சார்ந்த எனது சக உறுப்பினர்கள் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை வாழ்த்தியும், வரவேற்றும், போற்றியும், புகழ்ந்தும், பாராட்டியும், வியந்தும் மகிழ்ச்சி தெரிவித்த நேரத்தில் எதிர் வரிசையில் அமர்ந்திருக்கின்ற அங்கத்தினர்கள் கவர்னர் பெருமான் அவர்களது உரையில் குற்றங்குறைகளை கூற வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் காரணமாகவோ எதையாவது சொல்லியாகவேண்டும் என்ற கட்டாயத்தின் பேரிலோ, அல்லது உண்மையிலேயே குறைகள் இருப்பதாக அவர்கள் இதயம் ஏற்றுக்கொண்ட காரணத்தினாலோ குற்றங்களை எடுத்துக்காட்டி, குறைகளை அடுக்கிக்காட்டி தாங்கள் பெரியதொரு கடமையைச் செய்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இம்மாதிரிப்பட்ட குறைகளை செய்துவிட்டார்கள் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் காணப்படும் பல அரிய கருத்துக்களை, பல தெளிவுரைகளை, நாட்டின் நல்வாழ்வுக்காக, நாட்டின் முன்னேற்றத்திற்காக, கூறப்பட்ட ஆலோசனைகளையெல்லாம் அவர்கள் குறைகூறவில்லை. கூறமுடிய

25th April 1962] • [Sri G. Rajaram]

வில்லை. இந்த மன்றத்தில் கவர்னர்பெருமான் ஆற்றிய உரையை குறைகூற முடியாத நிலையில், கவர்னர் உரையில் விட்டுப் போனவை என்ற போர்வையில் பல குறைகளை சொல்லித் தாங்கள் மகிழ்ந்து கொண்டார்கள். அவர்கள் குறைகளை எடுத்துக் கூறிக்கொண்டு வருகின்ற நேரத்தில், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் இருப்பவைகளை யெல்லாம் விட்டு, கடந்த காலத் தேர்தலை மட்டும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும், எதிர்க் கட்சித் துணைத்தலைவர் அவர்கள் கடந்த காலத்தில் நடந்த சம்ப வங்களைப்பற்றி எடுத்துக்கூறி அதைப்பற்றியெல்லாம் போஸ்ட்-மார்ட்டம் செய்தார்கள். அவ்விதம் போஸ்-மார்ட்டம் செய்த காலத்தில், அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும், அதிகாரிகள் ஆளும் கட்சிக்குப் பயன்படுத்தப்பட்டார்கள் என்றும் ஜாதி, பணம் இவையெல்லாம் அதிகமாகத் தேர்தல் காலத்தில் ஆளும் கட்சியினரால் பயன்படுத்தப்பட்டது என்றும் கூறினார்கள். உண்மையில் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கலாம், அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஜாதி, பணம் இவைகள் எல்லாம் ஒருசில இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக் கலாம். இவைகளை எல்லாம் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இவைகள் எல்லாம் ஆளும் கட்சியினரால் மட்டும் தான் உபயோகிக்கப்படுத்தப்பட்டது என்று சொல்வதை நம்மால் ஒப்புக்கொள்ளமுடியாது.

* * *

தேர்தல் நேரத்தில் ஜாதியைப்பற்றிக் குறிப்பிட்டு மட்டும் ஆளும் கட்சியினர் வெற்றி பெறவில்லை. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, அது என்னுடைய மாவட்டம் தான், அந்த மாவட்டத்திலிருந்து இன்றையதினம் வெற்றி பெற்று வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மனசாட் சியில் கை வைத்துச் சொல்லட்டும். அவர்கள் அவர்களுடைய லட்சியத்தை முழக்கியோ, அல்லது அவர்களுடைய கட்சிக் கொள் கைகளைச் சொல்லியோ மட்டும் வெற்றி பெற்று வந்துவிட்டதாக இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள முடியாது. ஜாதியைச் சொல் லித்தான், ஜாதியைப்பற்றி குறிப்பிட்டுத்தான் வெற்றிபெற்றூர் கள். ஆகவே ஆளும் கட்சி மட்டும்தான் ஜாதியையும் பணத்தை யும் உபயோகித்தது என்று சொல்லுவது அரசியல் அறமாகாது. அந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், எதை எதைக் காட்டி, எப்படி எப்படி வோட்டுப் பெற வேண்டுமோ அப்படித்தான் வோட்டுக்களைப் பெற்று வந்திருக்கிறூர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். மற்றும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஆளும் கட்சியிலுள்ளவர்கள், எங்கள் குடும் பங்களைப்பற்றி, எங்கள் குடும்பப் பெண்களைப்பற்றி, எங்கள் தாய் மார்களைப்பற்றி இழிவாகப் பேசினார்கள், இவ்வளவு தூரம் அரசியல் அநாகரீகம் தலைவிரித்தாடியது என்இ குறிப்பிட்டார்கள். இதை அரசியல் வாழ்வில் பங்கு கொண்டவர்கள் யாரும்

---

* Expunged as ordered by the Chair.

ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களின் குடும்பத்தைப் பற்றியோ, அல்லது அவர்களது பெண்களைப் பற்றியோ இழிவாகக் கூறினார்கள் என்றால் அதை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்ட அரசியல் அநாகரீகம் நான் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியில் மட்டும் இருந்ததாக கூறுவது தவறு என்பதை என்னால் எடுத்துக்கூற முடியும். ஆனால் மற்றக் கட்சியிலுள்ளவர்கள் இம்மாதிரியான போக்குகளில் நடந்து கொண்டார்கள் என்பதை என்னால் குறிப்பிட முடியும். குறிப்பாக எங்களது தொகுதியில், என்னை எதிர்த்து நின்ற உறுப்பினர் என்னைப்பற்றியும், எங்கள் குடும்பத்தைப் பற்றியும் ஒவ்வொரு ஊரிலும் போய்ப் பேசினார். அப்படிப்பட்ட உறுப்பினர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல என்று திராவிட முன்னேற்றக் கழகம் சந்தோஷப்பட்டுக்கொள்ள முடியாது. அகில உலகமேதை என்று கூறப்படுகிறவர் புதிதாகத் தோன்றிய ஒரு கட்சியிலுள்ளவர்தான் என்னுடன் நேரடியாகப் போட்டி போட்டார். அவர்தான் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்துகொண்டார் என்றும் அவருடைய வெற்றிக்கு அயவர் பிரச்சாரத்திற்கு மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் ஆதரவாக நின்றார்கள்.

SRI S. J. RAMASWAMI : இந்த அவையில் இல்லாத, ஒரு தனிப்பட்ட ஆளைப்பற்றி இங்குப் பேசலாமா ?

MR. DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் தேர்தல் காலத்தில் நடந்ததைப்பற்றி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். தனி நபர் எவரைப்பற்றியும் குறிப்பிட்டுப் பேசவில்லை என்று கருதுகின்றேன்.

SRI V. KRISHNAMOORTHY : Sir, on a point of order. The hon. Member is referring to a particular candidate who opposed him. He is imputing motives to that particular person who is not a member of this House and who is not present in this House. So, I would request the Chair to please advise him that it would not be helpful to set up a healthy convention here.

MR. DEPUTY SPEAKER : The hon. Member (Sri G. Rajaram) can continue his speech.

SRI G. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தனது ஆசனத்தை விட்டு வேறு ஒரு ஆசனத்திலிருந்துகொண்டு பேசலாமா ?

MR. DEPUTY SPEAKER : இப்போது பேசலாம். டிவிஷன் வரும்போதுதான் கனம் அங்கத்தினர்கள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் இருக்கவேண்டும். இப்போது கனம் ராஜாராம் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

SRI G. RAJARAM : நான் யாரையும் குறிப்பிட்டுப் பேச வேண்டும் என்ற நினைப்பில் பேசவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் தேர்தல் காலத்தில் தவறுகளைச் செய்யவில்லை.

25th April 1962] • [Sri G. Rajaram]

எதிர்க்கட்சியிலுள்ளவர்களும் தவறுகளைச் செய்தார்கள் என்பதைக் குறிப்பிட்டுக்காட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன். ஆளும் கட்சியினர் மட்டும்தான் இவ்விதம் நடந்து கொண்டனர் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது அரசியல் அறமும் ஆகாது, அரசியல் விவேகமும் ஆகாது, சான்றோர்க்கு அணியுமாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் காலத்தில் பல தவறுகள் நடந்திருக்கலாம். அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம், ஜாதி, பணம் இவைகள் எல்லாம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இம்மாதிரியான தவறுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஆரம்பத்தில் சர்வ கட்சிக் கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் கூட்டம் ஒரு முடிவு எடுத்தது. ஆனால் அதன்படி எல்லோரும் செயல்படவில்லை. தேர்தல் நேரத்தில் எங்கள் தொகுதிக்குக் கனம் முதலமைச்சர் வந்தபோது, "உங்கள் தொகுதி எப்படியிருக்கிறது" என்று கேட்டார்கள். அதற்கு நான் "சர்வ கட்சிக் கூட்டத்தில் எதையெதைச் செய்யக்கூடாது என்று முடிவெடுத்தீர்களோ, அதையெல்லாம் கட்டுப்பாடாக என்னை எதிர்ப்பவர் செய்து வருகிறார் என்று சொன்னேன். அப்படிக் கூறுகின்ற நேரத்தில் எங்கள் பக்கத்தில் இருந்து பழம் பெரும் எம்.எல்.ஏ.-ஆக இருந்தவர் ஒருவர் முதலமைச்சவர் அவர்களிடம், "எங்களைப்பற்றி சொல்லுவதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, ஆனால் இந்த அமைச்சரவையைப்பற்றியும் முதலமைச்சரைப் பற்றியும் கீழ்த்தரமாகவும் கேவலமாகவும் பேசுகின்றார்கள், அதை எங்களால் தாங்க முடியவில்லை" என்று சொன்னார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் "போகட்டும், தேர்தல் காலத்தில் இப்படியெல்லாம் தான் இருக்கும்" என்று அவருக்குரிய சாதுவான பதிலைத் தெரிவித்தார்கள். இம்மாதிரி முதலமைச்சர் மட்டும் பலியாகவில்லை. இந்த நாட்டின் பிரதமரே எதிர்கட்சியின் பிரசாரத்திற்குப் பலியாகியிருக்கின்றார் என்று அவர் பிளிட்ஸ் நிருபருக்கு அளித்த பேட்டியிலிருந்து தெரியவருகிறது.

அதேபோல் தேர்தல் நேரத்திலே ஏற்பட்ட பல இடையூறுகளை எல்லாம் கடந்து நாங்கள் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறோம். இந்த மன்றத்திலே கவர்னர் அவர்கள் உரையிலே தாங்கள் எதிர்பார்த்தது இல்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். அவர்கள் எதிர்பார்த்தது இருக்க முடியாது. அதாவது 3 படி அரிசித் திட்டமும், 5 ஏக்கர் நிலங்கள் கொடுக்கும் திட்டமும் இந்த கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே இருக்க முடியாது. அப்படி ஒரு உரை இருக்குமானால் அது கவர்னர் பெருமானுடைய உரையாக இருக்காது; திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் அறிக்கையாகத்தான் இருக்க முடியும். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை அவசர அவசரமாக அள்ளித் தெளித்த கோலம்போல் இருக்க முடியாது. ஒவ்வொருவருடைய காதும், விழியும் அவர்களுடைய உரையிலே வரக்கூடிய நல்லதொரு விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக விழிப்புணர்ச்சியோடு பார்க்கக்கூடிய ஒரு அறிவுரையாகத்தான் அது இருக்க

முடியும். எனவே அவர்கள் ஏமாந்தார்கள். அது இயற்கைதான். அது மட்டுமல்ல. "பிடிக்காத பண்டம் இனிப்பாக இருந்தாலும், அது வெறுப்பாகத்தான் இருக்கும்". அதேபோல் பிடிக்காத பாடகரின் பாடல் பொருளுள்ள பாடலாக இருந்தாலும், உயர்ந்த பாடலாக இருந்தாலும், அதை ரசிக்க முடியாது. அதுபோலவே தான் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையும், இவர்களுக்கு அவர்மீது இருக்கும் வெறுப்பின் காரணமாக இனிக்கவில்லை, ரசிக்கமுடியவில்லை என்று நான் கூறிக்கொள்வேன். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், கவர்னர் பெருமான் அவர்கள் உரை "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என்பதைப்போல் சுருக்கமாக பல அரிய விஷயங்களை, நாட்டிலே நடக்கின்ற அத்தனை விஷயங்களையும் தன்னிடத்தே பெற்றிருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையானது, "வாடிய பயிருக்கு வான்மழை பெய்ததுபோல", "பசித்த குழந்தைக்குக் கிடைத்த பால் போல", பலபல அரிய கருத்துக்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. நாட்டின் நலன் நாடும் நல்லவர்க்கெல்லாம் கவர்னர் பெருமான் உரை இனிப்பும் காரமும், சுவையும் அளவோடு கலந்த விருந்து மற்றவர்க்கோ—மருந்து அவர்தம் மனநோய் நீக்கும் மருந்து. கடைசியாக, நாட்டின் நலன் பெருக்கக்கூடிய முறையிலே, கஷ்டங்களை நிவர்த்திக்கும் முறையிலே இன்பம் பெருக்கக்கூடிய முறையிலே அமைந்துள்ள கவர்னர் பெருமான் உரையை மனமார வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

* **Sri A. SWAMIDHAS:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் குறித்து நிகழ்ச்சி நடைபெறுகின்ற இந்த வேளையில் எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரை என்போன்ற, சட்டசபைக்குப் புதியவர்களாக வந்திருக்கின்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு நல்லதொரு வாய்ப்பு கொடுத்திருக்கிறது. அதற்காக நான் கவர்னர் பெருமானுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால் இந்த நேரத்திலே நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்துப் பேச நான் முற்படுகிறேன்.

நான் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனவே, இந்த சந்தர்ப்பத்தில் எனது மாவட்டத்தில் பொதுமக்களுக்கு இருக்கிற குறைகளைச் சபையினருக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். தாய்த் தமிழகத்தோடு இணைந்தால், சேயாக இருக்கின்ற எங்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் நாங்கள் தாய்த் தமிழகத்தோடு இணைந்தோம். சேயாக இருக்கின்ற நாங்கள் அடிக்கடி எங்களுடைய தேவைகளைப் பற்றிக் கூறும்போது, தாயாகிய உங்களுக்கு அது சில வேளைகளில் தொல்லையாகவும் இருக்கலாம். ஒரு குழந்தை தாயைப் பார்த்துத் தனக்கு மிட்டாய் வேண்டும், துணி வேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிறது. அப்படிக் கெஞ்சிக் கேட்பதிலே கிடைக்கவில்லை

25th April 1962] [Sri A. Swamidhas]

யெனில் அது அழுது அடம் பிடிக்கலாம். சில வேளைகளில் தாய் அந்தக் குழந்தைக்கு இரண்டு அறை முதுகில் வைக்கலாம். ஆனால் குழந்தை அப்போதும் அழுகையை நிறுத்தவில்லை. தான் மிட்டாயைப் பெறும்வரையில் அது அழுது அடம் பிடிக்கிறது. அதேபோலத்தான் நாங்களும் எங்கள் குமரி மாவட்டத்திற்கு தேவையானவற்றைப் பல முறைகளிலே கேட்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எங்கள் குறைகள் பல. இந்தக் குறைகள் இதர இடங்களிலும் இல்லை என்று நான் கூற முற்படவில்லை. நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் கூட "நான் இந்தச் சென்னை மாநகரத்திலே உறைகின்ற முறையிலே சில குறைகளை எடுத்துக் கூறுகிறேன்" என்று சொன்னார்கள். அதுபோலவே நானும் நான் உறைகின்ற இடத்திலே உள்ள சில முக்கியமான பிரச்னைகளைப் பற்றி இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப் படுகிறேன்.

பொதுத் தேர்தலைப் பொறுத்த அளவில் அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டனர் என்று சொன்னார்கள். அதில் ஓரளவுக்கு உண்மை இருப்பினும், எனது தொகுதியைப் பொறுத்த அளவிலே அது முற்றிலும் உண்மை என்று எண்ண இயலாது. ஏனென்றால் நான் எதிர்த்துப் போட்டியிட்ட அங்கத்தினர் ஒரு அமைச்சர் ஆவார். ஒரு அமைச்சரை எதிர்த்துப் போட்டியிட்ட காரணத்தினால், அமைச்சர் தனக்கு இருக்கிற, இருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, ஒருசில அரசாங்க அதிகாரிகளைக் கூடத் தமக்குப் பயன்படுத்திக்கொண்டார்கள். இருந்தாலும் நான் வெற்றி பெற்றுவிட்டேன். வெற்றி பெற்ற பின்னரும் அங்கு அதிகாரிகள் குறிப்பாக, போலீசார் ஒரு கட்சி சார்பாகவே நடந்து கொண்டார்கள். பல வழக்குகளை ஜோடித்தார்கள். அந்த வழக்குகள் எல்லாம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அரசாங்கம் அந்த வழக்குகளையெல்லாம் பின்வலித்து ஆதரவு அளிக்குமென்று நம்புகிறேன்.

எங்கள் மாவட்டத்திலே ரயில் பாதையில்லை. அதைப்பற்றிச் சொல்லும்போது வேடிக்கையாகக்கூட ஒன்று சொல்வதுண்டு. இந்தியாவிலேயே ரயில் பாதை இல்லாத ஒரு மாவட்டம் எது? என்றுகூட ஒரு வினாவைப் பள்ளிக்கூடத்திலே கேட்கலாம். அந்த அளவிலே ரயில்பாதையே இல்லாத ஒரு பகுதி கன்னியா குமரி மாவட்டம் ஆகும். தலைசிறந்த கலையுள்ள இடமென்றும், தென்னாட்டின் முனை குமரி என்றும் பல இடங்களிலே இருந்து பிரயாணிகள் எல்லாம் வந்து போகக்கூடிய இடம் அது. அப்படிப்பட்ட சிறந்த ஒரு இடமாக இருந்தும், இதுவரைக்கும் அங்கு ரயில் பாதை இல்லை. அதேபோல் எங்கள் மாவட்டத்தில் தொழிலும் இல்லை. ஆகவே, எங்கள் மாவட்டத்திலே தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்காகத் தனியாரையோ அல்லது அரசாங்கத்தையோ அணுகி தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்படி சொன்னால், தனியார்கள் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கு அங்கு ரயில்பாதைகள் இல்லையே என்று சொல்கிறார்கள். அதே

நேரத்தில் ரயில்பாதை வேண்டுமென்று சொன்னால், அங்கே எங்கே தொழில்கள் இருக்கின்றன, ரயில்பாதை போடுவதற்கு! என்று சொல்கிறார்கள். இப்படி ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதாக இருந்து அங்கு ரயில்பாதை போடும் திட்டமானது காலம் கடந்து கொண்டு வருகிறது. அப்படி இல்லாமல் இந்த மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்திலேயே ரயில்பாதை வசதி செய்து கொடுத்து, அங்கு தொழிற்சாலைகள் பெருகுவதற்கும் வசதி செய்து கொடுக் கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படி அங்கு அதிகமான தொழிற்சாலைகள் ஏற்பட்டால், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைப்பதோடு, தொழில் வளமும் பெருகும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

தூத்துக்குடித் துறைமுகத்தைப் பற்றி கூறியிருக்கிறார்கள். எங்களுக்கும் ஒரு துறைமுகம் உண்டு. அது மிகச் சரித்திர பிர சித்திப்பெற்ற குளச்சல் துறைமுகமாகும். அதையும் செப்ப னிட்டுக் கொடுத்தால் எங்கள் மாவட்டம் மேலும் வளம் பெற்று பெருகும் என்பதை எடுத்துக்கூற ஆசைப் படுகிறேன். மணவாளக்குறிச்சியில் இரண்டு மணல் கம்பெனிகள் இருந்தன. இப்போது அதிலே தனியார் நடத்தி வந்த ஒரு கம்பெனி மூடப்பட்டு விட்டது. அங்கு உற்பத்தி செய்யப்பட்ட இல்மினைட், சிர்க்கண், மாங்கனீஸ் ஆகியவைகள் உலகில் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆகவே, இந்தப் பொருளை நன்கு பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நல்லதொரு திட்டம் வகுத்து, அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நமது அரசாங்கம் மேற்படி தொழிலை ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு ஆலையும் இதற்கு முன்பு மூன்று ஷிப்டு நடத்திக் கொண்டிருந்தது; இப்போது ஒரு ஷிப்டைக் குறைத்துக்கொண்டது. அதனால் நூற்றுக்கணக்கான மக்கள் வேலை இழந்திருக்கிறார்கள். எனவே, இத்தகைய நிலையில் தேய்ந்து குறைந்துகொண்டு வருகிற தொழில் மேலும் அழிந்து போகாமல் நல்லநிலையை அடைய, அந்த வளம் மிகுந்த மணலை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அணுமின்சார நிலையத் திற்கு பயன்படக்கூடியது தோரியம் என்று விஞ்ஞானிகள் கருது கிறார்கள். அந்த முறையிலும் ஆராய்ச்சி செய்து தோரியத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடுமானால், அந்த அணுமின்சார நிலை யத்தை அங்கு அமைப்பதற்கும் முயற்சிக்கலாம் என்பதை எடுத் துச்சொல்ல ஆசைப்படுகிறேன். தொழில் ஆரம்பிப்பதற்கான பல மூலப்பொருள்கள் அங்கும் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால், ரப்பர் அங்கே ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. அரசாங்கத்துறையிலே கூட அங்கே ரப்பர் பயிர் செய்யப்படு கிறது. இன்னும் 5 ஆண்டு காலம் சென்றால், அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குத் தேவையான ரப்பர் உற்பத்தி செய்யப்படும், அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தலாம்.

11-30 a.m.

25th April 1962] [Sri A. Swamidhas]

அங்கே காகிதத் தொழிற்சாலே ஏற்படுத்துவதற்கு வேண்டிய மூலப் பொருள்களும் கிடைக்கின்றன. மூங்கில், நாணப்புல் வேறு பல கச்சாப் பொருள்கள் அங்கே கிடைக்கின்றன. மலேக்காடுகள் அங்கே அதிகம். அவற்றைப் பயன்படுத்தி அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலே ஆரம்பிக்கலாம். அங்கு மரச்சீனி மாவு ஏராள மாக கிடைக்கிறது. அதை உபயோகப்படுத்தி ஒரு தொழிலே ஆரம்பிக்கலாம். இத்தகைய் தொழிற்சாலேகள் ஏற்படுவதற்கு வேண்டிய வாய்ப்புகள் அங்கே இருக்கின்றன. அங்கு கிடைக் கும் மூலப்பொருள்களேக் கொண்டு தொழிற்சாலேகள் ஏற்படுத்த லாம்.

நீர்ப்பாசன வசதிகளேப் பொறுத்த அளவிலே கன்யாகுமாரி மாவட்டத்தில் பலர் சொல்லுகிருர்கள், ஏராளமான மழை பெய் கிறது, நல்ல நீர் வசதி இருக்கிறது என்று. உண்மை, அங்கு மழை பெய்கிறது. இருப்பினும், அங்கு மேடு, பள்ளம் அதிகமாக இருக்கிறது. ஆகையால், மழைக் காலங்களில் பெய்கின்ற மழை நீரானது உடனடியாகக் கடலில் கலந்துவிடுகிறது. அப்படி வீண் போகாமல் அந்த நீரைத் தடுத்து நிறுத்த திட்டங்கள் இருக் கின்றன. சிற்ருறு-பட்டணங்கால் திட்டம், மாம்பழத்துறை அணேத் திட்டம், பொய்கை அணேத்திட்டம் ஆகிய திட்டங்களேப் பரிசிலனே செய்து, உடனடியாக அவைகளேக் கட்டி முடிப்பதற் கான ஆக்க வேலேகளில் ஈடுபட்டால், கன்யாகுமாரி மாவட்டத் திற்கு வேண்டிய நீருக்கு மேல் மிஞ்சிய நீரை அண்மையில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்திற்குக்கூட பயன்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

'இன்டெக்ரேஷன்' எங்களேப் பொறுத்தவரையிலே தலே வேதனே கொடுக்கக்கூடிய ஒரு பிரச்னே. இந்தப் பகுதி சென்னே யோடு இணேந்து இன்று 6 ஆண்டுகள் ஆகியும், அங்கு உள்ள என்.ஜி.ஓ-க்கள், குறிப்பாக ஆசிரியர்களுக்கு வேலே நிர்ணயம், சம்பள நிர்ணயம், உத்தியோக உயர்வு, தகுதி நிர்ணயம், இது வரையில் செய்யப்படவில்லே. எனவே, அவற்றையெல்லாம் செய்து தந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். கன்யாகுமாரி மாவட்ட மக்களாகிய சேய்களாகிய எங்களுக்குத் தாயாக இருந்து அத்தனேயும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத் தமைக்கு, அவைத்தலேவருக்கு நன்றி கூறிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **Sri T. KARCHA GOWDER**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானின் ரத்னச் சுருக்கமான உரைமீது நன்றி தெரிவித்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

நேற்று பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கவர்னர் பதவியைப் பற்றித் தாறுமாருகக் கூறியிருக்கிருர்கள். சாதாரண மாக ஒரு டபேதார் கூட கவர்னர் ஆகிவிடலாம் என்று ஒரு அங்கத்தினர் பேசியதை நாம் கேட்டிருக்கிறோம். நமது

[Sri T. Karcha Gowder] [25th April 1962

நாட்டிலே சற்று உன்னிப்பாக யோசித்துப் பார்த்தால், இன்று கல்வி கேள்விகளில் வல்லுனர்களும், தியாக சீலர்களும் கவர்னர் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அதுவுமின்றி நமது அரசியல் சட்டப்படி நமது ராஷ்டிரபதி அவர்களால் நியமனம் செய்யப்படும் கவர்னர் அவர் களின் அலுவல்களை நாம் சற்று ஆராய்ந்து பார்த்தால், நமது புராணங்களில் கூறியுள்ளது போல், 'உலகில் எப்போது அதர்மம் ஓங்கி, தர்மம் குலைந்து அக்கிரமங்கள் மீறுகின்றனவோ, அப் போது நான் பூ உலகில் அவதாரம் எடுத்து துஷ்டர்களை அடக்கி, தர்மத்தை நிலை நாட்டுவேன்' என்று பரந்தாமர் கூறியுள்ளதைப் போல, கவர்னர் அவர்கள் இந்தச் சபையில் தில்லுமுல்லுகள், கலகங்கள் நிகழும் போது, அவைகளை அடக்கி இந்தச் சபையை கலைத்து, இந்த அரசாங்கத்தின் பொறுப்பை அவரே ஏற்கும் பெரிய பணியை மேற்கொண்டிருக்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும். அப்பேர்பட்ட பரந்தாமரை ஒத்த கவர்னர் பெருமான் உரையைப் பகிஷ்கரித்ததன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத் தார் பெரிய பாபச் சுமையைத் தங்கள் தலைக்கு மேல் சுமந்து கொண்டார்கள் என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நம் மாநில அமைச்சர் அவையைப்பற்றி ஒரு அங்கத் தினர் கூறும்போது நவகிரஹங்கள் ஒன்று சேர்ந்திருப்பதாகக் கூறியுள்ளார். என்னைப் பொறுத்தவரையில், கற்பனையாகக் கூற வேண்டுமென்றால், தமிழ்த்தாய் நவரத்தின மாலையணிந்து விற் றிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். கிரஹங்களைப் பற்றிப் பேசும்பொழுது, சமீப காலத்தில் மகர ராசியில் 8 கிரஹங் கள் சேர்ந்ததுபோல், இந்தச் சபையிலே (1) காங்கிரஸ் (2) தி.மு.க. (3) கம்யூனிஸ்டு (4) சுதந்திரா (5) பார்வர்டு பிளாக் (6) சோஷலிஸ்டு (7) சுயேச்சைகள் (8) கவர்னர்பெருமானால் நியமிக்கப்பட்டவர் அவர்களையும் சேர்த்து 8 கிரஹங்கள் இருக் கின்றன. இந்த 8 கிரஹங்களில் பூரண சந்திர கிரஹமான காங்கிரஸ் ஒன்று தான் 1967-ம் ஆண்டில் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தச் சபையிலே இருக்கும் மற்ற கிரஹங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக இந்தச் சபையை விட்டு அகலும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர்பெருமான் உரையில் மின்சாரத் திட்டங்களைப்பற்றி கூறி இருப்பது குறித்து நாம் பெருமையடையலாம். நமது தமிழ் நாட்டில் தஞ்சாவூரை உணவுக் களஞ்சியம் என்று எப்படி நாம் கூறிக்கொண்டிருக் கிறோமோ, அதே போல நீலகிரி மாவட்டத்தை மின்சாரக் களஞ் சியம் என்று கூறத் தயங்கக்கூடாது. தமிழ் நாட்டில் உற்பத்தி யாகும் மின்சாரத்தில் பாதிக்கு மேல் என்னுடைய நீலகிரி மாவட்டத்தில் தான் உற்பத்தியாகிறது என்பதை நான் பெருமை யுடன் சொல்லிக்கொள்ளுகிறேன். சமீபத்தில் கனடா தேசத்தின் உதவியுடன் 35 கோடி ரூபாய் செலவு செய்து குந்தா அணை மின்சாரத் திட்டம் இரண்டாவது கட்டம் நிறைவேற்றப்பட்டு தீர்ந்திருக்கிறது. இப்பொழுது மின்சார போர்டார் திட்டப்படி

25th April 1962] [Sri T. Karcha Gowder]

6 கோடி ரூபாய் செலவு செய்ய எஸ்டிமேட்கள் தயாராக இருக்கின்றன. மூன்றாவது திட்டம் நிறைவேறிக்கொண்டு வருகிறது. இவ்விதத் திட்ட வேலைகள் நடக்கும் பகுதிகளுக்கு எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தயவு செய்து சென்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், நிச்சயமாக ஒன்று தெரியவரும். நமது அரசாங்கம் தனது சக்திக்கு மீறிய பணியைத் தலைமேல் சுமந்துகொண்டு கஷ்டப்பட்டு உழைத்துவருகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்வார்கள். அதைவிட்டு, இடுகாட்டுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை, பிணம் தட்டிக் கீழே விழுகிறது என்று இங்கே குறை கூறிக்கொண்டிருப்பதால், யாதொரு பலனும் இல்லை. அதை எதிர்கட்சியினர் தயவுசெய்து யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த குந்தா அணைக்கட்டுத் திட்டத்திற்காக நாம் பெரு வாரியான பணத்தை செலவழிக்கிறோம். அந்த அணைக்கட்டிலே மணல் புகுந்து தூர்ந்து போகும் ஆபத்தான நிலைமை இருக்கிறது என்பதை நமது அமைச்சர் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சரிவான இந்தத் திட்டப் பிரதேசத்தில் உருளைக்கிழங்கு விவசாயம் செய்வதால் மழைக் காலங்களில் மண் அரிக்கப்பட்டு, அந்த அணைகளில் போய் சேருகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக் கைகளை உடனே அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கே உருளைக்கிழங்கு விவசாயம் செய்வதைத் தடுத்து, தேயிலை பயிர் உற்பத்தி செய்ய அரசாங்கம் குடி ஜனங்களுக்கு 25 சதவிகிதம் மான்யமாகவும், 75 சதவிகிதம் நீண்ட கால கடனாகவும் உதவித்தொகையளித்து, இந்த அணைக் கட்டுகளை காப்பாற்றுவார்கள் என்று நான் நினைக்கிறேன். அதுவும் அல்லாமல் இவ்வித பெரிய திட்டங்களை நாம் நிறைவேற்றும் போது சிறிய குறைகள், ஒன்றிரண்டு அங்கு இருப்பதை நான் அமைச்சர் அவர்களிடம் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக அட்டுபாயில், போர்த்தி ஆகிய இரண்டு கிராமங்களும் நாலாபக்கமும் தண்ணீரால் சூழப்பட்டு, அங்குள்ள மக்கள் வெளியே வருவதற்கு இடைஞ்சலாக இருப்பதால், உள்ளேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வேறு இடங்களுக்கு குடிபெயரவேண்டி சர்க்காரை அநேக தடவை அணுகியும், அமைச்சர் அவர்கள் என்ன காரணத்தினாலோ கவனிக்கவில்லை. அதை உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

கடைசியாக, நாம் 1,500 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத் திருக்கிறோம் என்று கவர்னர் பெருமான் உரையில் கூறியிருக் கிறார்கள். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இடுகாட்டுக்கு மின் சாரம் இல்லை என்று கூறுகிறார்கள். இன்னல் படும் இல்லங் களே இருள் சூழ்ந்துள்ள போது, இடுகாட்டிற்கு மின்சாரம் தேவையா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். ஆகவே, இம் மாதிரியான அற்ப குறைகளைச் சொல்லி அரசாங்கத்தை குறை கூறவேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன். இப்படிச் சொல் வதை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் விட்டு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri T. Karcha Gowder] [25th April 1962

கல்வி விஷயமாக பேசும்போது, கவர்னர் உரையைப் பார்த்து நாம் பெருமைப்படவேண்டும். அங்கத்தினர் ஒவ்வொருவரும் மனச் சாட்சியைத் தொட்டுப்பார்த்தால் தெரியும், பார்க்கும் இடமெல்லாம் பள்ளிகள் அமைத்து, பசி தீர பாலர்களுக்கு பகலுணவும் அளித்து, பாரத கண்டத்திலே புகழ் பெற்று நிற்கும் நம் தமிழ் நாட்டின் கல்வி அபிவிருத்தியைப்பற்றி நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய விஷயம் அது. அதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டியதுதான்.

கடைசியாக, விலைவாசி உயர்வைப்பற்றி இந்த சபையில் மிகுதியாக பேசப்பட்டு வருகிறது; எதிர்கட்சியால் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று ஆக்க பூர்வமான யோசனைகள் சொல்லாமல் போராட்டம் நடத்துவோம், அப்படி இப்படி செய்வோம் என்றெல்லாம் சொல்லுவதால் யாதொரு பிரயோசனமும் இல்லை என்பதுதான் என் எண்ணம். என்னைப் பொறுத்த வரையில், அரசாங்கத்திற்கு எழு அம்ச விலைக் குறைப்புத் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

1. உற்பத்திச் செலவை குறைக்க முயற்சித்தல். அதாவது விவசாயிகளுக்கு வேண்டிய உற்பத்திக் கருவிகளையும், ஏர், மாடு, பம்பு செட்டுகள் போன்றவற்றையும் பாதி விலையில் வினியோகம் செய்யவேண்டும்.

2. பசுந்தாள் உரம், குப்பை உரம் முதலியவைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளை ஊக்குவதுடன், இரசாயன உரங்களை காலா காலத்தில் குறைந்த விலையில் சப்ளை செய்யவேண்டும்.

3. கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒவ்வொரு விவசாயியின் கடன் தேவை என்ன என்பதைத் தெரிந்து, அதை அரசாங்கம் மேற்படி கூட்டுறவு சங்கங்கள் மூலமாக குறைந்த வட்டியில் கடனுகை கொடுக்கவேண்டும். புல் பைனுன்ஸ் ஸ்கீமில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை 3-000-லிருந்து 5,000-ஆக உயர்த்தவேண்டும்.

4. ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் உற்பத்தியாளர்—உபயோகிப்போர் **Producer—consumer** சொசைடிகளை ஆரம்பித்து நடுவாந்திர தரகர்கள் அடிக்கும் கொள்ளை லாபத்தைத் தடுக்க வேண்டும்.

5. தாலுக்காவுக்கு ஒரு விவசாய அதிகாரி என்றிருப்பதை மாற்றி, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒவ்வொரு விவசாய அதிகாரி என்று நியமிக்கப்பட்டு, நவீன விஞ்ஞான முறையில் எப்படி சாகுபடி செய்யவேண்டும் என்பதை விவசாயிகளுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும்.

6. இப்பொழுது விவசாய வருமான வரி அதிகமாக இருக்கிறது. அதை ஒழிக்காவிட்டாலும், கூடிய அளவுக்குக் குறைத்து, ஆவன செய்யவேண்டும்.

7. இன்றைக்கு உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்திற்கு பெருகும் ஜனத்தொகையும் ஒரு காரணம் ஆகவே, ஜனத் தொகையைக் குறைக்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

25th April 1962] [Sri T. Karcha Gowder]

ஆண்களும், பெண்களும், கல்யாணம் செய்து கொள்ளும் வயதை உயர்த்தியும், குடும்பக்கட்டுப்பாட்டை தீவிரமாக அமுலாக்கியும், ஜனப் பெருக்கத்தைக் குறைக்க வழிவகை செய்யவேண்டும்.

இதோடு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, என் உரையை முடிக்கிறேன்.

* **Sri R. RAJAGOPALASWAMY NAICKER :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர்பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பிரேரேபித்து அம்மையார் கனம் அனந்தநாயகி அவர்கள் பேசியதை ஆதரித்துப் பேச எனக்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு என் நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன். கவர்னர்பெருமான் அவர்கள் தம் உரையில் இரண்டு ஐந்தாண்டு திட்ட சாதனைகளையும் கூறி, மூன்ருவது திட்டத்தின் பிரதான அம்சங்களையும் தெளிவாக்கியிருக்கிருர்கள். அவைகளை ரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்திருக்கிருர்கள். வேலைத்திட்டங்களைப்பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் நிதி அமைச்சர் நிதி அறிக்கையில் வெளியிடுவார்கள் என்றும் சொல்லியிருக்கிருர்கள்.

மூன்ருவது திட்டத்திற்கு மத்திய ஒதுக்கீடு 190 கோடி மொத்தம் 290 கோடி. இந்த முறையில் நாம் இன்று செயல்பட இருக்கிரேம். சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில், நமது அரசாங்கத்தார் மத்திய ஒதுக்கில் முன்பு ஒதுக்கியதை விட சுமார் 22 கோடி அதிகம் பெற்று, இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றி இருக்கிருர்கள் என்பதை கனம் அங்கத்தினர்களின் ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு நமக்கு இருக்கும் பற்ருக்குறைக்கு வரி விதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தால் மட்டும் திட்டங்கள் நிறைவேறி விடாது. பற்ருக்குறையைத் தீர்க்க வரி போட வேண்டியிருக்கும். ஆனல், நமது நிதி அமைச்சர் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள். அவர் ஏழைப் பங்காளர். வரிகள் போடும்போது ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் செய்வார்கள், ஏழை எளியவர்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டார்கள் என்று நாம் தைரியமாக இருக்கலாம்.

திட்டங்களை நிறைவேற்ற நிர்வாகத்திறன் அதிகரித்தாலொழிய உருப்படியான பலன் இருக்காது என்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிருர்கள். மூன்ருவது திட்ட முதல் வருஷ வேலை நல்ல முறையிலே நடந்து வருகிறது. குறிப்பாக எங்கள் கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களும் ஒவ்வொரு ஆண்டிலும் நல்ல பணியாற்றி வருகிறது. இரண்டு லட்சத்திற்கு மேல் செலவழித்திருக்கிருர்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பல யூனியன் பல துறைகளிலும் ஐந்து வருஷ வரவு-செலவு திட்டம் போட்டு நிறைவேற்றி இருக்கிருர்கள். ஆகவே நல்ல முறையிலே தான் நாம் முன்னேறி வருகிறேம். இந்த சமயத்தில் விவசாய இலாக்காவையும், விவசாய இலாகா அமைச்சரவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம், நவீன சாகுபடிமுறை, (இன்டென்ஸிவ் மெதட் ஆப் கல்டிவேஷன்) நல்ல படியாக

பிரசாரம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு அறிவிக்கப் பட்டிருக் கிறது. மேலும், பொறுக்கு விதை, பயிர்ப் பாதுகாப்பு முதலிய வைகளும் அளிக்கப்பட்டன. அதோடு இல்லாமல், விவசாயி-களுக்கு பூச்சி கொல்லும் மருந்துகளையும், அதை உபயோகிக்க சாதனங்களையும், விவசாயக் கருவிகளையும் பாதி விலைக்கு கொடுத்த தோடல்லாமல், விவசாய உற்பத்திக்கு வேண்டிய வழிவகை களையும் செய்திருக்கிறார்கள். காடு மேடுகளைப் பண்படுத்தி பயிர் செய்ய புல்டோசர்களையும், பழைய கிணறுகளை ஆழப் படுத்த பாறை உடைக்கும் மெஷின்களையும், பாதாளக் கிணறு போட டிரில்லிங் மெஷின்களையும் குறைந்த விலைகளுக்கு கொடுத்து விவசாயத்திற்கு ஊக்கம் அளித்திருக்கிறார்கள். மண் வளப் பாது காப்புக்கும் உதவி செய்திருக்கிறார்கள். மூன்றுவது திட்ட காலத்தில் 16 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டு மென்று கவர்னர்பெருமான் சொல்லி இருக்கிறார்கள்.

Sri V. KRISHNAMOORTHY : On a point of order சபையில் எழுதிப் படிக்கலாமா ?

Mr. DEPUTY SPEAKER : அவர் எழுதிப் படிக்கவில்லை. இருந்தாலும், முதன் முதலாக சபையில் பேசும் அங்கத்தினர்கள் குறிப்புகளைப் பார்த்துப் பேசுவதில் தவறு இல்லை. ஆகவே, அதை ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதவேண்டியதில்லை.

Sri R. RAJA GOPALASWAMY NAICKER : மூன்றுவது திட்ட காலத்தில் 16 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நமக்கு இன்றைக்கு உர விஷயத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இப்போது சிந்திரியில் உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது, நெய்வேலி யிலும் பிரமாண்டமான யூரியா தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் துறையிலும் உரத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் வேண்டிய அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இதுபோன்று உர உற்பத்திக்கு வேண்டிய பல நன்மைகளை அரசாங்கம் செய்து கொண்டு வருகிறார்கள். இருப்பினும், மேற்படி திட்டங்கள் நிறைவேறும் வரைக்கும் அரசாங்கத்தினர் தம்முடைய இறக்குமதிக் கொள்கையை உரம் விஷயத்தில் கொஞ்சம் மாற்றி அமைத்துக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளு கிறேன். இறக்குமதிக் கட்டுப்பாட்டை கொஞ்சம் தளர்த்தி இதைச் செய்யவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளு கிறேன். இம்மாதிரி வெளி நாடுகளிலிருந்து உரத்தை இறக்கு மதி செய்து நம் நாட்டு விவசாயிக்குக் கொடுத்தால் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் உணவு உற்பத்திக் குறியளவை திட்ட காலத்திற்கு முன்பே எட்டிவிடுவதோடல்லாமல், விவசாயி களுக்கும் நன்மையாயிருக்கும்.

மின்சாரத் துறையில் நம் மாகாணம் நல்ல முறையில் முன் னேற்ற மடைந்திருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலும் குறிப்பிட்டிருக்கிறார். அதைப் போலவே பல கனம்

அங்கத்தினர்களும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன் பேசிய சில கனம் எதிர் கட்சி அங்கத்தினர்கள் இன்னும் சில கிராமங்களுக்கு பல பாகங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். குறிப்பாகச் சொன்னால் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் நமது மாகாணத்தில்தான் கிராமப் புறங்களுக்கு அதிகப்படியாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக் கிறது என்பது தெரிய வரும். சில இடங்களுக்குப் போகவில்லை என்றால் கூடிய சீக்கிரத்தில் அங்கு போவதற்கு வாய்ப்பு இருக் கிறது. நமது குந்தா திட்டமும் அதையொட்டிய நான்கு அம்ச திட்டங்களும், நெய்வேலி அனல் மின்சாரத் திட்டமும் நிறைவேறி னால் இன்னும் அதிகப்படியான கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதையேதான் கவர்னர் அவர்கள் கூட தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அத்துடன் பரம்பிகுளம்-ஆளியாறு திட்டத்தைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தத் திட்டம் ஒரு பல நோக்கு ப்ராஜெக்ட் என்றே சொல்லலாம். இந்தத் திட்டம் நிறைவேறினால் கோவை ஜில்லாவிலுள்ள நான்கு தாலுக்காக்கள், வரண்ட பிரதேசங்களாகிய அத்தாலுக்காக்களை செழிப்பு அடையச் செய்ய முடியும். அத்துடன் அங்குள்ள ஆனைமலை ஆறு திட்டத்தையும் எடுத்து நடத்தினால் இன்னும் அதிகப்படியான இடங்களுக்கு பாசன வசதி கிடைக்கும், எங்கள் பகுதியில் விட்டுப் போன பல பகுதிகளும் பயனடையும். அதனால் அதிகப்படியாக ஐம்பது முதற்கொண்டு எழுபது ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் பாயக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த ஆனைமலை ஆற்று திட்டத்தையும் எடுத்து பரம்பிகுளம் திட்டத்துடன் இணைத்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் திட்டமும் நம்மைச் சேர்ந்ததுதான். அதனால் கேரள சர்க்காருடன் இதைப்பற்றியும் பேசி ஒரு முடிவு கண்டு மேற்படி திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் பரம்பிக்குளம் திட்டத்தைப்பற்றி சொல்லி யிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே அதை கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொது தேர்தலில் முதன் முதலாக இந்த சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு கனம் உதவி சபாநாயகருக்கு என் நன்றி யைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **Sri V. S. S. MANI :** கனம் சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையைப் பாராட்டியும் கவர்னர் அவர்கள் உரையில் கொடுக்கப்பட்ட சில விஷயங்களைப் பற்றி பேசுவதும் ஒரு சாதாரண சம்பிரதாயம்தான். அந்த முறையில் நானும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள

[Sri V. S. S. Mani] [25th April 1962

ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் ராஜாராம் அவர்கள் எங்கள் துணைத் தலைவர் அவர்களைப் பற்றி குறிப்பிட்டு பேசுகையில் அவர் தன்னுடைய பதவியின் தரத்தை விட்டுக் கூட இறங்கி பேசினர் என்று குறிப்பிட்டார். அப்படி பேசுவது இந்தச் சட்ட மன்றத்துக்கு ஏற்குமா? அப்படி இந்தச் சட்ட மன்றத்தில் பேசலாமா என்று கேட்க ஆசைப் படுகிறேன். இவ்விதம் இந்தச் சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் பரிமாரிக் கொள்வது சரியல்ல. இப்படி ஒருவருக்கொருவர் வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டு பேசுவதாக இருந்தால் இந்தச் சட்ட மன்றத்தில் நல்ல காரியங்களை நிறைவேற்ற அவகாசம் கிடைக்காது என்று நான் கருதுகிறேன்.

இரண்டாவதாக, இந்தத் தேர்தலில் அதிகாரிகள் நல்ல முறையிலே தொண்டாற்றவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதைப் பற்றிய கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் அதிகாரிகள் நல்ல முறையில் தேர்தலில் நடந்து கொண்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். எனக்குத் தெரிந்த அளவில் எனது தொகுதியில் நான் கேள்விப்பட்ட அளவில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதாவது ஓட்டுச் சாவடி அமைப்பதில் சில கோளாறுகள் இருந்ததாகத் தெரிய வருகிறது. எந்தக் கிராமத்தில் ஓட்டுச் சாவடி அமைக்கப்பட்டதோ அந்தக் கிராமத்திலுள்ள ஓட்டர்கள் பக்கத்து கிராமத்திலுள்ள ஓட்டுச் சாவடிக்குச் சென்று ஓட்டு அளிக்கக்கூடிய அளவில் வாக்காளர் களை ஜாபிதாவில் இணைக்கப்பட்டது. எதற்காக இப்படி ஏற்படுத்தினர்கள் என்பது தெரியவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் சாவடிகளை அதிகாரிகள் வாக்காளர்களின் கஷ்டத்தை உணர்ந்து சரியானபடி அமைக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றுதான் தோன்றுகிறது. இதை குறையாகச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக சில அதிகாரி கள் ஒரு கட்சியின் சார்பிலே அந்தக் கட்சியின் மீதுள்ள பற்றினால் தவருக நடந்துகொண்டிருக்கிறார்கள். தேர்தல் நடந்ததற்குப் பின்னால் கூட ஆளும் கட்சியின் மீது உள்ள பற்றினால் எதிர் கட்சிக்கு வோட்டுப் போட்ட சில மக்களை தொல்லைப்படுத்தி யிருக்கிறார்கள். அவர்களுக்கு பல தீங்குகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். எனது மாவட்டத் திலுள்ள ஒரு டெக்ஸ்டைல் கன்ட்ரோல் அதிகாரியாயுள்ளவர் எனது தொகுதியிலுள்ள நெசவாளப் பெருங்குடி மக்களுக்கு சில தீங்குகளை செய்திருக்கிறார் என்று தெரியவருகிறது. எப்படி என்றால் அந்த மாவட்ட அதிகாரியானவர் அவர் ஆளும் கட்சி யினிடம் அனுதாபம் கொண்டவராக இருப்பதால், ஆளும் கட்சி யினிடம் பற்றுள்ளவராக இருப்பதால் நெசவாளப் பெருங்குடி மக்கள் ஆளும் கட்சிக்கு விரோதமாக தேர்தலில் வாக்களித்ததால் அவர்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்றால் அங்கு அவர் களுடைய ஊருக்கு விசிட் செய்வது போல் சென்று தறிகளைப் பார்க்க வேண்டும் கணக்குகளைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி சரியாக கணக்குகளை வைக்கவில்லையென்றும்

25th April 1962] . [Sri V. S. S. Mani]

பொய்க் கணக்கு கொடுத்து இருப்பதாகச் சொல்லியும், நீங்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்கு வாக்களித்தீர்கள் அல்லவா என்ன செய்கிறேன் பார் என்று சொல்லி அந்த ஊர் மக்களுக்கு, அந்த ஊர் சார்பில் ஜவுளி உற்பத்தி செய்யக் கூடிய உற்பத்தியாளர் சங்கத்திற்கு வரக்கூடிய பட்டு கோட்டாவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதை நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இவ்விதம் செய்வதானது சில அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை நல்ல முறையில் செலுத்தவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். இது மோசமான காரியமல்லவா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாவட்ட அதிகாரி தன்னுடைய அதிகார வரம்புக்கு அப்பாற் பட்டு சில காரியங்களையும் செய்திருக்கிறார்கள். இதை தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன்.

அடுத்தாற்போல் ரோடுகள் கிராமங்களில் நல்ல முறையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். போதுமான ரோடுகளும் போடப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில் கிராமங்களில் ரோடுகள் சரியாகவே அமைக்கப்பட வில்லை. அது மாத்திரம் அல்ல, ரோடுகள் அமைந்திருந்தாலும், அவைகள் சரியானபடி பராமரிக்கப்படவில்லை என்றுதான் நான் சொல்வேன். கிராமங்களில் ரோடுகள் அமைந்திருந்தாலும் ஜீப்கள் போகக் கூட முடியாதபடியிருக்கிறது. கிராமங்களில் நல்ல ரோடுகளைப் போட்டிருந்தால் தேர்தலுக்கு முன்னால் கிராமங் களில் ஜீப் பஸ்களை விடுகிறோம் என்று சொல்வானேன் என்று கேட்கிறேன். ஏன், நல்ல பஸ்களை விட்டிருக்கலாமல்லவா. நல்ல ரோடுகள் போட்டிருந்தால் நல்ல பஸ்களை ஏன் விட்டிருக்கக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த நிலைமையில் ஜீப் பஸ்களை விடுகிறோம் என்று சொல்லும்போது கிராமங்களில் நல்ல ரோடுகளைப் போட்டிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. நல்ல ரோடுகள் அமைத்து இருந்தால் ஏன் நல்ல பஸ்களை விடக் கூடாது என்று கேட்கிறேன். அதனால் தான் இதுவரை போட்ட ரோடுகளும் நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை என்று சொல்லுகிறேன்.

அடுத்தாற்போல் விவசாயிகளுக்கு உரம் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை. மின்சார வசதி போன்றவைகள் கிராமப் புறங்களில் ஓரளவு கொடுத்தபோதிலும் மின்சார பம்பு செட்டு களுக்கு கனெக்ஷன் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதை அது சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் உடனடியாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதை அது சம்பந்தப்பட்ட அமைச்சர் கவனித்து, விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு காலதாமத மில்லாது மின்சார கனெக்ஷன் கொடுக்கவேண்டுமென்று ஆணை யிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

12-
noo

[Sri V. S. S. Mani] [25th April 1962

கவர்னர் உரையில், மலை விவசாயத்தைப்பற்றி ஒரு வரி கூட குறிப்பிடப்படவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன், மலை விவசாயம், குறிப்பாக, காபி, ஏலம் போன்ற விளைபொருள்கள் அன்னியச் செலாவணியைச் சமபாதித்துக் கொடுக்ககூடியனவாகும். அப்படிப்பட்ட பொருள்களை மலை விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள். அந்த உற்பத்தியைச் செய்யக்கூடிய மக்களுக்குத் தக்க பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு ஒருவிதமான வசதியும் செய்து கொடுக்கபபடவில்லை. ரோடு வசதி, மின்சார வசதி, விளை பொருள்களைக் கீழே இறக்குவதற்கான எந்த வசதியும் இல்லாத காரணத்தால் அவர்கள் பாடு பெரும்பாடாக இருக்கிறது. பன்றிமலையைப்பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அங்கு ஒரு சாமியார் இருக்கிறார். பனறி மலைக்குப் போகவேண்டுமானால் 12 மைல் தூரம் நடந்து தான் போகவேண்டும். அது மலைப் பிரதேசத்திலுள்ள முக்கியமான கிராமம். அதற்கு இதுவரை ரோடு வசதி செய்துகொடுக்கப்படவில்லையென்றால், இதைக்காட்டிலும் கேவலமான நிலைமை ஒன்றும் இருக்க முடியாது. அதை அடுத்த கிராமமான ஆடலூருக்கு ரோடு வசதி இல்லை. இம்மாதிரி மலையிலுள்ள கிராமங்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் எந்தத் தொகுதியிலிருந்து வந்தேனோ, என்னுடைய தொழில் என்னவோ அதைப்பற்றி நான் இப்பொழுது பேச ஆசைப்படுகிறேன். கவர்னர் உரையில் கைத்தறி நெசவைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கைத்தறி நெசவுத் தொழில் நமது நாட்டிலே உழவுத் தொழிலுக்கு அடுத்தாற்போல் உள்ளது. நமது தென்னகத்தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கு வேண்டிய பண வசதி செய்து கொடுக்க **Handloom Finance Corporation** போன்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவ நமது மாநில சர்க்காரோ அல்லது இந்தியப் பேரரசோ முன்வரவில்லை. கைத்தறி நெசவாளிகள் தென்னகத்தில் தான் அதிகமாக வாழ்கிறார்கள் என்ற காரணத்தால்தான், ஏனைய தொழில்களுக்கு 'இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' போன்ற ஸ்தாபனங்களை நிறுவி அவர்களுக்கு உதவி செய்கின்ற நேரத்தில் கைத்தறி நெசவாளிகளுக்கு உதவி செய்ய Handloom Finance Corporation ஏற்படுத்தவில்லை என்று நான் நினைக்கிறேன். வட நாட்டிலுள்ள பெருங்குடி மக்கள் வியாபாரிகளாயிருக்கிறார்கள்; கைத்தறி நெசவாளிகள் அங்கு அதிகமாக இல்லை. இதர தொழில்களுக்காக அங்கே இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அங்கும் கைத்தறி நெசவாளிகள் பெருவாரியாக இருந்தால் கைத்தறி நெசவாளர்களுடைய குரல் டில்லி சர்க்காரிடத்தில் எட்டும். அது இல்லாத காரணத்தால், அங்கே இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள்—இங்கே கைததறித் தொழில் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தவில்லை என்று நான் நினைக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

25th April 1962] [Sri V. S. S. Mani]

குறிப்பாக நான் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், சின்னாளபட்டி ஊரில் செயற்கை பட்டு நூலால் செய்யக்கூடிய ஜவுளிகள் உற்பத்தி செய்யப் படுகிறது. அந்த ஊர் நெசவாளிகள் கைத்திறன் படைத்தவர்கள். அந்த ஜவுளியைப்பற்றி தெரியாத தாய்மார்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் யாரும் இருக்கமாட்டார்கள். அவ்வளவு நேர்த்தி யான கைத்திறன் கொண்ட நெசவாளர்கள் . . . (மணி அடிக்கப் பட்டது.)

* **Sri C. KOTHANDARAMA BAGAVATHAR :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, வணக்கம். கவர்னர் உரையை நான் ஆதரித்து அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தல் விஷயமாகச் சில விஷயங்களைப் பற்றிப் பேசப்பட்டது. 17—2—1962 அன்று ஆரணியில் நடந்த தேர்தல் மிகவும் சுமுகமாக நடந்தது. நான் தொழிலாளி என்ற காரணத்தினால் எல்லாக் கட்சிகளும் என்னை ஆதரித்தார்கள். கம்யூனிஸ்டு கட்சியினரும் ஆதரித்தார்கள். தொழிற் சங்கங்களும் என்னை ஆதரித்தன. திராவிடக் கழகமும் ஆதரித்தது. ஆனால் திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் கும்பலாகச் சேர்ந்துகொண்டு, எல்லா காங்கிரஸ் கொடிகளையும் அறுத்துவிட்டு, பல இன்னல் களைச் செய்து விட்டார்கள். 144 பிரிவின்கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின் ஆரணியில் அமைதி நிலவியது. பிறகு, போலீசார் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. நான் பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த கனம் உதவி சபாநாயகருக்கு என் நன்றியைத் தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

Sri R. SAMPANGI : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின் மீது, போற்றக் கூடிய அம்சங்களைப் போற்றவும், குறை சொல்லி எடுத்துக் காட்ட வேண்டிய அம்சங்களை எடுத்துக் காட்டவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இங்கே வந்து உள்ளேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில்,

"தங்களைச் சுற்றிக் கிளப்பப்பட்ட அரசியல் மாச்சரியங் களால் பரபரப்படையாமல் நிதானத்தோடும் விவேகத்தோடும் தங்கள் வாக்குரிமையைச் செலுத்திய பொது மக்கள் பெரிதும் பாராட்டத் தக்கவர்களாவர்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து, பொது மக்களைப் பாராட்டிய அந்த உரையிலிருந்து, நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல ஜனநாயக முறையில் பெற்றிருந்த 34 லட்சம் வோட்டுக்களும் மாசில்லாதவை, புனிதமானவை என்று எடுத்துக் காட்டியுள்ளார்கள். எங்களுக்கு வோட்டளித்த அந்தப் பொது மக்களுக்கு என்னுடைய நன்றியை நான் இந்தச் சபையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டவனாவேன்.

[Sri R. Sampangi] [25th April 1962

அடுத்தாற்போல், புதிய அமைச்சரவையைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது,

"புதிய அமைச்சரவை துரிதமாகவும் துணிவுடனும் செயல்பட முனைந்து விட்டது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிய அமைச்சரவை துரிதமாகவும் துணிவுடனும் செயல்படுகிறதா என்பது பொறுந்திருந்து பார்க்கவேண்டிய ஒரு விஷயம். கவர்னர் பெருமான் மகிழ்ச்சி அடைந்தது எந்தக் கண்ணோட்டத்தோடு என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒரு உண்மையை மட்டும் நான் ஒப்புக் கொள்கிறேன். அதாவது, புதிய அமைச்சரவையில், புதிய பொறுப்பேற்ற, துடிப்புள்ள கனம் அமைச்சர் அவர்கள் பதவி ஏற்றவுடனேயே இந்த மாமன்றத்தின் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தை, தமிழகத்தில் பல லட்ச மக்களால் பாராட்டத் தகுந்த ஒரு ஜனநாயக அமைப்பாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரைத் தூற்றும் பணியினைத் துரிதமாகவும், துணிவுடனும் செயல்பட முனைந்து விட்டார். ஆனால், ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றார்கள் தூற்றலுக்கிடையே மற்றவர்கள் போற்றும் அளவுக்கு வளர்ந்த கழகம் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், கவர்னர் பெருமான் அவர்கள் மின்சார அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றி உரையாற்றியிருக்கிறார்கள். கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கும் திட்டம் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது என்றும், இரண்டாம் திட்டத்தின் தொடக்கத்தில் எல்லா மின்சார அபிவிருத்தித் திட்ட வேலைகளும் முடிந்துவிட்டன என்றும் கவர்னர் பெருமான் தனது உரையில் கூறியுள்ளார்கள். ஆனால், நான் தேர்ந்தெடுக்கப்பட்ட விருஞ்சிபுரம் தொகுதியில் சுமார் 340 கிராமங்கள் உள்ளன. அந்த 340 கிராமங்களில் 40 கிராமங்கள் தவிர, ஏறத்தாழ 300 கிராமங்களுக்கு மின்சார வசதியே இல்லை. இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள்ளாவது இதுபோன்று மின்சார வசதியே இல்லாத எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்பட இந்த அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தாற்போல் கவர்னர் பெருமான் அவர்கள் ஆரம்பக் கல்வி திட்டத்தைப்பற்றிக் கூறியிருக்கிறார். கட்டாய ஆரம்பக் கல்வி திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் எதிர்பார்த்ததைவிட மிக அதிக அளவில் மாணவர்கள் வந்து சேருகிறார்கள் என்றும் இதற்கு இலவச மதிய உணவுத் திட்டம் காரணம் என்றும் சொன்னார். இந்த மதிய உணவுத் திட்டத்திற்காகவும், சீருடைத் திட்டத்திற்காகவும் ஆசிரிய பெருமக்கள் படும் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. பள்ளியில் கல்வி போதிக்க வேண்டிய நேரத்தில் எப்படியாவது இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செய்யவேண்டுமே என்ற அரசாங்கத்தின் கட்டளைக்குப் பயந்து ஆசிரியர்கள் பொது மக்களிடத்தில் நன்கொடை பெறப் போகிறார்கள். தாழ்ந்து

25th April 1962] [Sri R. Sampangi]

போகிறார்கள். எனக்கு முன்னே பேசிய ஒரு உறுப்பினர் "பகல் உணவுக்காகப் பிள்ளைகள் படிக்கிறார்களா ? என்ற கேள்வியைக் கேட்டார்கள். கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் இருந்து எல்லா அங்கத்தினர்களுக்கும் அத்தகைய சந்தேகம் தான் ஏற்படும். அது இயற்கை. சட்டசபை அங்கத்தினர்களாக வந்திருக்கிற நாங்கள் அந்த அந்தத் தொகுதியிலுள்ள ஆசிரியப் பெருமக்களின் நிலைமையை நன்கு உணர்ந்திருக்கிறோம். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்பதிலே நாங்களும் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் ஆசிரியப் பெருமக்களுக்குத் தொல்லையினைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க வழிகள் கூறப்படவில்லை. ஆசிரியர்களுடைய ஊதிய உயர்வு பற்றிக் குறிப்பிடவில்லை. தேவநாகிரி லிபியில் இருந்து தமிழ் பாதுகாக்கப்படுமா என்பதைப் பற்றி உரைக்கப்படவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகைகள் கூறப்படவில்லை. ஏழை எளியவர்கள் ஏற்கனவே சுமந்து கொண்டிருக்கும் வரிச்சுமையை நீக்குவதற்கு உறுதி அளிக்கப்படவில்லை. வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வழி காணோம்.

சட்டசபையில் நேற்று பேசிய ஒரு அங்கத்தினர் "சென்னை நகரில் காலை 10 மணி முதற்கொண்டு இரவு 11 மணி வரை ஓடுகிற கார்களைப் பார்த்தாலே பொருளாதாரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று தெரியும்" என்பதாகக் குறிப்பிட்டார். ஓடுகிற கார்களையும், பஸ்களையும் சென்னையில் இருந்து கணக்கிட்டு மக்கள் பொருளாதாரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது பாருங்கள் என்பது மிகையாகும். இந்த உறுப்பினர் கிராமங்களுக்குச் சென்று பார்ப்பாரேயானால் வண்டிச் சக்கரத்துக்கு எண்ணெய் போடுகிற அளவுக்குக் கூட பொருளாதாரம் உயர்த்தப்படவில்லை என்பதை உணர்வார். கிராம மக்கள் வாழ வழி கவர்னர் உரையில் காணப்படவில்லை என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **Sri P. K. MUTHUVELAPPA GOUNDER :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் உரையை மகிழ்வுடன் வரவேற்கிறேன். இதில் எதிர்க்கட்சிக்காரர்கள் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடக்கவில்லை, தேர்தலில் நாங்கள் மகா அவதிப்பட்டோம், அதிகாரிகளால் நாங்கள் பட்ட சிரமம், தொல்லை கொஞ்சநஞ்சமல்ல என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஒரு நண்பர் சொன்னார், "நாம் ஒருவரையொருவர் குறை சொல்லிக்கொண்டிருப்பதனால் பயன் இல்லை, நல்ல திட்டங்களைத் தீட்ட வழி சொல்லவேண்டும்" என்று சொல்லி மறுபடியும் தன்னுடைய தொகுதியிலே அதிகாரி ஒருவர் மகா சிரமப் படுத்திவிட்டார் என்பதாகச் சொன்னார். சாதியின் பெயரால், கட்சியின் பெயரால் அமைச்சர்கள் வோட்டுக் கேட்டார்கள் என்று சொன்னார். எங்கள் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் — உங்களுக்குமாகிய அமைச்சர் அவர்கள் அந்த முறையில் வோட்டுக்கேட்கவேண்டிய

[Sri P. K. Muthuvelappa Gounder] [25th April 1962

அவசியம் இல்லை. அவர்கள் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி மக்களிடத்தில் தங்களுடைய சாதனைகளை எடுத்துச் சொல்லி—பொருளாதாரத் துறையில் நாம் எவ்வாறு முன்னேறி யிருக்கிறோம், விவசாயத்துறையில் எவ்வாறு முன்னேறியிருக் கிறோம், சமுதாயத்துறையில் எவ்வாறு முன்னேறியிருக்கிறோம் என்று சொல்லி வோட்டுக்கேட்டு, மக்களுடைய நல்வாக்குகளைப் பெற்று வந்துள்ளார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஓர் உறுப்பினர் தன் ஏரியாவில் தேர்தல் காலத்தில் ஏற்பட்ட சில தகராறுகளையும் அதன்பேரில் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். அடிக்கு அடி கொடுத்ததாக அது இருக்க லாம். ஆனால் எங்கள் பகுதியில் ஒரு பெரிய நிகழ்ச்சியை, ஒரு பயங்கரமான நிகழ்ச்சியை, அதை நினைத்தாலே நடுங்கக் கூடிய நிகழ்ச்சியை, heart failure ஏற்படக்கூடிய நிகழ்ச்சியை எதிர்க் கட்சிக்காரர்கள் உருவாக்கினார்கள் என்பதைச் சொல்ல விரும்பு கிறேன்.

SRI S. J. RAMASAMI : உதவி சபாநாயகர் அவர்களே, சட்டமன்றத்தில் பயங்கரமான என்ற வார்த்தையைச் சொல்ல லாமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : அந்த வார்த்தையைப் பிரயோ கித்ததில் எவ்விதமான தப்பும் கிடையாது.

SRI P. K. MUTHUVELAPPA GOUNDER : என்னுடைய தொகுதியில் ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ஆழ்வார் ஐயன் என்பவர் எதிர்க்கட்சிக்காரர்களுக்காக தேர்தலில் கையில் சீட்டு களை எல்லாம் எடுத்துக்கொண்டு சென்று வேலை செய்தார். அவர் ஏற்கனவே காங்கிரஸ்காரர். எங்கள் பழைய நண்பர். ஒருநாள் அவரை தான் சந்தித்தபோது, "நீங்கள் இப்படி காங்கிரஸ் கட்சியில் இருந்துகொண்டே மாற்றுக் கட்சிக்கு வேலை செய்ய லாமா?" என்று கேட்டேன். அவரும், "இனி நான் வேலை செய்ய வில்லை. எனக்கும் வெட்கமாக இருக்கிறது. தான் இந்த ஊரில் இருந்தால்தானே தொல்லை, வெளியில் போய்விடுகிறேன்" என்று தன்னுடைய தங்கை ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார். அவரைக் காணவில்லை என்றவுடன் இவர்கள் உடனே அவருடைய மனைவி மக்களிடத்தில் சென்று "காங்கிரஸ்காரர் அவரைக் கொன்றுவிட்டார்கள்" என்று சொல்லிவிட்டார்கள். அதை நம்பி அந்த அம்மாளும் அலறிக்கொண்டு போலீஸில் புகார் கொடுத்தாள்.

SRI K. S NATARAJA GOUNDER : கனம் அங்கத்தினர் சபையில் தூங்கலாமா?

MR. DEPUTY SPEAKER : சபை நடவடிக்கைக்குக் குந்தகம் இல்லாமல்—அதாவது சத்தம் போட்டுத் தடை உண்டு பண்ணு மல் எந்த அளவுக்கு கனம் அங்கத்தினர்கள் நடந்து கொள்ள லாமோ அந்த அளவுக்கு நடந்து கொள்ளலாம்.

25th April 1962].

SRI P. K. MUTHUVELAPPA GOUNDER: அந்த அம்மாளுடைய பேச்சை நம்பி போலீஸ்காரர்களும் என் பேரில் கிரிமினல் ப்ரொஸீஜர் கோட் 120, 302-ஆவது செக்ஷன்படி வழக்கைப் பதிவு செய்துகொண்டு என்னைத் தேட ஆரம்பித்து விட்டார்கள். அந்த ஊரில் இருந்து 20 மைல்கள் தள்ளி அப்பால் இருந்த என்னிடம் வந்து என் சகாக்கள் "போலீஸ்காரர்கள் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னவுடன் நான் ஆழ்வார் ஐயனைத் தேடிக்கொண்டு கிளம்பினேன். உண்மையில் எனக்கு ஆழ்வார் ஐயன் எங்கே இருப்பார் என்று தெரியுமானாலும், ஒருகால் இவர்களே அவரை யமலோகத்திற்கு அனுப்பிவிட்டு நம் தலையில் சுமத்திவிடுவார்களே என்ற பயம் உண்டாகிவிட்டது. நான் ஆழ்வார் ஐயனைத் தேடிக்கொண்டு செல்ல, போலீஸ்காரர்கள் என்னைத் தேடிக்கொண்டு வர ஒருவழியாக அவரை அவருடைய தங்கை வீட்டில் கண்டுபிடித்தேன். அப்புறம்தான் எனக்கு உயிர் வந்தது. மாபெரும் பொதுக்கூட்டத்தில் அவரைக் கொண்டுவந்து, "இதோ ஆழ்வார் ஐயன், வீணாக சுமத்தப்பட்ட பழிக்கும் துவேஷப் பிரசாரத்திற்கும் நீங்கள் இடமளித்து நம்பக் கூடாது," என்று மேடையிலேயே ஆழ்வார் ஐயனை உட்கார வைத்துக் காட்டினேன். பொதுமக்களும் உண்மையை உணர்ந்து யாரை ஆதரிக்கவேண்டும் என்று தீர்மானித்து என்னை ஆதரித்தார்கள். இந்தமாதிரியான கஷ்டத்தை எங்களுக்கு உண்டாக்கியவர்கள் அவர்கள். இதைக் கடவுள் இடத்தில்தான் சொல்லிக் கொண்டோம். தவிர வேறு யாரிடத்திலும் சொல்லிக் கொள்ளவில்லை.

கவர்னர் பெருமான் அவர்கள், விவசாயத் துறையில், பொருளாதாரத் துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 10 ஆண்டு காலத்திற்கு முன்பு இருந்த ஆட்சியிலே கறுப்பு, சிகப்பு கலந்து போடுகிறார்களே, அதை எப்படிச் சாப்பிடுவது, நாம் நாட்டிலே வாழுகின்றோமா இல்லையா என்றெல்லாம் மக்கள் பேசிக் கொண்டார்கள். ஆனால், இன்று நாம் பல மாபெரும் திட்டங்களைத்தீட்டி, ஏராளமாக அணைக் கட்டுகளைக் கட்டி, அதன் காரணமாக உணவுப் பொருள் நிறைந்த அளவில் உற்பத்தியாகி மக்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்க வழி செய்து இருக்கிறோம். அந்தக் காலத்தில் 200 ரூபாய் பெறுமான புஞ்சை இன்று 6,000 ரூபாய் ஆகிவிட்டிருக்கிறது. இதைச் சிந்தித்துப் பார்த்தால் நாம் பொருளாதாரத் துறையில் முன்னேறியிருக்கிறோம் என்பது தெளிவாகப் புரியும். மூன்றாவது திட்ட காலத்தில் மேலும் 16 லட்சம் டன் உணவு தானியங்கள் அதிகரிப்பதற்கான திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று கவர்னர் பெருமான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு வேகமாக நாம் திட்டங்களைப் போட்டு முன்னேறி வருகிறோம்.

நம் நாட்டிலே நூற்றுக்கு 75 பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். அவர்கள் ஏக்கருக்கு 250 முதல் 300 வரை செலவு செய்தாலும் வருவாயை எடுத்துக் கொண்டால் 16 அல்லது 20 மூட்டை தானியந்தான் விளைகிறது. அந்த விவசாயப் பெருங்குடி மக்கள்

[Sri P. K. Muthuvelappa Gounder] [25th April 1962

எப்படி வாழ முடியும். நாம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் ஒருவர் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் வகுத்திருக்கிறோம். அந்த முறையில் பார்த்தால் விவசாயி எப்படி முன்னேற முடியும்? நகரங்களில் வேலை செய்பவர்கள், மில்களில வேலை செய்பவர்கள் மாதம் 120, 150 என்று கூலி பெறுகிறார்கள். அந்த அளவுக்குச் சம்பாதிக்கும்போது நன்றாக வாங்கிச் சாப்பிட சக்தி இருக்கிறது. 10 வருஷங்களுக்கு முன்னால் எவ்வளவு கூலி வாங்கியிருக்கிறார்கள்? இப்படி வாங்கும் சக்தி வளர்ந்து இருக்கும் போது விலை உயருகிறது. எதிர்க்கட்சிக்காரர்கள், 3 படி அரிசி போட வேண்டு மென்று சொல்கிறார்கள். 3 படி அரிசி போட்டால் விவசாயிகளின் நிலை மாட்டை அடித்துச் செருப்புத் தானம் செய்த கதை யாகிவிடும். ஒவ்வொரு தாலூகா வாரியாகச் சிறு தொழில்களைத் துவக்கி விவசாயப் பெருங்குடி மக்களும் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பைத் தரவேண்டும். எங்கள் தொகுதியிலே அரக்கன் கோட்டை வாய்க்கால் மூலம் பாசனம் நடத்தப்படுகிறது. மழைக் காலங்களில் . . . (மணி அடிக்கப்பட்டது.)

* **Sri A. RAMACHANDRA RAYAR :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 23-ம் தேதியன்று கவர்னர் அவர்கள் இந்தச் சபையில் ஆற்றிய உரையை வரவேற்கிறேன் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு எனக்கு இந்த மன்றத்திலே பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த சபைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலானது நல்ல முறையிலே நடந்திருக்கிறது என்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறி யுள்ளதை எதிர்க்கட்சியினர் ஒத்துக் கொள்ளவில்லை. அவர்கள், நம்முடைய கவர்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல, ஜனநாயகத்திற்கு உகந்தவர் அல்ல என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் நான் சொல்வது மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஜனாதிபதி அவர்களால்தான் கவர்னர் நியமிக்கப்படுகிறார். நீங்கள் அவருடைய உரைக்கு வராமல் இருந்தது வருத்தத்தைத் தருகிறது என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள் அமைச்சரவையைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர், எட்டு கிரகங்களின் சேர்க்கையினால் எப்படி ஒன்றும் நடைபெற வில்லையோ அதே போன்று இந்த 9 பேர் கொண்ட மந்திரி சபை யாலும் குறிப்பிடத்தக்க மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்று கூறினார். எட்டு என்பது குட்டிச் சுவருக்குத்தான் அர்த்தம். அதனால் கெடுதலும் செய்ய முடியாது. நன்மையும் செய்ய முடியாது. ஆனால் 9 பேர் இருப்பதால் பல நன்மையான காரியங்களை இந்த மந்திரிசபை செய்ய முடியும்.

தேர்தல் காலத்தில் அமைச்சர்கள் எல்லாம் ஆங்காங்கு சென்று ஜாதியின் பெயரால் வோட்டுக் கேட்டார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அவர்கள் அந்த மாதிரி வோட்டுக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் தாங்கள் செய்த சாதனை களை எடுத்துக் காட்டித்தான் வோட்டுக் கேட்டார்கள். ஆனால்

எதிர்க் கட்சியினர்தான் அவதூறுகளைச் சொல்லி வோட்டுக் கேட்டார்கள். 4,104 என்ற ஒரு எண்ணிக்கையைக் கொடுத்து அத்தனை பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் சுவரொட்டி ஒட்டினார்கள். கிராமங்களில் சென்று துவேஷ உணர்ச்சியைக் கிளப்பி வோட்டுக் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக அரசாங்கம் மாட்டுக்கு வரி, ஆட்டுக்கு வரி என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள் என்று பிரசாரம் செய்து வருகிறார்கள். இவைகளெல்லாம் காதில் வாங்கும் மக்கள் என்ன நினைப்பார்கள்?

அவையெல்லாம் உண்மையல்ல. இவைகளெல்லாம் பஞ்சாயத்தால் போடப்பட்டவை. பஞ்சாயத்து வேண்டுமென்றால் செய்யலாம், இல்லாவிடில் விட்டு விடலாம். ஆகவே இந்த வரியை சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்படியெல்லாம் பேசுவது சரியல்ல. சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் எவ்வளவோ ஆக்க வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இன்று கிராமங்களின் நிலையைப் பார்த்தால் 14 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையல்ல, இப்பொழுதிருப்பது. கிராமங்கள் எல்லாம் நகரங்களாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம் கிராமங்களில் ரோடு வசதியிருக்கமுடியுமா? குடிதண்ணீர் வசதியிருக்க முடியுமா? வெளிச்சம் இருக்கமுடியுமா? இப்பொழுது கிராமங்களில் எல்லாவித வசதிகளும் ஏற்பட்டு விட்டன. ஒரு வாரத்திற்கு முன்னர்தான் ஒரு குடிதண்ணீர் தேக்கத்தை திறந்து வைத்தேன். அந்தக் கிராமம் நல்ல குடிதண்ணீர் வசதியோடு, லைட் வசதியோடு, நல்ல ரோடு வசதியோடு இன்று காட்சியளிக்கிறது. அப்பொழுது நான் சொன்னேன், நகரத்தில்தான் சுபிட்சமாகயிருக்கிறார்கள் என்று நினைத்தீர்கள், இப்பொழுது நீங்களும் சுபிட்சம் அடைந்து வருகிறீர்கள், கிராமங்கள் நகரங்களாக மாறிக் கொண்டு வருகிறதைப் பாருங்கள் என்று சொன்னேன். செய்கிற நன்மைகளை எடுத்துச் சொல்லாமல் குற்றங் குறைகளை மட்டும் கூறுவது என்று குறை கூறி வருகிறார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரவசதி வந்து விடும். நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் முதல் ஜெனரேட்டர் 50 மெகா வாட் உற்பத்தியைத் தொடங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது வரும்போது எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்பட்டு விடும். பின்னர், உணவை எடுத்துக் கொள்வோம். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தும் இன்னும் உணவு பற்றாக் குறையிருக்கிறது. ஏனெனில், நமது உற்பத்தி பெருகப் பெருக ஜனத்தொகையும் பெருகிக்கொண்டே வருகிறது. எவ்வளவு நிலங்கள் நம் நாட்டில் நிலப் பரப்பளவு இருக்கிறதோ அந்த அளவுதான் இன்னும் இருக்கிறது. ஆனால் ஜனத்தொகை மாத்திரம் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டே போகிறது. ஆகவே, உணவை வகுத்துக் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவேதான் அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது நல்லதொரு முறைதான். அதனால் ஒரு தொந்தரவும் இல்லை. சுபிட்சத்திற்கு அது அடிகோலுவதாகும். தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியினர், அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைக் கொண்டு

12-20 p.m.

வந்திருக்கிறார்கள். அது போற்றத்தக்கதல்ல என்றும், ஆகவே, நீங்கள் அவர்களுக்கு வோட்டு கொடுக்காதீர்கள் என்றும் சொன்னார்கள். அடுத்தபடியாக, தூத்துக்குடி துறைமுகம் நன்கு கட்டப்பட்டிருக்கிறது. அதனால் போக்குவரத்து வசதி ஏற்படுகிறது. எனது தென்னாற்காடு மாவட்ட புவனகிரி தொகுதி யில் பரங்கிப்பேட்டை துறைமுகத்தை, இரண்டு ஆண்டுகளாக அதை 2 கோடி ரூபாய் செலவில் புனருத்தாரணம் செய்யவேண்டு மென்ற ப்ரபோஸல் இருந்துகொண்டிருக்கிறது. அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டு பரங்கிப்பேட்டையை நல்லதொரு துறைமுகமாக செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் போக்குவரத் திற்கு அது உதவியாகயிருக்கும். ஆகவே, அதை ஒரு பெரிய துறைமுகமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பை அளித்த சபாநாயகர் அவர்களுக்கும், மற்றவர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. SHUNMUGAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இச்சபையிலே இவ்வளவு நேரம் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைமீது ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்களும், எதிர்கட்சியைச் சார்ந்த எனது தோழர்களும் விரிவாக தங்கள் உரையை நிகழ்த்தினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத் தினர்கள் சம்பிரதாய முறைப்படி, கவர்னர் பெருமான் உரைமீது தாங்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள் என்ற முறையிலே வாழ்த்தி, பாராட்டியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படி அவர்கள் பாராட்டிப் பேசினாலும் கவர்னர் அவர்கள் உரையில் பாராட்டுதற் குரிய வகையில் நாட்டின் நிலைமையிலோ அல்லது மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் வகையிலோ கவர்னர் அவர்கள் உரையில் எந்தவிதமான வழிவகையும் இருப்பதாக யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள், என்றுதான் நான் கருதுகிறேன். கவர்னர் உரையில் வழக்கம்போல் செய்துகொள்ளும் சம்பிரதாய வழி பாடுகள் காணப்படுகின்றனவே தவிர உண்மை நிகழ்ச்சிகள், உண்மை செயலாற்றங்கள் அதில் எடுத்துக் காட்டப்படவில்லை. வேண்டுமானால் அவை உண்மைக்கு மாறாகயிருக்கிறது என்று சொல்வதற்குக்கூட இடமிருக்கிறது பெரும்பாலான உறுப்பினர் அவை பற்றி விரிவாக எடுத்துச் சொல்லியிருந்தாலும்கூட நான் அதை மறுமுறை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தங்களைச் சுற்றிக் கிளப்பப்பட்ட அரசியல் மாச்சரியங்களால் பரபரப்படையாமல் நிதானத்தோடும் விவேகத்தோடும் தங்கள் வாக்குரிமையைச் செலுத்திய பொது மக்கள் பெரிதும் பாராட்டத் தக்கவர்களாவர் என்று சொல்லியிருக்கிறார்கள். நாட்டு மக்கள் கவர்னர் பெருமான் அவர்கள் கருதுகிறபடி விவேகத்துடன் நடந்து கொண்டார்கள் என்பது ஓரளவு பெருமைப்படக்கூடியது தான். அவர்கள் கூறியிருக்கிறபடி நிகழ்ச்சிகள் நடந்ததா, நடந் திருக்குமா என்பதை நாம் ஆலோசித்துப் பார்த்து ஒரு முடிவிற்கு வரலாம். உண்மை கவர்னர் உரையில் உள்ளபடியல்ல. இங்கு

25th April 1962] [Sri M. Shunmugam]

நடைபெற்ற விவாதத்தில் சொன்ன நிகழ்ச்சிகள்தான் உண்மையாக நடைபெற்றவை என்பதை எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. நாமே ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் கேள்வி நேரத்தின்போது கேட்ட கேள்வியிலிருந்து, உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி கேள்விக்கு பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கேள்வியைக் கிளப்பியிருந்தார்கள். அதற்குத் தக்க பதில் அமைச்சர் அவர்களிடமிருந்து கிடைத்தது. எந்த முறையில் தேர்தல் நடைபெறவேண்டுமென்பது குறித்து ஒரு திட்டத்தை, ஒரு ஒழுங்கை அமைக்கவேண்டுமென்று திட்டமிட்டார்களோ அந்த ஒழுங்குமுறை கையாளப்படவில்லையென்று அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அதற்குக் காரணம் என்னவாக யிருக்கக் கூடுமென்பதை பற்றி நான் இங்கு விளக்க வேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறேன். அடுத்தாற்போல் ஒரு அங்கத்தினர் இதுபற்றி விசாரிக்க சி.ஐ.டி. டிப்பார்ட்மெண்டிடம். ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறீர்களா என்று கேட்டதற்கு. தேர்தல் காலங்களில் சகஜமாக மேடைகளில் பேசும் விஷயமாக இது இருப்பதால் சி.ஐ.டி. இதைப்பற்றி விசாரிக்க வேண்டிய அவசியமில்லையென்று குறிப்பிட்டார்கள்.

அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்பட்ட நிலைமைகளைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டிருப்பதோடு, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, அதிகமான அளவில் நிதி தேவைப்படும், அதற்கான வழிவகைகளை புதிய நிதி அமைச்சர் அவர்கள் கண்டுபிடிப்பார்கள் என்று குறிப்பாக சொல்லி, நாட்டில் நிதி அதிகமாக தேவைப் படுகிறது. அதற்குண்டான வழிவகையை கண்டுபிடித்தாக வேண்டும் என்கின்ற குறிப்பையும் தந்திருக்கின்ருர்கள். அதோடு கவர்னர் அவர்கள் ஐந்தாவது பாராவில் குறிப்பிட்டிருப்பது .... "திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நிதிவசதி முக்கியமானது தான், ஆனல் அது மட்டும் போதாது. திட்டச் செலவுகள் அதிகரிப்புக்கு ஏற்ப நிர்வாகத் திறமையும் அதிகரித்தாலொழிய, உருப்படியான பலனிருக்காது ...." என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். நிதி திரட்டுவது மட்டும் அல்ல, நிர்வாகத்தையும் சரியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று மறைமுகமாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். நிதி வசூலித்தாலும் கூட, அதை திறம்பட நடத்துவதற்கு நல்ல நிர்வாகம் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். கழிந்த இரண்டு நாட்களாக நடைபெறக் கூடிய இந்த விவாதத்தில், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறையை மட்டும் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள் என்று மட்டும் தான், ஆளும் கட்சியிலுள்ளவர்கள் சொல்லுகிருர்களே தவிர, எங்கள் கட்சியிலுள்ளவர்கள் சொல்லுகின்ற குறைகளில் இருக்கின்ற உண்மை என்ன என்பதை சிந்திக்க தவறி விடுகிருர்கள். பொதுப்படையாக குற்றம் கூறுகிருர்கள் என்று மட்டும் சொல்லுகிருர்கள். கவர்னர் உரைமீது சொல்லப்படும் குறைகள் யாவும் சரியானதுதான என்பதை ஆளும் கட்சியினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கட்சித்

[Sri M. Shunmugam] [25th April 1962

தோழர்களுக்கு ஆளும் கட்சியைப்பற்றி மட்டும் குறை கூறிக் கொண்டு இருக்கவேண்டும் என்றோ அல்லது அமைச்சர்கள் மீது குறை சொல்லிக்கொண்டு இருக்கவேண்டும் என்றோ தனிப்பட்ட முறையில் யாருக்கும் எண்ணம் கிடையாது. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் கட்சி மக்களுக்கு கடமை யாற்றுவதற்காகவும், மக்களுக்கு நல்ல பல வேலைகளை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் எங்கள் கட்சித் தோழர்கள் பல குறைகளை எடுத்துச் சொல்லுகிறார்கள். அந்த முறையில்தான் கவர்னர் உரைமீது குறை சொல்லுகிறார்களே தவிர குறை சொல்லிக்கொண்டிருக்கவேண்டும் என்ற பழக்க வழக்கம் எங்கள் கட்சியிலுள்ளவர்களுக்கு இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக மக்களிடத்தில் எதிர் கட்சியிலிருக்கின்ற எங்களுக்கு சகஜமாக பழகிக்கொள்ளுகின்ற வாய்ப்பு இருப்பதினால் மக்களுடைய குறைகள் என்ன என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. அதன் காரணமாகத்தான் ஆளும் கட்சியில் ஏற்படுகின்ற குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதோடு மக்களின் குறைகளை எடுத்துச்சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அடுத்தபடியாக விவசாயத் துறையில் மின்சாரம் அதிகப்படியாக வழங்கப்பட்டிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் சொல்லி யிருப்பது வெறும் ஏட்டளவில் தான் இருக்கிறதே தவிர விவசாயி களுக்கு போதுமான அளவுக்கு பயன்படவில்லை என்பதையும், மின்துறையில் போதிய அளவிற்கு நிர்வாக இயந்திரம் மக்களுடன் ஒத்துழைத்து செயல்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதை ஆட்சியாளர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிற்சாலைகள் எல்லாம் நாட்டில் அதிகப் படியாக ஏற்படுத்தப்பட்டு, நாடு முன்னேற்றம் அடைந்துவருவ தாக சொல்லப்பட்டிருக்கிறது. தென்னார்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு ஏற்படுத்தப்பட்ட மட்ராஸ் வனஸ்பதி தொழிற்சாலை கழிந்த ஏழெட்டு ஆண்டு காலமாக நிறுத்தப் பட்டிருக்கிறது. இதற்கு 45 லட்சம் ரூபாய் மூலதனம் போடப் பட்டு, இப்போது அந்தத் தொழிற்சாலை மண்ணோடு மண்ணாகப் போய்க்கொண்டிருக்கிறது. நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொழிற் சாலைகளை அதிகம் ஏற்படுத்தப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் இம்மாதிரி 45 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்ட ஒரு தொழிற்சாலையை, மண்ணோடு மண்ணாகப் போய்க் கொண்டிருக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஏன் அரசாங்கம் ஏற்று எடுத்து நடத்த முன்வரவில்லை என்று தெரிய வில்லை. ஆகவே அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசாங் கமும் 10 லட்சம் ரூபாய் முதலீடாக போட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தும் ஏன் இதை பார்த்துக் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை . . . (மணியடிக்கப்பட்டது)

25th April 1962]

* **SRI A. ARUMUGAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய மாநில கவர்னர் அவர்கள் ஆற்றிய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கம் வட்டத்தைச் சேர்ந்த தானிப்பாடி தொகுதியிலிருந்து வெற்றிபெற்று அங்கத்தினராக இந்த மன்றத்திற்கு வந்திருக்கும் எனக்கு இந்த தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சியுறுகிறேன். நம்முடைய ஜனநாயக சர்க்காரில், மூன்று துறையில் ஜனநாயக ஆட்சி நடைபெற்று வருகின்றன. அதில் நிர்வாகத்தின் தலைவராக மதிப்பிற்குரிய கவர்னர் பெருமகனார் அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே கவர்னர் என்ற பதவி நமது நாட்டுக்கு மிகவும் தேவை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மதிப்பிற்குரிய கவர்னர் அவர்களது உரையில் உத்தியோகஸ்தர்களுடைய சேவையைப்பற்றி மிகவும் பெருமையாக பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக இந்த மாநிலத்திலிருக்கின்ற உத்தியோகஸ்தர்களுக்கு மிகவும் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு சம்பளத்தை சற்று அதிகமாக்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ நன்மைகளை செய்கின்ற இந்த சர்க்காரானது இதிலும் கவனம் செலுத்தி அவர்களது சம்பளத்தை அதிகப்படுத்தி கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாநில அமைச்சரவையைப்பற்றி மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சரவையின் திறமையைப்பற்றியும், குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப்பற்றி அகில இந்தியாவிலும் புகழப்பட்டு வருகிறது. நம்முடைய நாட்டுக்கு அண்மையில் வந்திருந்த பிரிட்டிஷ் இளவரசியாரின் கணவர் எடின்பரோ கோமகனார், நாங்கள் மீண்டும் ஒரு முறை இங்கு வரும்போது நீங்களே இந்த மாநிலத்திற்கு முதலமைச்சராக இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு போனார்கள். அந்த அளவுக்கு நமது அமைச்சரவை பாராட்டுக்களை பெற்றிருக்கிறது.

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதிலும் நமது மாநிலம் முதலிடம் பெற்றிருக்கிறது. இதிலிருந்து நமது அமைச்சரவையின் திறமை நன்கு புலப்படுகிறது. நம்முடைய நாட்டில் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களில் பின்தங்கிய வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்கள் வாழும் இடங்களில் எல்லாம் குடி தண்ணீர் வசதி, ரோடு வசதி, மின்சார வசதி இவைகள் செய்து கொடுப்பதற்கு அந்தந்த இடங்களிலுள்ள பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் சில வேலைகளை நடத்துவதற்கு பஞ்சாயத்திலிருந்து கொடுக்கவேண்டிய தொகையை அந்த கிராமத்திலிருந்து கொடுக்க முடியாத காரணத்தினால் பல

[Sri A. Arumugam] [25th April 1962

வேலைகள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரிப்பட்ட இடங்களில் சர்க்காரே இந்த பங்குத் தொகையையும் கொடுத்து இப்பேர்ப்பட்ட கிராமங்களிலிருக்கும் மக்களுக்கு எல்லாவித சலுகைகளையும் செய்து கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்த அளவிலே நம்முடைய மாகாணத்திலே அந்த இலாகாவின் அமைச்சர் அவர்கள் நல்ல தொரு திட்டத்தைக் கொண்டுவந்து, பல ஆறுகளுக்கு அணைக் கட்டுகள் கட்டி நீர்ப்பாசன வசதி செய்திருக்கிறார்கள். இன்னும் சிறுசிறு ஏரிகளிலும், சிறுசிறு தேக்கங்களில் எல்லாம் அணைகள் கட்டி நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுப்பதற்கு சர்க்கார் முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் துறையிலே எல்லா மாநிலங்களையும்விட நம்முடைய மாநிலம் முதலிடம் பெற்றிருக்கிறது என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கூட குறிப்பிட்டார்கள். அந்தத் துறையிலே மின்சார இலாகா அமைச்சர் அவர்களையும், மின்சார இலாகாவிலே பணி புரிகின்ற உத்தியோகஸ்தர்களையும் பாராட்டும் முகத்தான், அவர்களுடைய சேவை இன்னும் துரிதமாக செயல்பட்டு, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் செய்து கொடுக்கின்ற முறையிலே தொண்டு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செங்கல்பட்டிலிருந்து, சேத்துப்பட்டு வழியாக, திருவண்ணாமலை, சின்னசேலத்திற்கு ஒரு ரயில்பாதை போடவேண்டுமென்ற ஒரு திட்டத்தை மதிப்பிற்குரிய திரு. ஓ. வி. அளகேசன் அவர்கள் மத்திய சர்க்காரிலே அமைச்சராக இருந்த போது சில நல்ல திட்டங்களை வைத்திருந்தார்கள். ஆகவே அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நமது சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் திண்டிவனத்திலிருந்து, செஞ்சி, திருவண்ணாமலை, செங்கம் வழியாக திருப்பத்தூருக்கு ஒரு ரயில்பாதை போடுவதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் துறையிலே நம்முடைய மாநிலத்திலே பல நல்ல காரியங்கள் செய்திருந்தாலும், வடஆற்காடு ஜில்லாவில் பல தொழில்கள் ஏற்படுவதற்கு சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக உரத் தொழிற்சாலை, சர்க்கரை தொழிற்சாலை, தொழில்பேட்டை அதாவது இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பாலிடெக்னிக் போன்ற பல கல்வி வசதிகள் எல்லாம் திருவண்ணாமலை பகுதியிலே ஏற்படுத்த சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய சர்க்கார் ஐந்து மைல்களுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி வீதம் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே எங்கள் தாலுகாவிலே சுமார் 10, 15 ஆண்டுகளில் 7 உயர்நிலைப்

25th April 1962] [Sri A. Arumugam]

பள்ளிகளை ஏற்படுத்தி, அதிலே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் படித்து, கல்லூரிக்கு போவதற்கு 100 மைல்களுக்கு அப்பால் போகக்கூடிய ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் குறையையும் தீர்ப்பதற்கு திருவண்ணாமலையில் ஒரு கல்லூரியையும் ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய காலஞ்சென்ற திரு. அண்ணாமலை பிள்ளை அவர்கள் திருவண்ணாமலையில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்பதற்காக வந்தவர் மாரடைப்பால் காலஞ்சென்றிருக்கிறார். ஆகவே, அவருடைய நினைவாக, அவருடைய கனவை நினைவாக்குவதற்காக அவர்பால் மதிப்பு கொண்டிருக்கும் முதல் மந்திரி அவர்களும், நிதி மந்திரி அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் பெரிய மனம் வைத்து திருவண்ணாமலையில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய செங்கம், திருவண்ணாமலை தாலூகாவிலே ரோடு வசதிகள் இல்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, ராமநாதபுரத்திலே ஜீப் சர்வீஸ் நடத்துவதைப்போல், எங்கள் வட ஆற்காடு ஜில்லாவிலும் இம்மாதிரியான ஜீப் சர்வீஸ்கள் நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஹரிஜனங்களுக்கு நன்மை செய்கிற முறையிலே நம்முடைய சர்க்காரானது அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கக்கூடிய முறையிலேயும், மற்றத் துறைகளிலேயும் சரிவர முன்வராததற்கு காரணம் என்னவென்பதை ஆராயும் வகையிலே ஒரு கமிட்டி நியமித்திருப்பதாக 10 தினங்களுக்கு முன்பு பத்திரிகையிலே படித்தேன். அதற்காக நான் நமது அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். பல ஆண்டுகளாக எல்லாத் துறைகளிலும் பின்தங்கிவந்த ஹரிஜனங்களை முன்னுக்கு கொண்டுவரக்கூடிய வகையிலே இப்படி ஒரு கமிட்டி அமைப்பதற்கு முன்வந்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இன்னும் வட ஆற்காடு மாவட்டத்திலே ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதிகள் செய்துகொடுப்பதற்கு நல்ல முறையிலே பல திட்டங்கள் இருக்கின்றன. அதிலேயும் உடனடியாக கவனம் செலுத்தி, அவர்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுப்பதற்கும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே என்னை எதிர்த்து நின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பலவகையிலும் எனக்கு தொந்தரவுகள் கொடுத்தார்கள். இந்த அரசாங்கம் எல்லாவற்றிற்கும் வரி போடுகிறது, ஆடு வைத்திருந்தால் வரி, கோழி வைத்திருந்தால் வரி என்றெல்லாம் உண்மைக்குப் புறம்பான விஷயங்களை பின்தங்கிய மக்களிடத்திலே எடுத்துக் கூறி அங்கேயுள்ள மக்களையெல்லாம் கலவரமடையச் செய்தார்கள். அதனால் அந்தப் பகுதியிலே வசிக்கின்ற

[Sri A. Arumugam] [25th April 1962

கொள்ளவும், கோழியை வைத்துக்கொள்ளவும் பயப்படுகிறார்கள். இத்தகைய காரியங்களையெல்லாம் அவர்கள் செய்த காரணத்தினால், அங்குள்ள மக்கள் தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையை எதிர்க்கட்சியினர் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(Mr. Speaker in the Chair.)

என்னுடைய தானிப்பாடி தொகுதியிலே சில சிற்றாறுகளும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நீர்ப்பாசன வசதியுள்ளவைகளாக்கினால், நிலங்களை வளப்படுத்த முடியும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய தானிப்பாடி தொகுதியிலே நான் கூறிய எல்லாக் காரியங்களையும் சர்க்கார் செய்ய வேண்டுமென்று கோட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

SRI M. DHANDAYUTHAPANI : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரேபணையை ஆதரித்துப் பேச எனக்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் பெருமான் ஆற்றிய உரையிலே தஞ்சை மாவட்டத்தில் ஏற்கனவே அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள தீவிர சாகுபடித் திட்டம், அந்த மாவட்டத்தின் மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கிற முறையிலே அதை நான் வரவேற்கிறேன் அந்த தீவிர சாகுபடித் திட்டம் நல்லமுறையிலே வெற்றிபெற சில இடைஞ்சல்கள் இருந்து வருகிறது. அதை நிவர்த்தி செய்தால் நல்லமுறையிலே எதிர்பார்த்த பலன் அடைய முடியும். குறிப்பாக, தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் வினியோகம் செய்யப்படுகின்ற உரம் காலாகாலத்திலே குறிப்பிட்ட இடத்திலே கிடைப்பதில்லை. இந்த நிலை சென்ற ஆண்டிலே அந்தப் பகுதியிலே இருந்தது. இனியாவது அப்படியில்லாமல் விவசாய காலத்திலே அந்த உரத்தை வினியோகம் செய்வதற்கு வழிசெய்தால், நல்ல முறையிலே பலன் கிடைக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்ல. குறிப்பாக, இந்த தீவிர விவசாய சாகுபடித் திட்டம் தஞ்சை ஜில்லாவில் பட்டுக்கோட்டை தாலூகாவில் முதன்முதலாகக் கொண்டுவரப்பட்டது. இந்த பட்டுக்கோட்டை தாலூகாவில் தண்ணீர் பற்றாக்குறை அதிகம். குறிப்பாக, சி.எம்.பி. பாசனத்தில் டெய்ல் எண்ட் என்று சொல்லப்படுகின்ற பகுதி பட்டுக்கோட்டை தாலூகாதான். ஒரு காலத்திலும் அங்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. அப்படிக் கொடுக்கும் தண்ணீரும் காலத்தில் வந்து சேருவதில்லை. இந்த உரத் தட்டுப்பாட்டையும், தண்ணீர் தட்டுப்பாட்டையும் நீக்கினால், தஞ்சை ஜில்லாவிலே அமுலுக்கு கொண்டுவரப்போகும் இந்த தீவிர

25th April 1962] [Sri M. Dhandayuthapani]

விவசாய சாகுபடித் திட்டம் நல்ல முறையில் மக்களுக்கு பலனளிக்கும் என்று இந்த இடத்திலே கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, கவர்னர் பெருமான் உரையிலே 7-வது பாராவிலே மின்சாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். மின்சாரத் துறையிலே அகில இந்தியாவிலும் சென்னை முதலில் இருக்கிறது என்ற ஒரு விஷயத்தில் நாம் அனைவரும் பெருமைப் பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். குறிப்பாக, ஆண்டு ஒன்றுக்கு 1,500 கிராமங்களுக்கு மின்சாரவசதி அளிக்கப்படுகிறது என்றும், ஏறத்தாழ 1,37,000 பம்பு செட்டுகள் இயங்கி வருவதாக வும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த இடத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரத்தநாடு தாலுகாவிலே பாசனத் திற்கு ரிவர் பம்பிங் ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ரிவர் பம்பிங் ஸ்கீம் மூலம் தண்ணீர் விடுவதால், ஒரு ஏக்கருக்கு 107 ரூபாய் தண்ணீர் தீர்வை ஆகின்றது. அந்த நிலைமை மாற்றி அங்கு மின்சாரத்தை கொண்டு சென்றால், அப்போது ஏக்கரா ஒன்றுக்கு 32 ரூபாய் தான் தண்ணீர் தீர்வை ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகையால் இந்த இடத்திற்கு அந்த மின்சாரத்தை டெம்பரரியாகக் கொடுத்தால், விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், அதே பாராவிலே "அணுசக்திக் கமிஷன் உயர்தரக் கமிட்டி ஒன்று, தமிழ்நாட்டில், அணு சக்தி மின்சார நிலையம் ஒன்றை அமைப்பதற்குத் தகுதி யான இடத்தைத் தேடி வருகின்றது" என்று கூறியுள் ளார்கள். இந்த அணுசக்தி மின்சார நிலையம் சாதாரண மாக தஞ்சை ஜில்லாவில் ஏற்படவேண்டும் என்று நான் கூறினால், எனது ஜில்லாவிற்கு நான் கேட்கிறேன் என்று பலர் ஐயப்படலாம். குறிப்பாக தஞ்சை ஜில்லாவிலே விவ சாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடையாது. விவசாயம் ஒன்றுதான் அங்கு ஒரு பெரிய தொழிலாக இருந்து வருகிறது. தொழில் வளர்ச்சி மிகவும் குறைவாக ஏற்பட்டிருக்கிற ஜில்லா அது. ஆகவே, அணு சக்தி மின்சார நிலையத்தை தஞ்சை ஜில்லாவில் துவக்கினால், அங்கே தொழில் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மாற்றுத் தொழில் செய்ய வாய்ப்பு ஏற்படும். அணுசக்தி மின்சார நிலையத்தை தஞ்சாவூர் ஜில்லாவில் ஏற்படுத்தவேண்டும் என்று இந்த சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், கவர்னர் அவர்களின் உரையிலே சேலத்தில் புதிய காகிதத் தொழிற்சாலை, அலுமினியம் தொழிற்சாலை, மேலும் ஒரு பெரிய கலப்பு உருக்குத் தொழிற்சாலை, திருச்சியில் கனரகக் கொதிகலன் தொழிற்சாலை, உதகையில் போட்டோ பிலிம் தொழிற் சாலை, கிண்டியில் அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை, ஆவடியில் கனரக ராணுவ வண்டிகள் உற்பத்திக்கான தொழிற்

சாலை ஆகியவைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன என்று கூறியுள்ளார்கள். இவைகளெல்லாம் பார்க்கும்பொழுது, எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று கூறுவதற்கு மாறாக, தெற்கு தேயவில்லை, தெற்கும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு நிலையை விளக்குகிறது.

முதியோர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை பிள்ளை இருப்பவர்களுக்கு இல்லை என்ற ஒரு விதி இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, பிள்ளைகள் இருந்தும், இல்லாதவர்களாக இருக்கும் முதியோர்களுக்கு அந்த உதவித் தொகை கிடைக்க வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவிலே பல பகுதிகளில் சாலை வசதி இல்லாத கிராமங்கள் இருக்கின்றன. அந்த இடங்களில் ஆற்றுக் கரையை சாலையாக உபயோகிக்கலாம் என்ற ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு, பல பேர்கள் வாழும்படியான கிராமங் களில் ஆற்றுக் கரையை சாலையாக மாற்றும் உரிமையை வழங் கினால், பலத்த ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்கு மேலும் வசதி பெருக வாய்ப்பாக இருக்கும். அந்த ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு பேசுவதற்கு அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri K. CHEEMAICHAMY :** மதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே, வழக்கமாக அரசாங்கம் தயாரித்த உரையை கவர்னர் பெருமான் அவர்கள் இரண்டு நாட் களுக்கு முன்பு நிகழ்த்தினார்கள். அது உப்புச் சப்பு இல்லாத ஒரு உரையாக இருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக அதிகாரம் கொடுக்கப்பட்டு, கிராம அபிவிருத் திக்கான திட்டம் வகுத்து, அதை நிறைவேற்றும் பொறுப்பு, அதிகார இயந்திரத்திலிருந்து மக்களின் பிரதிநிதிகளுக்கு மாற்றப் பட்டிருக்கிறது என்று கூறினார்கள். உண்மையிலேயே பஞ்சாயத்து யூனியன்களுக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது பஞ்சாயத்து யூனியன் சேர்மனாகிய எனக்குத்தான் ஓரளவுக்கு தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் வெகுவாக பாராட்டி பேசினார்கள். உண்மை யிலேயே பார்க்கும்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்டால், அதிகாரம் எதுவுமே கிடையாது என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். மாவட்ட போர்டுகளிடம் இருந்த அதிகாரங்கள் அத்தனையும் அரசாங்கத் தினடமும், கலெக்டரிடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதி காரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்கின்றன. அந்த அதிகாரங்கள் பரவலாக்கப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப் படையில்தான் இந்த மாவட்ட போர்டுகள் கலைக்கப்பட்டு, 1958-வது வருஷச் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்து மன்றங்கள்

அமைக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட போர்டுகள் நிர்வகித்து வந்த செகண்டரி ஸ்கூல்ஸ், (ஹைஸ்கூல்ஸ்) நிர்வாகம் இப்பொழுது கலெக்டரிடம் இருக்கிறது. காந்தி கனவு கண்ட ராம ராஜ்யம், காந்தி கனவு கண்ட கிராம ராஜ்யம் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால், ஹைஸ்கூல்களை நிர்வாகம் செய்கின்ற அதிகாரம் பஞ்சாயத்து யூனியன்களிடம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், கொடுக்கப் படவில்லை. என்ன காரணம் என்றும் தெரியவில்லை.

அடுத்தபடியாக, மாவட்ட போர்டுகள் நிர்வகித்து வந்த வைத்தியசாலைகள் எல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் நேர்ப் பார்வையின் கீழ் வந்துவிட்டன. இந்த வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் களிடம் இருக்கிறதே ஒழிய, இந்த வைத்தியசாலைகளில் வேலை பார்க்கும் டாக்டர்கள் அல்லது மற்ற அலுவலர்களின் பேரில் எந்தவிதமான அதிகாரம் செலுத்துவதற்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உரிமை கிடையாது. உண்மையிலேயே பேசுகிற பொழுது அத்தனை பேர்களும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளை அவர்கள் பூர்த்தி செய்து வைக்கவேண்டும். அதற்கு வேண்டிய நிதிவசதிகள் கொடுக் கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இவைகளெல் லாம் பேச்சு அளவிலே இருக்கின்றனவே ஒழிய, நடைமுறையில் பார்க்கிறபொழுது, பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை என்று நிச்சயமாக சொல்லு வேன்.

அடுத்தபடியாக, மாவட்ட சாலைகள் (டிஸ்டிரிக்ட் போர்டு ரோட்ஸ்) மாவட்ட மன்றங்களால் பராமரிக்கப்பட்டு வந்தன. மாவட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டவுடன், அந்தப் பெரிய மாவட்ட சாலைகள் அத்தனையும் அரசாங்க பராமரிப்பிலே கொண்டு வரப்பட்டன. அந்தப் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அந்த சாலைகளை பரா மரிக்கிற பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதா என்று கேட்டால், உண்மையிலேயே ஒப்படைக் கப்படவில்லை. அந்த பொறுப்பை மாநில அர்சாங்கம் ஏற்று நடத்தும் என்று கூறப்படுகிறது. காந்தி கனவு கண்ட ராம ராஜ்யம், கிராம ராஜ்யம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்று சொன்னால், நீங்கள் நினைக்கிற அளவுக்கு அந்த கிராம மக்களுடைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று சொன்னால், மேலே குறிப்பிடப்பட்ட மாவட்ட கழகங்களினால் நிர்வகிக்கப்பட்ட மூன்று பெரிய வேலை களையும் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவைகளை நிர்வகிக்கும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைக்க வழிவகைகள் செய்யவேண்டும், இப்பொழுது இருக்கும் நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும் என்று முதல்

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று எங்கு பார்த்தாலும், வெகுவாக பிரசார அளவிலே பேசப்படுகிறதே தவிர, எழுத்து அளவிலே இருக்கிறதே தவிர உண்மையில் என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்டால், ஒன்றும் கிடையாது என்று தான் நிச்சயமாகச் சொல்லுவேன். 'எய்டட் ஸ்கூல்ஸ் அல்லது மானேஜ்மெண்டு ஸ்கூல்ஸ்' ஆகியவைகள், பள்ளிகள் சரியாக நடைபெறவில்லை என்று சொன்னால், அவைகளுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் கொடுக்கின்ற கிராண்டுகளை நிறுத்துவதற்கு பஞ்சாயத்து யூனியன் சேர்மன் அல்லது பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு எந்தவித மான அதிகாரமும் கிடையாது. ஆனால், நாங்கள் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஆசிரியர்களுடைய சம்பளம், பள்ளிகள் பரா மரிப்பு செய்வதற்கு வேண்டிய தொகை ஆகியவைகளை கொடுக்க வில்லை என்று சொன்னால், அவர்கள் உடனே எங்களை மிரட்டு கிறார்கள். 'உடனே கலெக்டருக்கு தந்தி கொடுப்போம், ஆசிரியர்களுடைய சம்பளத்தை உடனே கொடுக்கவேண்டும்' என்று பயமுறுத்துகிறார்கள். உண்மையில் பஞ்சாயத்து யூனியன் களிடமிருந்து சம்பளம் பெறுகிறவர்கள் மீது எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. 1961-ம் வருஷம் நவம்பர் மாதம் நடந்த முதலாவது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மகா நாட்டில் கூட 'எய்டெட் ஸ்கூல்ஸை', நிர்வகிக்கின்ற பொறுப்பு, அதற்கு வேண்டிய முழுப் பொறுப்பு அத்தனையும் பஞ்சாயத்து யூனியன்களிடம் மாற்றவேண்டும் என்று கேட்கப்பட்டது. அதற்கு அரசாங்கத்திலிருந்து வந்த உத்தரவு என்னவென்றால், நீங்கள் பள்ளிக்கூடத்திற்கு சென்று பார்வையிடலாம், ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் சரியாக நடைபெறவில்லை என்றால், அதற்குக் கொடுக்கக்கூடிய கிராண்டுகளை நிறுத்துவதற்கு உங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது என்பது தான். ஆனால் வெளியே பேசுகிறபொழுது பஞ்சாயத்து யூனியன் களுக்கு அதிகமாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று பேசுகிறார்கள், பிரசாரம் செய்கிறார்கள்.

எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் தவறாக நடந்துகொண்டால், அல்லது அந்தப் பள்ளியில் ஏதாவது தவறு நிகழ்ந்தால், அவர்கள் செய்கின்ற காரியங்களை முறையாக செய்யவில்லை என்று சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகிய பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அவர்கள் பேரில் நேரிடையாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் பஞ்சாயத்து யூனியன் சேர்மனிடம் இல்லை, கமிஷனரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாவட்ட போர்டுகள் கலைக்கப்படுவதற்கு முன்பாக, பள்ளி ஆசிரியர்கள் ஏதாவது குற்றம் செய்தால் அவர்கள் தண்டிக்கவேண்டிய பொறுப்பு அத்தனையும் மாவட்ட போர்டு தலைவரிடத்தில் தான் இருந்தது. மாவட்ட போர்டுகள் எந்த நோக்கத்தோடு, எந்த அடிப்படையில் கலைக்கப்பட்டனவோ, அந்த நோக்கம் நிறை வேற்றப்பட்டிருக்கிறதா, அந்த நல்லெண்ணம் பூர்த்தி செய்யப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் மாவட்ட மன்றங்களுக்கு

25th April 1962] [Sri K. Cheemaichamy]

அதிகமான அதிகாரம் இருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் மாவட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்பட்டனவோ என்று நான் நினைக்கிறேன். இந்தப் பள்ளி ஆசிரியர்கள் ஏதாவது தவறு செய்தால், அவர்களைக் கண்டிக்கிற பொறுப்பு முன்பு மாவட்டக் கழகத் தலைவர்களிடம் தான் இருந்தன. அந்த மாவட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் வந்தவுடன், அந்தப் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு போய்விட்டது. ஆகவே, மாவட்ட போர்டுகள் கலைக்கப் பட்டதன் நோக்கம் எங்கே இருக்கிறது? உண்மையிலேயே அதிகாரம் பரவலாக இருக்க வேண்டுமென்று செய்யப்பட்டதாகச் சொல்லப் பட்டது. ஆனல், அம் மாதிரி அதிகாரம் பரவலாகச் செய்யப்படவில்லை. மாவட்ட மன்றத் தலைவர்களுக்கு அதிகமாக அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மாவட்ட போர்டுகளைக் கலைத்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அவர்களிடம் இருந்த அதிகாரங்களும் அதிகாரிகளிடம் மாற்றப் படவேண்டும் என்பதுதான். இதை எந்த எண்ணத்தில் செய்து அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பஞ்சாயத்து வரிவசூல் கிராம அதிகாரிகளிடம் இருக்கிறது. நில வரிவசூலையே சரிவரச் செய்ய முடியாமல் அவர்கள் இருக்கும் போது, பஞ்சாயத்து வீட்டு வரியை அவர்கள் வசூலிப்பதே இல்லை. அதனல், **House tax Matching grant** சரியாக வாங்க முடிவதில்லை. அப்படி இருப்பதை நாங்கள் கலெக்டரிடம் முறையிட்டால், அவர் ரெவின்யூ டிபார்ட்மெண்டாக இருப்பதாலோ என்னவோ, "ஆகட்டும் பார்க்கிறேன்" என்று தான் சொல்லுகிறர். உடனடியாக நடவடிக்கை எடுப்பதில்லை. குறைபாடுகள் இருக்கிறது என்று சொன்னல், அவர், "செய்கிறேன், செய்கிறேன்" என்று மட்டும் சொல்லுகிறர். நான் இந்த மாமன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்த பஞ்சாயத்தின் வரிவசூல் அதிகாரம் பஞ்சாயத்திடமே கொடுக்கப்படவேண்டும் அப்பொழுது நாங்களே குமாஸ்தாக்களைப் போட்டு வசூல் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்ய முடியும். அப்பொழுது கிராம மக்களுக்கு வேண்டிய நன்மைகளை துரிதமாகச் செய்ய முடியும். இந்த கிராம அதிகாரிகளும் ரெவின்யூ டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஏதாவது சொன்னல், அவர்கள் இவர்களுக்கு எந்த விதமான மதிப்பும் கொடுப்பதில்லை. டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில், மாவட்ட அபிவிருத்தி குழு இருக்கிறது. அது இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூட வேண்டுமென்றலும், நாங்கள் அங்கேயும் சிபாரிசு செய்யும் அளவுக்குத்தான் இருக்கிறேம். நாங்கள் சொல்வதை செயல் படுத்தும் அதிகாரமும் இருந்தால் தான் ஏதாவது மக்களுக்கு நன்மை செய்து, அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர வழிகாண முடியும். ரெவின்யூ டிபார்ட்மெண்டு அதிகாரிகளாக இருப்பதால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எதையும் செய்ய மறுக்கிறர்கள், தயங்குகிறர்கள். உண்மையிலேயே அந்த குழுவுக்கு கலெக்டருக்குப் பதிலாக, ஒரு ஜனநாயகப் பிரதிநிதி தலைவராக

இருந்தால்—கலெக்டர் அட்வைசர் என்ற அளவில் இருக்கட்டும்—நல்ல முறையில் பணியாற்ற முடியும். அதற்கு வேண்டிய வழி வகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

* **SRI K. S. MANI :** மாமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கவர்னர் பேருரையின் மீது விவாதம் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், நேற்றைய தினமும் இன்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் கவர்னர் பெருமான் பேருரையைப் போற்றி, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் வெளியிட்ட கருத்துக்கள் அத்தனையும், எதிர்க்கட்சிக்காரர்கள் அனைவருக்கும் அறிவுரை கொடுப்பது போலவும், வரஇருக்கும் பொதுத் தேர்தலில் ஆருடம் கணிப்பது போலவும் அமைந்து இருந்ததைப் பார்த்தோம்; நாங்கள் இங்கு வந்து சில பல குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று வந்தாலும், அவர்கள் ஆற்றிய விளக்கங்கள் கண்டு வருத்தப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சி பௌர்ணமி போன்று இருக்கிறது; ஆனால், எதிர்க்கட்சிகள், அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகம் அழிந்துவிடும் என்று யாரோ ஆருடம் கேட்டதற்கு பதில் சொல்லுவதுபோல் அவர்கள் காங்கிரஸ் பௌர்ணமி சந்திரன் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஒன்று நினைவு படுத்த விரும்புகிறேன். பௌர்ணமிக்குப் பிறகு அமாவாசை வருகிறது என்பதை அவர்கள் நினைவில் வைக்கட்டும். மற்றும் ஒரு முறை அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், பௌர்ணமிக்குப் பிறகு அமாவாசை காத்திருக்கிறது. பூர்ண சந்திரன் வந்த மூன்றும் நாள் சந்திரன் தேய்ந்து தோன்றும். அதே போல, இன்றைக்கு பௌர்ணமியாக இருக்கும் காங்கிரஸ் கட்சி சந்திரன் அமாவாசைக்குக் காத்திருக்கிறது என்பதுபோல் இன்றையதினம் அவர்கள் கருத்து அமைந்திருக்கிறது.

கவர்னர் பெருமான் பேருரையில், தமிழ் நாட்டில் 72 சதவிகிதமாக இருக்கும் விவசாயிகள் விவசாயத்தையே நம்பி இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு தெரியாமல் இருந்தாலும் அமைச்சர்கள் நினைவுபடுத்தியிருப்பார்கள். அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. விவசாயப் பெருமக்களுக்காக இந்த மாமன்றம் மூன்று சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. 1952-ல் தஞ்சாவூர் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், அதற்கும் பிறகு 1955-ம் வருஷத்து சாகுபடிதார், குத்தகைதார் சட்டம், அதற்கும் பிறகு சென்னை நியாயவாரச் சட்டம். இருந்தும், இன்றுவரை விவசாயிகள் அல்லல் பட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள். உழைத்து சாகுபடி செய்வது விவசாயி, ஆனால், அறுவடை செய்வது நிலச்சுவாந்தார்கள். நட்டவனை மீண்டும் நிலத்திலிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத் தீர்ப்பு ஏறத்தாழ 1959-ல் கிடைத்தது. அதன்படி, சட்டம் பாதுகாப்பு அளிப்பது குத்தகைகாரர்களுக்குத்தான் என்றும், உள் குத்தகைதாரர்

25th April 1962] [Sri K. S. Mani]

காரர்கள் வெளியேற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அதிலிருந்து இன்றைக்கு விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படிப்பட்ட விஷயங்கள் அமைச்சர் கவனத்திற்கு பல விவசாய சங்கங்கள் கொண்டு வந்திருப்பதோடு மட்டுமல்ல. நாங்கள் பொறுப்புடன் அண்மையில் திருப்பரங்குன்றத்தில் நடத்திய மாநாட்டில், தீர்மானம் முன்மொழிந்து, பெருவாரியான பொதுமக்கள் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். அப்படியெல்லாம் இருந்தும், கவர்னர் பெருமான் உரையில், அவர்கள் பாதுகாப்பைப் பற்றி எதுவும் சொல்லப் படவில்லை. விவசாயிகள் மனைக்கட்டுகள் விஷயமாக, நிலச்சுவான்தார்கள் சட்டத்தைப் புரட்டி பார்க்கிறார்கள். அதில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு எதுவும் இல்லை என்று தெரிந்து, அவர்களை வெளியேற்றுகிறார்கள். இருக்கும் மனையிலிருந்து அவர்களை வெளியேற்றுகிறார்கள். நான் சட்ட மன்றத்திற்கு வருவதற்கு ஒரு 25 நிமிடங்களுக்கு முன்னால், திருவாடுதுறை மடத்தினரால் வெளியேற்றப்பட்ட ஆறு நபர்கள் என்போர்ஸ்மெண்ட் ரெவின்யூ இன்ஸ்பெக்டருடைய உத்தரவையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். சட்டத்தில் இடம் இல்லாததால், அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டுதான் ஆகவேண்டும். இப்படிப்பட்டவர்கள், ஆதி திராவிட மக்கள். அவர்களுக்குக் குடியிருப்புக்குக் கூட வழியில்லை. வீட்டு வசதிகள் செய்து கொடுக்கிறோம், காலனி அமைத்துத் தருகிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்கள் இருக்கும் வீட்டை விட்டு வெளியேற்றப் படுகிறார்கள் இன்றைக்கு. இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதை சர்க்காருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். உள் குத்தகைக்காரர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள், தேவஸ்தானங்கள், மடங்கள் எல்லாம் அவர்களை அல்லலுக்கு உள்ளாக்குகிறார்கள். இன்றைக்கு குடந்தை சாரங்கபாணி கோவில் சம்மந்தப்பட்ட இது போன்ற ஒரு தகராறு, உயர்நீதி மன்றம் வரை ஒரு வழக்கு வந்திருக்கிறது. விவசாயிகளுக்கு ஏற்படுத்திய சட்டங்கள் எல்லாம் அவர்களுக்கு உபயோகமில்லாமல் இருக்கிறது. சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொண்டு உள் குத்தகைக்கு கொடுத்திருந்தாலும் சட்டப்படி செல்லுபடியாகாது என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது என்றால் எந்த அளவுக்கு இந்தச் சட்டங்கள் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்காத அளவில்தான் இந்தச் சட்டங்கள் அமைந்திருக்கின்றன. இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அதே சமயத்தில் விவசாயிகள் விவசாயத்திற்கு என்று உரம் வாங்கும்போது எவ்வளவோ அவதிப்படுகிறார்கள் என்பதைப் பற்றி ஆளும் கட்சியிலுள்ளவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியிலுள்ள என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலிருந்து வந்திருக்கக்கூடிய கனம் அங்கத்தினர் பாபநாசம் தொகுதி அங்கத்தினர் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறார். ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களே இப்படி அவதிப்படுகிறார்கள் என்றால் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வோட்டுப்போட்டப் பகுதியிலுள்ள விவசாயிகள் எந்த அளவில் அவதிப்படுவார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

[Sri K. S. Mani] [25th April 1962

அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக்கொண்டால் அந்த முறையிலும் நல்ல முன்னேற்றமடைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப் பார்த்தாலும் அது ஏட்டளவில் தான் எழுதப்பட்டிருக்கிறதே தவிர உண்மையில் அபிவிருத்தி அடைந்திருப்பதாகவே தெரியவில்லை. என்னுடைய தொகுதியில் அணைக்கரை அணைக்கட்டியிருக்கிறது. அதில் வருகிற தண்ணீர் ராஜன் வாய்க்கால் வழியாகச் செல்லுகிறது. அங்கு சரியான ஒரு வாய்க்கால் வெட்டி அந்த தண்ணீரை விட்டால் ஆயிரக் கணக்கான ஏக்கருக்கு பாய்ச்சலாம் என்பதை அங்குள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரே சொல்லி இருக்கிறார். அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்து அங்குள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருப்பதாகவும் சொல்லியுள்ளார். அதோடு இல்லாமல் தனக்கு ஓட்டு போட்டால் தன்னால் முடிந்த வரையில் சட்டசபையில் சொல்லி 24 மணி நேரத்திற்குள் அதை முடிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகவும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அப்படிச் சொல்லியும் இதுவரையில் பத்து வருஷங்களாகியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கையை இப்பொழுதாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது.) இன்னும் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போனாலும் வருகிற சந்தர்ப்பத்தில் அதற்கு வேண்டிய வாய்ப்பு அளிக்கக் கூடிய காலத்தில் எடுத்துச்சொல்லுகிறோம் என்று சொல்லிக்கொண்டு இப்பொழுது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **Sri K. R. SAMBANDAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது பேசும்போது ஒரு சில கருத்துக்களை கவர்னர் உரையை ஆதரித்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக இப்பொழுது நடைபெற்ற தேர்தல் நல்ல முறையில் நடந்தது. இதைப்பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலும், மற்ற கட்சி அங்கத்தினர்கள் பேசும் போதும் அதைப்பற்றி சொன்னார்கள். எவ்விதமான கலவரமும் இல்லாமல் நடந்தது என்றும், மக்களும் பீதி அடையாமல் நல்ல முறையில் தங்களுடைய கடமைகளைச் செய்திருக்கிறார்கள் என்ற கருத்தையும் தான், கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் தெரிவித்திருக்கிறார்களே தவிர அதில் எந்த விதமான குறைபாடுகளும் இல்லாத முறையில் நடந்தது என்றுதான் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இருந்த போதிலும் எதிர்க்கட்சி எப்படி நினைக்கிறது என்றால் காமாலைக்கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாக தெரியும் என்பதுபோல், எதற்கெடுத்தாலும் அவர்கள் குறை சொல்ல வேண்டும் என்ற கருத்தில்தான் குறைகளைச் சொல்லி வருகிறார்கள். இம்மாதிரி குறை சொல்லிக்கொண்டே வந்தால் உலகத்திலுள்ள மற்ற நாடுகளைப் போல் முன்னேற்றமடைய வேண்டுமென்றால் எத்தனை ஐந்தாண்டு திட்டங்கள் கொண்டு

வந்தாலும் முன்னேற்றமடையவே முடியாது. ஆகவே ஆக்க வேலைகளில் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அதைப்பற்றி நான் அதிகமாக பேச விரும்பவில்லை. கவர்னர் அவர்கள் உரையில் இருக்கக்கூடிய சில முக்கியக் கருத் துக்களைப்பற்றி மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். சென்ற தடவை நான் பார்லிமெண்டில் இருந்தபோது ஈஸ்ட் கோஸ்ட் ரோடு **(East Coastal Road)** போடுவதைப்பற்றி அங்கே தெரிவித் தேன். அப்பொழுது அங்கு அமைச்சராக இருந்த கனம் சுப்பராயன் அவர்கள் இதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார். அவர் எடுத்துச் சொல்லியும் கூட அதன் பிறகு அந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு இன்றைக்கும் உருப் பெற முடியாமல் இருக்கிறது. அந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடை எடுத்து நடத்தினால், அதைப்போட்டால், கடல் ஓரங்களில் இருக் கக்கூடிய மீனவர்களுக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கும். எவ்வளவோ நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும் அவர்களுக்கு. அவர்கள் தங்களுடைய மீன்களையெல்லாம் தலைச்சுமையாக எடுத் துச் சென்று நகரங்களுக்குப் போய் வியாபாரம் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இந்த ரோடை போட்டுக்கொடுத்தால் அவர்கள் நகரங்களுக்குச் சென்று தங்களுடைய மீன்களை விற்பனை செய்வதற்கு வசதியாக இருக்கும். அதற்கு அடுத்தபடி யாக 1946-47-ல் நான் ஜில்லா போர்டு அங்கத்தினராக இருந்த போது எடுத்துக்கொண்ட சின்னங்குடி, மாணிக்கப்பங்கு ரோடு திட்டத்தை எடுத்து முடிக்க நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வில்லை. இது 15 வருஷங்களாக பரிசீலனையில் இருக்கிறதே தவிர இரண்டு ரோடுகளும் முடிக்கப்படவில்லை.

அடுத்தபடியாக மின்சாரம் விநியோகம் சம்பந்தமாகச் சொல் லும்போது தஞ்சை ஜில்லாவிற்கு மின்சாரம் மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில் இன்னும் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தென் சென்னை மின்சார கார்பொரேஷன் என்பது ஒரு தனி மனிதர் கையில் இருப்பதால் அவர்கள் தங்களுடைய லாபத்தைக் கருதி அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். அவர் கள் லாபத்தை உத்தேசித்து இருப்பதால் விவசாயிகளுடைய சௌகர்யத்தை கவனிப்பதாகவே இல்லை. விவசாயத்திற்கு மின் சாரம் தஞ்சைக்கு எவ்வளவு அவசியமாக வேண்டியிருந்த போதிலும் வெளிச்சத்திற்கும் வேண்டியிருந்தபோதிலும்கூட நடை முறையில் அவர்கள் கொண்டு வருவதாகவே இல்லை. இதைப் பற்றி கனம் அமைச்சரிடமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மின்சாரம் விநியோகம் செய்வதை பிரத்தியாரிடம் விடாமல் ஏன் சர்க்காரே எடுத்து நடத்தக் கூடாது என்று கேட்கிறேன். தென் ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டங்களில் மின்சாரத்தை சர்க்காரே ஏற்று நடத்துவதால் நல்ல முறையில் பயன் அளிக் கிறது. தஞ்சை ஜில்லாவோ விவசாயத்தையே நம்பி இருக் கிறது. **"The tenants born in debt, live in debt and die in debt"** என்று தஞ்சை விவசாயிகளைப்பற்றி சொல்வது உண்டு. அதா வது தஞ்சை விவசாயிகள் கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து,

[Sri K. R. Sambandam] [25th April 1962

கடனிலே செத்ததாகச் சொல்வதுண்டு. அந்த நிலைமையில் தான் அங்குள்ள விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த மாதிரி இருப்ப வர்களுக்கு ஓரளவு டெனெண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் முதலிய வைகளைக் கொண்டு வந்தோம். தஞ்சை விவசாயிகளுக்கு பல விதமான பாதுகாப்புச் சட்டங்கள் இருந்த போதிலும்கூட அவர் கள் இன்றைக்கும் முன்னேற முடியாத நிலைமையில் இருக்கிறார் கள். குறிப்பாக மனைக்கட்டு வழங்கும் விஷயத்தில் தஞ்சை ஜில்லாவில் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆதி திரா விடர்களும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த குடியானவர்களும் திக்கற்ற நிலையில் இருக்கிறார்கள். இந்த உலகத்தில் உள்ள எல்லா வற்றிற்கும் வசிக்க இடம் இருக்கின்றன. மிருகங்கள் இருக்க குகை அல்லது பொந்து இருக்கின்றன. பறவைகளுக்கு கூடுகள் இருக்கின்றன. ஆனால் விவசாயம் செய்யக்கூடிய பிற்போக்கான மக்களுக்கு இருக்க இடம் கிடையாது. மாயூரம், சீர்காழி இந்த இரண்டு தாலூகாக்களுக்கும் மனைக்கட்டுகள் வழங்குவதற்கு என்று ஒரு தாசில்தாரை ஸ்பெஷல் ஆபீசராகப் போட்டிருக் கிறார்கள். அப்படி போட்டிருந்த போதிலும் இன்னும் அங்குள்ள மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு மனைக்கட்டுகள் இல்லாமல் எப்படி விவசாயம் செய்யமுடியும் என் பதை கவனிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மனைக்கட்டு வேண்டுமென்று மனுக்கள் வருகின்றன. அதை பரிசீலனை செய் வதற்கு வேண்டிய நிர்வாக அதிகாரிகளும் மற்ற வேலைகளைச் செய் வதற்கு வேண்டிய க்ளார்க்குகளும் இல்லை. அது மாத்திரம் அல்ல. தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை எப்படி அவசரச் சட்டமாகக் கொண்டு வந்தார்களோ அதைப்போலவே மனைக்கட்டுகள் வழங்குவதற்கும் ஒரு அவசரச் சட்டமகாக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லா விட்டால் அவர்கள் எங்கிருந்து கொண்டு சாகுபடியை கவனிக்க முடியும்.

அடுத்தபடியாக தஞ்சை ஜில்லாவில் பாக்கேஜ் ஸ்கீம் என்று சொல்லி அங்கே தீவிர உற்பத்தி திட்டங்கள் இருந்து கொண்டிருக் கின்றன. அங்கு சென்ற வருடத்தில் காவிரியில் வெள்ளம் வந்து கோயிலடியில் உடைப்பு ஏற்பட்டு விவசாயிகள் பெருவாரியாக பாதிக்கப்பட்டார்கள். நமது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்து வந்ததற்கு அவர்களை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இப்பொழுது கொள்ளடக்கரை மற்ற ஆற்றின் கரைகள் எல்லாம் உயர்த்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஆறுகளையும் ஆழமாகத் தோண்டவேண்டும். ஆறுகளுக்குள்ள மணல்போக்கிகள் எந்த நிலையில் இப்பொழுது இருக்கிறது என் பது யாருக்கும் தெரியாது. அங்கங்கே தண்ணீர் தேங்கித் தேங்கி மேடிட்டிருக்கிறது. மாயூரத்தில் சாதாரணமாக ஒரு முழ அடி தண்ணீர் தான் காவிரியில் போகிறது. அந்த அளவில் போகும்போது கூட நகரம் பாழாகி விடுமோ என்ற பயம் இருக் கிறது. ஆகவே காவிரியில் வெள்ளம் வரக்கூடிய காலத்தில் மாயூரத்திலுள்ள மக்கள் பெருவாரியாக பாதிக்கப்படுகிறார்கள்.

1-30 p.m.

25th April 1962] [Sri K. R. Sambandam]

நான் டெயில் எண்ட் மிராசுதார் என்ற முறையில் சொல்லுகிறேன். என்னைப்போல் பலர் இருக்கிறார்கள். காவிரியில் தண்ணீர் வரும் போது டெயில் எண்ட் சட்டரஸில் குறிப்பிட்ட அளவு தண்ணீர் தேவைக்குப் பிறகுதான் மேற்கே உள்ள வெண்ட்கள் எல்லாம் திறக்கப்படும். ஆனால் தற்சமயம் காவிரியில் தண்ணீர் விடப்பட்ட வுடனே எல்லா வெண்ட்களும் திறக்கப்பட்டு மேற்கே குறுவை சாகுபடி ஆரம்பமாகிறது. ஆனால் டெயில் எண்ட்டில் இருக்கக் கூடிய நாங்கள் தாமதமாகவே சாகுபடி ஆரம்பிக்க வேண்டியிருக் கிறது. இதை பழைய மாமூல்படி நடத்த வேண்டுமென்று அமைச் சரைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு காலத்தில் நன்றாக விளைந்த மாயூரம், நன்னிலம், நாகப்பட்டிணம் போன்ற இடங்களெல்லாம் இன்றைக்கு பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. குறுவை அதிகமாகச் சாகுபடி செய்கிறோம். அதற்கேற்றாற்போல் 'வெண்ட்'-களை அதிகப்படுத்த வேண்டும்; வாய்க்கால்களை ஆழ மாக்கவேண்டும். அப்பொழுதுதான் தண்ணீரை தேக்கும் நிலை ஏற்படும். இந்த விஷயத்தை உடனடியாகக் கவனிக்கா விட்டால் எவ்வளவுதான் அணையை மேலும் மேலும் போட்டுக் கட்டினாலுங் கூட 'ஹை லெவல் சானல்' ஆகப் போனால் வேகம் அதிகமாக இருக்கும், அதைத் தடைப்படுத்த முடியாது. 'வெண்ட்.' வழி யாய் தண்ணீர் போக முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, எல்லா 'வெண்ட்' களையும் அகலப்படுத்த வேண்டும், தண்ணீர் அதிகமாக வாங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

1-30 p.m.

தஞ்சை ஜில்லாவில் எல்லா ஆறுகளின் கரையோரங்களும் கரையாகவும், ரோடாகவும் இருக்கின்றன. அதெல்லாம் பி.டபிள்யூ.டி. மூலமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பி.டபிள்யூ.டி.-யும் ஹைவேசும் ஒரே மந்திரியின் பொறுப் பில் இருந்தும்கூட, நிலைமை மாறுதலடையவில்லை. பொறையார்- பெரம்பூர் ரோடுக்கு ஹைவேஸ் இலாகாவினர் கப்பி போட்டு விட்டார்கள். ஆனால், பி.டபிள்யூ.டி. 'பண்டு'-ஐ ஹைவேசுக்கு விட்டுக்கொடுக்க வில்லை. அதன் காரண மாக, ரோடு போட முடியாமல் பஸ் போக்குவரத்து நடைபெற முடியவில்லை. போக்குவரத்து வசதி இல்லாமல் ஜனங் கள் கஷ்டப்படுகிறார்கள். இதுபோன்ற சின்ன விஷயங்களை நாம் உடனடியாகச் செய்து விட்டால், அது பொது ஜனங்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். அந்த ரோடை நாம் புனரமைப் புத் திட்டத்திலே செய்வதற்கு வாய்ப்பு, வழிவகை இருக்கிறது.

என்டௌமென்ட் போர்டு மூலமாக அதிகமாக வரக்கூடிய வரு மானத்தை கல்விக்கு ஓரளவு ஒதுக்குவதாகச் சொல்லி, அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் பெருவாரி யான கோயில்கள் இன்றைக்கு இடிந்து போயிருக்கின்றன. இதற் குச் சொத்து கிடையாது. தமிழர்கள் கிட்டத்தட்ட 2,700 ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்தார்கள் என்று திருவள்ளுவர் சொல்கிறார் கள்; ஏடுகளிலிருந்தும் தெரியவருகிறது. அதை இன்றைக்கு நினைவு கூர்ந்து பார்க்கும்போது, இன்றைக்கு ஒரு பெரிய கலைச்செல்வமாக இருப்பதெல்லாம் கூட கோபுரங்களும், மாட மாளிகைகளுமாகும். அவைகளையெல்லாம் நாம் உடனடியாகக்

[Sri K. R. Sambandam] [25th April 1962

கண்காணிக்காவிட்டால், பின் சந்ததியார்கள் பார்க்கக்கூட முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அவைகளை யெல்லாம் பராமரிக்க வழிவகை செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களைப்பற்றி எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. போகப் போகத்தான் அவைகளுக்கு இன்னும் பரவலாக அதிகாரங்கள் கொடுக்கப்படப் போகின்றன. உயர்நிலைப் பள்ளியை நிர்வகிக்கும் பொறுப்பும் கொடுக்கப்படப் போவதாகத் தெரிகிறது. நானும் ஒரு எய்டெட் எலிமெண்டரி ஸ்கூல் வைத்து நடத்துகிறேன். சொந்த உயர்நிலைப் பள்ளிக்கூடமும் வைத்து நடத்துகிறேன். மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதிக மாகக் கொடுக்கப்பட்டவுடனே, பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை. எல்லா மானேஜ்மெண்ட் ஸ்கூல் நடத்து கிறவர்களும் கஷ்டப்படப்போகிறார்கள். ஆகவே, அந்த மாதிரி கஷ்டப்படுகிற நேரத்திலே உயர்நிலைப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே கொடுத்துவிட்டால், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் திண்டாடுகின்ற நிலை ஏற்படும். பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய வரிகளைக் கர்ணம், பட்டாமணி யக்காரர்கள் வசூல் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். அப் படி, 'bad debts' இப்பொழுது ஓரளவு வசூலிக்கப்பட்டு வரு கின்றன. ஆனால், மெஷினரி இன்னும் துரிதமாக வேலை செய்ய வேண்டுமென்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். வருஷா வருஷம் பஞ்சாயத்துக்குச் சேரவேண்டியதை வசூல் செய்தால் தான் அபிவிருத்தித் திட்டங்களை நாம் செய்ய முடியும். கடுமை யாக வசூல் செய்யத் திட்டம் இருக்கிறதே தவிர, மூன்று நான்கு வருஷங்களாக பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய வரியானது பாக்கி இருக்கிறது. மொத்தமாக ரூ. 15, ரூ. 20 என்று கேட்கும் போது கிராமவாசிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஓரளவு அவசரச் சட்டம் கொண்டுவரவேண்டும். மூன்று வருஷ, நான்கு வருஷ பாக்கியாக இருப்பதை நாம் உடனடியாக கட்ட வேண்டு மென்று சொல்லும்போது மக்கள் கஷ்டப்படுகிறார்கள். வீட்டைத் தவிர வேறு ஒன்றும் இல்லாத நிலையில் எப்படி பாக்கியைக் கட்ட முடியும்? அந்த நிலைமையைப் பரிசீலனை செய்யவேண்டும். உடனடியாக எல்லாவிதமான ரோடுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மைல் ரோடு தான் கப்பி போட முடி கிறது. என்னுடைய யூனியனை எடுத்துக் கொண்டால், தஞ்சை ஜில்லாவில் மலை கிடையாது. மருந்துக்குக் கூட மலையைப் பார்க்க முடியாது. தென்னார்காடு, திருச்சி ஜில்லாக்களிலிருந்து கப்பிகள் வரவேண்டும். ரோடு போடுவதென்றால் எந்த கண்டி ராக்டரும் ஒத்துக்கொள்வதில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் பல ரோடுகளை எடுத்துக்கொண்டும் வருஷத்திற்கு ஒரு பஞ்சாயத்து க்கு ஒரு மைலுக்குமேலே போட முடியவில்லை. மெயின்டினென்ஸ் செய்யமுடியவில்லை. அப்படியிருக்கும்போது ஹைவேஸ் ரோடு, டிஸ்ட்ரிக்ட் போர்டு ரோடு இவைகளும் பஞ்சாயத்து யூனியன் பராமரிப்புக்கு விடப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து யூனியனில்

25th April 1962] [Sri K. R. Sambandam]

பணம் இல்லாத காரணத்தால் செலவு செய்ய முடியவில்லை. ரோடிலே மனிதன் போக முடியாத நிலைமை ஏற்படுகிறது. இம்மாதிரியான சிக்கல் இருக்கிறது. இப்பொழுதுதான் பஞ்சாயத்துச் சட்டம் வந்திருக்கிறது. இன்னும் வளர வளர நமக்கு இன்னும் தேவையான காரியங்களை நாம் செய்ய முடியும் என்று சொல்லி, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned. 1-35 p.m.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

52. *Notification issued with G.O. Ms. No. 565, Revenue, dated 7th February 1962, amending the rule, published with Revenue Department Notification S.R.O. No. A-150 of 1960, dated 9th August 1960 at page 161 of Part V of the* Fort St. George Gazette, *dated the 10th August 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

B. Reports, Notification and other Papers.

22. *Assurance No. 1532, regarding answer to Legislative Assembly Starred Question No. 2255, put by Sri V. K. Kothandaraman on 12th December 1961 relating to particulars about training imparted in the Orientation and Study Centre, Mysore, for the trainees coming from the Madras State.*